

# ஞானச்சுடர்




தை 2016

217 ஆவது மலர்

ஓம் முருகா


வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

பொருள் : ஒருவன் பயனில்லாத சொற்களை விரித்துக் கூறும் கூற்றானது அவன் சிறப்புடையவனல்லன் என்பதை அறிவிக்கும்.

(193)

நயன்சாரா நன்மையின் நீங்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

பொருள் : ஒருவன் பலரிடத்துப் பயனில்லாத சொற்களைச் சொல்வான் ஆயின் அச்செயல் அவனைத் தீமையில் செலுத்திவிடும்.

(194)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



இலங்கை வேந்தன் இராவண னென்பான்
நலங்கொள் கயிலையை நாடி யெடுத்துக்
கலங்கின காரணங் கண்டு மடியேம்
நிலந்தனிற் றாழ்ந்துநீ ளகந்தை யகற்றுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 53

வடியார் சூலம் வலக்கர மேந்தி
இடியார் பேரொலி யெங்கு மார்ப்ப
அடியார் காணவன் றாடிய கூத்தை
அடியேங் காண வாசைகொள் வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 54

அழல்சேர் கையு மருவிபாய் சென்னியும்
கழற்கீழ் முயலகன் கலங்கும் வன்மையும்
இளநிலா வெறிப்பும் எடுத்தபொற் பாதமும்
பழவினை நீக்கும் பார்வையும் காணுதும்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 55

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 217

2016 தை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அரிய பணி ஆற்றிடும்... | இ. ஸ்ரீதரன் | 01 -02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 -06 |
| செம்பொருள்+துணிவு.... | முருகவே பரமநாதன் | 07 -09 |
| அருணகிரிநாதரின்... | க. நாகேஸ்வரன் | 10 -14 |
| பெற்ற தாயின் மாத்ரு பூஜை | திருமதி பொ. செல்வக்காந்திமதி | 15 -16 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 17 -19 |
| கடவுளை வழிபட வேண்டுமா? | செல்வி பா. வேலுப்பிள்ளை | 20 -22 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 23 -27 |
| கபீர்தாஸ் | அ. சுப்பிரமணியம் | 28 -30 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 31 -32 |
| சித்தம் அழகுறச் சிவப்பணி... | கே.எஸ். சிவஞானராஜா | 33 -34 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 35 -38 |
| ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின்... | நா. நல்லதம்பி | 39 -41 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 42 -44 |
| வினையும் விளைவும் | கு. சோமசுந்தரம் | 45 -47 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 48 -50 |
| அண்ணாமலையின் சிறப்பு | ஆர்.வீ. கந்தசாமி | 51 -52 |
| ஈழநாட்டில் இந்துமத... | த. துரைராஜா | 53 -55 |
| திருவாசக விழா | சந்நிதியான் ஆச்சிரமம் | -56 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 57 -62 |
| 2015இல் சந்நிதியான்... | தொகுப்பு | 63 -64 |
| தைப்பொங்கல் | சச்சிதானந்த ஐயர் | 65 -66 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 67 -68 |
| தமிழகத் திருக்கோயில் ... | வல்வையூர் அப்பாண்ணா | 69 -72 |


வருட சந்தா: 500/= (தபால் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

சிவமயம்

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி




1998ஆம் ஆண்டு தை மாதம் முதலாவது ஞானச்சுடர் மலர் வெளியீட்டின்போது நான் சொன்ன வாக்கியம் இன்னும் என் மனதில் பசுமை நிகழ்வாக இருக்கின்றது. அது என்னவெனில் இவ்வகையான சமயம் சார்ந்த மலர் வெளியீடுகள் காலவோட்டத்தில் அடிபட்டு முற்றாக செயலிழந்து விடுவது கண்கூடு. அப்படியான நிலைக்கு ஞானச்சுடர் வெளியீடு ஆட்படாமல் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்ற எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருந்தேன்.

அந்த எண்ணம் பேரவையினரின் செயற்பாட்டிற்கு வலுச் சேர்த்ததோ என்று எண்ணும் வகையில் இன்று இம்மலர் பத்தொன்பதாம் ஆண்டில் காலடி வைப்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம். இவற்றிற்கு உந்து சக்தியாக சந்நிதி வேலன் ஆச்சிரம சுவாமி அவர்களை முன்னிலைப்படுத்தியதோடு இம்மலர் தொடர்ந்து வெளிவர வேண்டும் என ஆசிகூறி நிறைவு செய்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்.

# வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச் செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மீகச் சஞ்சிகையான ஞானச்சுடர் மாத இதழ் தனது 18ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 19ஆவது அகவையில் தடம்பதிப்பதையிட்டு நான் பேருவகை அடைகின்றேன்.

மேலும் ஞானச்சுடரின் கட்டுரைகளும், ஆக்கங்களும் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்து மக்கள் மனங்களில் நீங்காத இடம் பெற்றிருப்பதை எவரும் மறுக்க முடியாது.

அத்துடன் மாதந்தோறும் புத்தம் புதிய ஆக்கங்களையும், கட்டுரைகளையும் தாங்கி 16ஆவது வயது பருவமங்கை போன்று வலம் வருவது சந்நிதியானின் பேரருளாகும்.

இத்தருணத்தில் ஞானச்சுடர் ஆன்மீக மலர் இன்னமும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி எனது உள்ளார்ந்த ஆசிகளை வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
"வாழ்க வளமுடன்"
"சுபம் - மங்களம்"

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை போஷகருமாகிய
*சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்* J.P
குருப்பட்டாபிஷேக ஞானகுருபானு
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.
ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவும்
புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயம்

# சந்நிதியான் ஆச்சிரம போஷகரின் உள்ளத்திலிருந்து...



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலரானது தனது 18ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 19ஆவது அகவையிலே காலடி எடுத்து வைப்பதையிட்டும், சந்நிதியான் ஆச்சிரமம் அன்ன தானப் பணியுடன் பலவித சமய சமூகப் பணிகளை முன்னெடுத்து அவ்வித செயற்பாட்டின் தன்மை வளர்ந்து வருவதுபோல் ஞானச்சுடர் மலரின் வளர்ச்சியும் மேலோங்குவதையுமிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம்.

19 வருடம் ஒரு சமயம் சம்பந்தமான மலர் வெளிவருவதென்பது இலகுவான காரியமல்ல. சந்நிதி வேலவனது திருவருளும், ஆச்சிரம சுவாமிகளின் விடாமுயற்சியும் தான் காரணம் என்று கூறவேண்டும். தொடர்ந்தும் இம்மலர் மாதந் தவறாது பிரகாசிக்கவேண்டும் என்பதோடு ஆச்சிரமத்தினால் செய்யப்படும் பல பணிகளும் மென்மேலும் பெருக வேண்டும் என சந்நிதி வேலவனை வேண்டி என் ஆசியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிரியா க்ரம ஜோதி. கிரியா கலாப முக்தாமணி
*சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்*
பிரதமகுரு
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம்.
வல்வெட்டித்துறை.

# வாழ்த்துச்செய்தி



வாடுகின்ற அடியவர் தம் வருத்தமெல்லாம் அகன்றிடவே
கூடுகின்ற கார்முகிலில் குளித்தெழும் செம்பருதியென
ஆடுகின்ற மயில்மீது அழகு நடம் புரிவோனை
நாடிச் செல்வ சந்நிதியில் நாளும் நாம் காணலாமே.

சித்தர்களும் முக்தர்களும் நிறைந்த புண்ணிய பூமியாக விளங்குவது செல்வச்சந்நிதிச் சூழல்.

இச்சூழலைத் தளமாகக் கொண்டு "சந்நிதியான் ஆச்சிரமம்" பல்லாண்டு காலமாக பல்துறை சார்ந்த பெரும்பணியாற்றி வருகின்றது.

உலகப் பிரசித்தமான இந்த மஹோன்னத பணிகளை அறியாதார் இலர்.

நம் சமயிகள் அறப்பணிகளில் ஆர்வம் காட்டுவதில்லை என்று எழுந்தமானமாக பேசுபவர்கள் இத்தகு பணிகளை அறிந்தால் வெட்கமுறுவர்.

அன்னப்பணி தொட்டு அறிவுப்பணி, மருத்துவப்பணி, இடர் நிவாரணம், ஆதர வற்றோர் நலம் பேணல் என்று விரிகிற இந்தப் பணிகளில் சிறப்பான ஒன்று ஞானச்சுடர் மாத சஞ்சிகை வெளியீடு.

பல்லாண்டாக இடையறா வெளியீடாக ஞானச்சுடர் வெளிவருவது சந்நிதியாண்ட வனின் கருணையே.

சிறந்த குருபக்தி மிக்கவரான சுவாமி மோகனதாஸ் அவர்களும் அவரது குழுவினரும் செய்துவரும் இப்பணிகளை கண்டவர் வியப்பதில் ஆச்சர்யம் என்ன?


இப்பணிகள் இன்னும் சிறப்புற நம் வழிபடு தெய்வமான நீர்வை செல்லக் கதிர்காம செவ்வேள் திருவடிகளை சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

"தர்மோ ரக்ஷதி: ரக்ஷித"

"நீர்வை மணி" சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள்,
பிரதமகுரு:
செல்லக்கதிர்காம முருகன் தேவஸ்தானம்,
நீர்வேலி.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர்
## திரு ச.லலீசன் அவர்கள் வழங்கிய

# பிரார்த்தனை உரை



ஞானச்சுடர் ஆன்மீகச் சஞ்சிகை பத்தொன்பதாவது அகவை காண்பதை இட்டு மகிழ்வடைகின்றேன். இலங்கையில் தோன்றிய முதலாவது ஆன்மீகச் சஞ்சிகை என்ற பெருமை இந்து சாதனத்திற்கே உள்ளது. 1889 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 முதல் யாழ்ப்பாணத்தில் இருந்து இப்பத்திரிகை வெளிவந்தது. காலவோட்டத்தில் அள்ளுண்டு தற்போது இப்பத்திரிகை வெளியீடு இடைநிறுத்தப்பட்டிருப்பது துரதிஷ்டமேயாயினும் ஒரு சமய இதழை முற்கொண்டு செல்வதில் உள்ள இடர்ப்பாடுகள் இதனுள் கரந்து நிற்கின்றன.

யுத்த காலத்திலும் சரி, தற்போதும் சரி ஞானச்சுடர் வெளியீடு இடையீடின்றித் தொடர்கின்றதென்றால் அது சந்நிதி வேலவனின் பேரருளேயன்றி வேறொன்றுமில்லை என்பதை அனைவரும் அறிவர். அவ்வேலவனின் இயக்க சக்திகளாக ஆச்சிரம சுவாமிகளும் பேரவையினரும் ஆச்சிரமத் தொண்டர்களும் விளங்குகின்றனர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வளர்க்கப்பட்டவர்களுள் நானும் ஒருவன் என்பதைப் பெருமையுடன் எண்ணிப் பார்க்கின்றேன். எனது சொற்பொழிவுகளுக்குத் தளம் அமைத்துத் தந்ததுடன் ஆன்மீகம் சார்ந்த எனது எழுத்துக்களைப் பிரசுரிப்பதிலும் பேரவையினர் களம் அமைத்துத் தருகின்றனர்.

ஞானச்சுடரின் பெருமை இன்று உலகளாவிய நிலையில் பரந்துள்ளதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. சில காலங்களுக்கு முன்னர் நீர்வை தியாக. மயூரகிரிக் குருக்கள் (சித்தியடைந்த) திருவாவடுதுறை ஆதீன முதல்வர் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்தித்தபோது இலங்கையின் ஆன்மீகச் செயற்பாடுகள் பற்றிக் கேட்டறிந்து கொண்டாராம். அத்துடன் தான் தவறாமல் சந்நிதியானின் ஞானச்சுடர் ஆன்மீகச் சஞ்சிகையைப் பெற்று வாசிப்பதாகவும் தெரிவித்திருந்தாராம். இவ்வாறு அடிநிலை மக்கள் முதல் உயர்நிலை ஞானியர்வரை சென்றடையும் சஞ்சிகையாக ஞானச்சுடர் மிளிர்கின்றது என்பது நாமெல்லோரும் பெருமைப்படக்கூடிய விடயம் ஆகும்.

ஞானச்சுடரை வாசிப்போருள் பெரும்பகுதியினர் முதியவர்களாக இருக்கின்றனர் என்பது எனது அவதானிப்பு. இச்சஞ்சிகை இளையோரைக் கவரத்தக்க வகையில் தனது வடிவமைப்பை மாற்ற வேண்டும் என்ற எனது அவாவினையும் இச்சந்தர்ப்பத்தில் முன்மொழி கின்றேன். இதற்கு நான் உட்பட பங்களிக்கத்தக்கவர்களின் செயற்பாடுகள் நிச்சயம் உதவும் எனவும் எண்ணுகின்றேன்.

சந்நிதியானின் சித்தம் எதுவோ அதுதானே செயலுருப் பெறும். சென்றகாலத்தின் பழுதிலாத் திறத்தின் பெருமையை எண்ணும் அதேவேளை இனிவருங்காலமும் சிறப்புற அமையப் பிரார்த்திக்கின்றேன்.

# ஞாலமதில் தீபமாய் ஒளிரும் ஞானச்சுடரே... உன் அகவை 18இன் பூர்த்தியினை வாழ்த்துகிறேன்! வணங்குகிறேன்!!

மனித வாழ்வில் அகவை பத்தொன்பது என்பதோர் மிடுக்கான பருவம். அஃது போல் ஞானச்சுடரின் அகவையும் சேவையும் மிடுக்குடனாய் விளங்குகின்றது. பாலகனாய் இருக்கையில் வெள்ளை அட்டையும் வளர்ச்சி நிலையில் மஞ்சளுமாய் இருந்து இன்று பல வர்ணம் கொண்ட அட்டையில் அலங்காரம் பெற்று, உள்ளீடாய் உன்னத பொருளடக்கத்துடன் வெளிவரும் ஞானச்சுடரே உன்னை வாழ்த்துகிறேன்.


சமகால வெளியீடுகள் பொருள் பொதிந்த பல்பரிமாண சமயக் கட்டுரைகளையும் கவிதைகளையும் தாங்கிவரும் நிலை அறிவுலகிற்கோர் உன்னத விருந்தாக அமைகிறது. பயணக் கட்டுரைகள் குறிப்பாக கதிர்காமம், தென்னிந்திய ஆலயங்களுக்கான பக்திச் சுற்றுலாக்கள் பற்றிய செய்திகள் அடியவர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் அற்புத செய்திகளைக் காட்சிப்படுத்துவதாக அமைவதோடு படிப்போரது உள்ளுணர்வை உயிர்ப்பிப்பதாயும் விளங்குகின்றன.

எனது பெருமதிப்பிற்குரிய மோகனதாஸ் சுவாமிகளும் ஆச்சிரமப் பேரவையினரும் சமயம்சார் சஞ்சிகை ஒன்றினை மாதம் தவறாது வெளியிடுவதில் எதிர்நோக்கும் இடர்பாடு களை ஆசிரியன் ஆகிய நான் நன்கு அறிவேன். இந்நிலையைப் போக்கிட அடியவர்களும் ஆர்வலர்களும் இந்நூலை வாங்கியும், பெருநிதியையும், பேருதவியையும் வழங்கியும் உதவிட வேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

உதவிகள் மேலோங்குகையில் மேன்மைகொள் சைவநீதி உலகம் எல்லாம் விளங்கும். அன்னப்பசியும், அறிவுப் பசியும் அகலத் தொடரும் சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளுக்கு சந்நிதி முருகன் வாரி வழங்க வேண்டும் எனப் பிரார்த்தித்து, ஞானச்சுடரே வாழ்க! வளர்க!! என வாழ்த்துகிறேன்.

பேராசிரியர்
*திரு க. சிவானந்தமூர்த்தி*
ஈஸ்வரி புரி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

# ஞானச்சுடரே ஞாயிறுபோல் என்றென்றும் வாழி! வாழி!!



இன்றைய உலகில் சைவத்தின் நிலையானது வெறும் மாயையினால் மறைக்கப்பட்டு வெளி ஆரவாரங்களைத் தன்னகத்தே கொண்டு தடுமாறி நிற்கிறது. ஆலய வழிபாடும், அதன் மகத்துவமும் ஆலயத்தின் மேன்மையும் புனிதமும், சமயத்தின் பொருளும் உயர்வும் எல்லாம் திரிபடையப்பட்டு மாறுபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது. இத்தகைய அவலச் சூழலில் ஞானம் எனும் சுடரேற்றி ஞாலத்தில் இருளகற்றி நிற்கும் ஞானப்பனுவலின் மேன்மையை எவ்வாறு எடுத்தியம்புவது?

சைவ சமயத்தின் மேன்மையை வெளிக்கொணர்ந்து பரிணமிக்கத்தக்க வகையில் ஞானச்சுடர் வெளிவர வேண்டுமென்பதே ஆச்சிரம சுவாமிகளின் நோக்காக அமைந்தது. அதற்கமைவாகச் சமயத்தின் சாராம்சங்களை உள்ளடக்கியதாகச் சுடர் வெளிவரத் தொடங்கியது. ஆரம்பத்தில் சில ஆக்கங்களுடன் குறைந்த அளவான பிரதிகளுடன் வெளிவந்த ஞானச்சுடர் இன்று உலகளாவிய ரீதியில் ஆண்டு பத்தொண்பதில் ஒளிவீசிக்கொண்டிருக்கிறது என்றால் இதன் காரணம் உற்றுநோக்கத்தக்கது. சுடரில் உள்ளடங்கியதான விடய தானங்களின் உண்மைத் தன்மையான மேம்பாடே இதன் காரணமாக விளங்குகிறது.

அறிவுசார் பெரியோர்களின் மேன்மையான படைப்புக்களுடன், இளந் தலைமுறையினரின் ஆக்கங்களையும் வெளிக்கொணரும் முறையானது இளந்தலைமுறையினரை ஊக்குவிப்பதுடன் அவர்களின் சமய ஈடுபாட்டை வளர்ப்பதற்கான வாய்ப்பையும் நல்குகின்றது. இந்நிலை சமய வளர்ச்சியின் ஒரு படிக்கட்டாக அமைந்துள்ளது. இன்னொரு புறம் நோக்கில் ஆன்றோர் ஞானிகளின் வரலாறு, ஞான நூல்கள் பற்றிய விளக்கங்களும் செய்திகளும், ஆலய தரிசனம் பற்றிய பல செய்திகளும் இச்சுடர்மூலம் எம்மால் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. மேன்மையான சைவ சமயத்தின் நிலைநிறுத்தலுக்கு காரணமாக அமைந்துள்ள ஞானச்சுடரானது ஞாலம் உள்ளளவும் வெளிவந்து பிரகாசிக்க எம் குருநாதன் அருள்மிகு செல்வச்சந்நிதி வேலவனை மனமாரப் பிரார்த்திக்கின்றோம்.

சிவானந்த வாரிதி,

*சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்*

# ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

மார்கழிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை குப்பிளான் கிராம சேவையாளரும், சமூக சேவையாளருமான திரு சோ. பரமநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தமதுரையில், சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பல அறப்பணிகளின் பலா பலன்களை சபையில் இருந்தோர்க்கு விளக்கிக் கூறியதோடு, இவ்வகைச் செயற்பாட்டின்மூலம் ஆச்சிரமம் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து வருவது கண்கூடு. அவ்வகையில் இந்த ஞானச்சுடர் மலர் வெளியீடு ஒரு காத்திரமான பணி. அப்பணியையும் இலகுவான முறையில் செயலாற்றிக் கொண்டு இருப்பது சந்நிதி வேலவனது பெருங்கருணை என்றே கூறவேண்டும். இதனடிப் படையில் வருடத்தில் ஒருமுறை இம்மலர் வெளியீட்டில் பங்குபற்றி அதனூடாக சந்நிதியானை வழிபடவும் வழிவகுக்கிறது என்று கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

216ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளராகிய திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

ஆச்சிரமமானது சமய சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதன்மூலம் தனது சேவையை விரிவுபடுத்தி தற்போது மலையகப் பகுதிகளில் உள்ள மக்கள் மனதையும் ஆட்கொண்டுவருவது போற்றத்தக்க விடயம். இதனடிப்படையில் ஆச்சிரமம் சார்ந்தோருக்கு நன்றிகூறவேண்டிய கடமைப்பாடு எமது சமூகத்திற்கு கட்டாய தேவையாக உள்ளது. இவர்கள் மலையகத்தில் ஆற்றும் பணிகள்மூலம் யாழ்மண் பெருமை பெறுகிறது என்னும் கருத்தமைந்த வகையில் அவரது உரை அமைந்திருந்தது.

இறுதியாக ஞானச்சுடர் மலரில் வெளிவந்த ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறி இவ்வகையான செயற்பாடுகளுக்கு சந்நிதி வேற்பெருமானின் கருணை மேன்மேலும் பெருகவேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் சார்பாக 1998 தை மாதத்தில் "ஞானச்சுடர்" ஆன்மிக சஞ்சிகையின் முதற் பிரதி வெளியானது. இன்று ஆண்டு பதினெட்டு கடந்து பத்தொன்பதாவது ஆண்டினில் காலடி வைக்கிறோம். சில அசாதாரண சந்தர்ப்பங்களில் மட்டும் "ஞானச்சுடர்" வெளியீட்டு தேதிகள் மாற்றம் பெற்றனவே தவிர, ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளியன்றும் "ஞானச்சுடர்" வெளியாகியமை வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

சமயம் சார்ந்த கட்டுரைகள் - கவிதைகள் தவிர வேறு எதனையும் உள்வாங்காமல், மக்களின் ஆன்மிக ஈடேற்றம் ஒன்றையே நோக்காகக் கொண்டு வெளிவரும் ஞானச்சுடரின் 217ஆவது மலர் - அழகுற வடிவமைக்கப்பட்ட புதிய அட்டைப் படம் தாங்கி உங்கள் கைகளில் இன்று தவழ்கிறது.

சந்நிதியான் ஆச்சிரமத்தினதும் - சைவ கலை பண்பாட்டுப் பேரவையினதும் ஒவ்வொரு நிகழ்ச்சியினையும் - கடமையினையும் ஒழுங்குபடுத்தி நிறைவேற்றி வைக்கும் சந்நிதி வேலவனின் அருட்கடாட்சமே நமது வெற்றிக்குத் துணை நிற்கிறது.

அன்பான வாசகர்களே! எதிர்காலத்திலும் இன்னும் சிறப்பாக நாம் பணியாற்ற என்றும் எம்மோடு இணைந்திருங்கள். "ஞானச்சுடர்" வாசகர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரியதாகுக.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

## I. காப்புப் பருவம்

### துர்க்கா தேவி

(தொடர்...

ஓது நவ ராத்திரியா
முயர்நாளில் நோன்பிருந்
தொரு கொடிய மகிடன் தன்னை
ஒப்பிலாச் சிங்கேற்றின்
உவந்து முதுகமர்ந்தேறி
உற்றுச் சினங் கொண்டு மேவி
வாது செயு மவ்வசுரன்
வாடடவே கரங்கொண்ட
வலிய வொரு சூலத் தடர்த்தே
வதையாயவ் வசுரனை
மடக்கியே தாளிட்ட
மகா துர்க்கா வுனை வேண்டினேன்
சோதியாய்ச் சரவணம்
நின்றுவிளை யாடிடும்
சுந்தரச் சிறா ரறுவரைச்
சுற்றியுமை யணைத் திட
அற்புதத் தாறுமுகங்
கொண்டுபன் னிருகரமுமாய்
பேதியா திருகாலும்
அழகுமுக மோடெங்கும்
பிறங்கயில் வேற்பிள்ளையை
பெருஞ் செல்வச் சந்நிதியில்
இருந்தரசு ஒச்சுமுயர்
பெருமாளைக் காக்க வென்றே.

-அமரர்: முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

## மக்கள் வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| திரு சி. பத்மநாதன் | (பிரதேச முகாமையாளர்) |
| திரு வ. சண்முகநாதமுதலி | (முகாமையாளர்) |
| திரு ந. நாகேஸ்வரன் | (உதவி பிரதேச முகாமையாளர்) |
| திரு இ. யோகராசா | (முகாமையாளர்) |
| திரு தி. சிவகுமாரன் | (முகாமையாளர்) |
| திரு க. சண்முகலிங்கம் | (முகாமையாளர்) |
| திரு இ. சிவஞானசுந்தரம்பிள்ளை | (முகாமையாளர்) |
| திருமதி S. விஜயகுமார் | (அந்தரங்க காரியதரிசி) |
| திரு பி. கிருஷ்ணானந்தன் | (முகாமையாளர்) |
| திரு து. பாலேந்திரா | (முகாமையாளர்) |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | (முகாமையாளர்) |
| திரு த. சிவகுமார் | (முகாமையாளர்) |
| திரு கி. அமிர்தலிங்கம் | (உத்தியோகத்தர்) |
| திரு எஸ். இராஜேந்திரம் | (பிரதி முகாமையாளர்) |
| திரு க. ஞானசீலன் | (பிரதி முகாமையாளர்) |
| திரு பொ. தங்கராஜா | (பிரதி முகாமையாளர்) |
| திரு க. ஞானச்சந்திரன் | (உத்தியோகத்தர்) |
| திரு க. ஸ்ரீதரன் | (உத்தியோகத்தர்) |

## மக்கள் வங்கி யாழ். பிரதேச அலுவலகம்

| | |
|---|---|
| திரு க. சுசீந்திரன் | (பிரதேச முகாமையாளர்) |
| திரு ப. உதயணன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ர. பரந்தாமன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி க. பீஷ்மன் | (பிரதி முகாமையாளர்) |
| திரு ந. தனேஸ் | (பிரதி முகாமையாளர்) |
| திரு சி. கோபிகிருஷ்ணா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ஞானேஸ்வரி செல்வராசா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி வி. பிரியகாந்தினி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி புஷாளினி | (பிரதி முகாமையாளர்) |
| திரு ஆர். பாஸ்கரநாதன் | (பாதுகாப்பு உத்தியோகத்தர்) |
| திரு த. தவேந்திரராஜா | (பாதுகாப்பு உத்தியோகத்தர்) |
| திரு வி.கே. அரசரெத்தினம் | (பாதுகாப்பு உத்தியோகத்தர்) |
| திரு வி. வேணுகோபன் | (உத்தியோகத்தர்) |
| திரு இ. ஜெயகாந்தன் | (உத்தியோகத்தர்) |

## மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி

| | |
|---|---|
| திரு ஆ. சத்தியமூர்த்தி | (முகாமையாளர்) |
| திரு கு. வெங்கடேஸ் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி சு. வனஜா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி மோ.ப. ஜெயாநந்தி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி சி. கீர்த்திகா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி பி. ஜனனி | (உதவி முகாமையாளர்) |
| திருமதி ப. ஸ்ரீவித்யா | (உத்தியோகத்தர்) |
| திருமதி ச. சியாமளா | (உத்தியோகத்தர்) |
| திருமதி இ. பத்மகலா | (உத்தியோகத்தர்) |
| திரு ச. சுயன் | (உத்தியோகத்தர்) |
| திருமதி இ. சுமணா | (உத்தியோகத்தர்) |
| திருமதி க. செல்வமலர் | (உத்தியோகத்தர்) |
| திரு சி. ரஜீவன் | (உத்தியோகத்தர்) |
| திருமதி ஜீ. சயந்தினி | (உத்தியோகத்தர்) |
| திருமதி ஜெ. சயந்தினி | (உத்தியோகத்தர்) |
| திருமதி உ. குகன்யா | (உத்தியோகத்தர்) |
| செல்வி சுகிர்தகுமாரி | (உத்தியோகத்தர்) |
| திரு த. ஜெயபிரதாப் | (உத்தியோகத்தர்) |
| செல்வி இ. ஜமுனாவாணி | (உத்தியோகத்தர்) |
| செல்வி சு. மைவிழி | (உத்தியோகத்தர்) |
| திரு ஞா. யுகதாஸ் | (உத்தியோகத்தர்) |

## மக்கள் வங்கி - யாழ். பிரதான வீதி

| | |
|---|---|
| திருமதி ந. கிருஷாந்தி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி இசைவாணி | (உதவி முகாமையாளர்) |
| திரு K. லதிகரன் | (உத்தியோகத்தர்) |
| திரு க. கமலக்ஷன் | (உத்தியோகத்தர்) |
| திருமதி தி. வானதி | (உத்தியோகத்தர்) |
| திருமதி T. அனுஜா | (உத்தியோகத்தர்) |
| செல்வி எஸ். சிந்துஷா | (உத்தியோகத்தர்) |

## மக்கள் வங்கி சுன்னாகம்

| | |
|---|---|
| திரு ப. பார்த்தீபன் | (முகாமையாளர்) |
| திரு பி. தேவநேசன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி சு. யாழினி | (பிரதி முகாமையாளர்) |
| திரு ச. கெங்காதரன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி உ. தனுஸ்யா | (பிரதி முகாமையாளர்) |

| | |
|---|---|
| திருமதி பு. கிருபாளினி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ஜெ. பகீரதி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி கி. மனஸ்வினி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி செ. உஷாந்திகா | (உத்தியோகத்தர்) |
| திருமதி செ. உஷாநந்தினி | (உத்தியோகத்தர்) |
| செல்வி த. சசிதேவி | (உத்தியோகத்தர்) |
| திரு கோ. அஜந்தன் | (உத்தியோகத்தர்) |
| திரு ம. லம்போதரன் | (உத்தியோகத்தர்) |
| திரு இ. ஆனந்தராசா | (உத்தியோகத்தர்) |
| திரு S. ஜனாங்கனன் | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - சங்கானை**

| | |
|---|---|
| திருமதி கோ. பிரதக்ஷி | (பிரதி முகாமையாளர்) |
| திரு செ. உமாசங்கர் | (உதவி முகாமையாளர்) |
| திருமதி ப. பிரதீபா | (உதவி முகாமையாளர்) |
| திருமதி ப. சுதர்சினி | (உதவி முகாமையாளர்) |
| திருமதி அ. சுகன்யா | (உத்தியோகத்தர்) |
| செல்வி மு. ஹேமப்பிரியா | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி- யாழ். பல்கலைக்கழகம்**

| | |
|---|---|
| திரு க. ரமேஷ்நேசன் | (முகாமையாளர்) |
| திருமதி சி. தமயந்தி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி S. சிந்துளா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி S. வித்யா | (உத்தியோகத்தர்) |
| திரு R. செந்தூர் | (உத்தியோகத்தர்) |
| செல்வி இ. கீர்த்திகா | (உத்தியோகத்தர்) |
| செல்வி க. சரண்யா | (உத்தியோகத்தர்) |
| திரு இ. சந்திரகோபன் | (உத்தியோகத்தர்) |
| திரு தே. ரஜீவன் | (உத்தியோகத்தர்) |
| செல்வி க. சுமித்திரா | (உத்தியோகத்தர்) |
| செல்வி ந. ஜிரானு | (உத்தியோகத்தர்) |
| திருமதி ல. நிஷங்கா | (உத்தியோகத்தர்) |
| திருமதி உ. துளசிதா | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி- யாழ். கன்னாதிட்டி**

| | |
|---|---|
| திருமதி ச. நீரஜா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி ஜசிகா | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி பா. சுபாஜினி | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி எஸ். லாவண்யா | (உத்தியோகத்தர்) |

திரு தெ. ஹர்சன் (உத்தியோகத்தர்)
செல்வி நா. கிருஷிகா (உத்தியோகத்தர்)
திரு S. ராஜாராம் (உத்தியோகத்தர்)
திரு S. ஸ்ரீரங்கநாதன் (உத்தியோகத்தர்)
செல்வி L. மயூரி (உத்தியோகத்தர்)
செல்வி S. நேமினா (உத்தியோகத்தர்)
திரு A.P. சஞ்சிவ் (உத்தியோகத்தர்)

**மக்கள் வங்கி - சாவகச்சேரி**

திரு க. விஜயகுமார் (முகாமையாளர்)
திருமதி கா. மீரா (பிரதி முகாமையாளர்)
திரு பா. சீராளன் (பிரதி முகாமையாளர்)
திரு என். சஞ்சீவ் (உத்தியோகத்தர்)
செல்வி ஞா. அனோஜா (உத்தியோகத்தர்)
திருமதி சி. பானுஜா (உத்தியோகத்தர்)
திரு பா. பிறேம்லால் (உத்தியோகத்தர்)
திருமதி ப. உஷா (உத்தியோகத்தர்)
செல்வி C. பபீதா (உத்தியோகத்தர்)
செல்வி K. ஜனனி (உத்தியோகத்தர்)
திருமதி இ. ஆர்த்திகா (உத்தியோகத்தர்)

**மக்கள் வங்கி - கொடிகாமம்**

திரு M. மாலவன் (முகாமையாளர்)

**மக்கள் வங்கி - அச்சுவேலி**

திரு எஸ். சிவகுமார் (பிரதி முகாமையாளர்)
திரு க. கணேசவேல் (உதவி முகாமையாளர்)
திரு ச. கிரீடன் (உத்தியோகத்தர்)
செல்வி சி. துவாரகா (உத்தியோகத்தர்)
செல்வி இ. சசிதா (உத்தியோகத்தர்)
செல்வி பி. ஜிந்துஜா (உத்தியோகத்தர்)

**மக்கள் வங்கி - பருத்தித்துறை**

திரு க. வாசு (முகாமையாளர்)
திருமதி ச. கிருத்திகா (பிரதி முகாமையாளர்
திரு அ. ஹரிகேசன் (பிரதி முகாமையாளர்)
திருமதி வை. மனோஜா (உதவி முகாமையாளர்)
திருமதி அ. மீரா (உத்தியோகத்தர்)
செல்வி க. சுபாசினி (உத்தியோகத்தர்)

| | |
|---|---|
| திரு க. கலையரசன் | (உத்தியோகத்தர்) |
| திரு சி. சசீவன் | (உத்தியோகத்தர்) |
| திருமதி பிரசாந்தினி | (உத்தியோகத்தர்) |
| திருமதி உதயசாந்தினி | (உத்தியோகத்தர்) |
| திரு இ. இளங்குமரன் | (உத்தியோகத்தர்) |
| செல்வி உ. அர்ச்சனா | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - நெல்லியடி**

| | |
|---|---|
| திரு சி. பகீரதன் | (பிரதி முகாமையாளர்) |
| திரு வி. ஜெயமோகன் | (உதவி முகாமையாளர்) |
| திரு இ. வாகீசன் | (உத்தியோகத்தர்) |
| திருமதி எஸ் ராதிகா | (உத்தியோகத்தர்) |
| செல்வி எம். சுபேந்தினி | (உத்தியோகத்தர்) |
| செல்வி இ. அஞ்சனா | (உத்தியோகத்தர்) |
| திரு த. ரஜிந்தன் | (உத்தியோகத்தர்) |
| திரு கா. துவிதரன் | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - வல்வெட்டித்துறை**

| | |
|---|---|
| திரு S. சர்வானந்தன் | (முகாமையாளர்) |
| திருமதி ஸ்ரீகாந்தநிர்மலா நிமலேந்திரன் | (பிரதி முகாமையாளர்) |
| திருமதி க. சுகந்தி | (பிரதி முகாமையாளர்) |
| செல்வி சவுந்தர்ராஜன் யாழினி | (உத்தியோகத்தர்) |
| திருமதி மு. தர்ஷிகா | (உத்தியோகத்தர்) |
| திரு S. மனோராஜ் | (உத்தியோகத்தர்) |
| திரு ஆ. பரணன் | (உத்தியோகத்தர்) |
| செல்வி இ. வாகினி | (உத்தியோகத்தர்) |
| செல்வி சி. பிரசாந்தினி | (உத்தியோகத்தர்) |
| திருமதி ஜெ. நிமலினி | (உத்தியோகத்தர்) |
| திருமதி சு. மாதங்கி | (உத்தியோகத்தர்) |
| திருமதி த. சங்கீதா | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - காங்கேசன்துறை**

| | |
|---|---|
| திரு தெ. ஆனந்த் | (பிரதி முகாமையாளர்) |

**மக்கள் வங்கி - முல்லைத்தீவு**

| | |
|---|---|
| திரு க. லிங்கராஜ் | (உத்தியோகத்தர்) |
| திரு ந. கோபி | (உத்தியோகத்தர்) |

**மக்கள் வங்கி - வவுனியா**

திரு கு. கோடீஸ்வரன் (முகாமையாளர்)

**மக்கள் வங்கி - பிரதேச தலைமை அலுவலகம்**

திரு சி. நித்தியானந்தன் (உதவிப் பிரதேச முகாமையாளர்)

**மக்கள் வங்கி - பரந்தன்**

திரு க. சிறீதரன் (முகாமையாளர்)
திரு க. தேவராஜா (உத்தியோகத்தர்)
திரு பொ. ஜெகதீசன் (உத்தியோகத்தர்)
திரு க. கோகுலன் (உத்தியோகத்தர்)
ம. அகிலா (உத்தியோகத்தர்)
தி. லதாஜினி (உத்தியோகத்தர்)
எஸ். பத்மினி (உத்தியோகத்தர்)

**மக்கள் வங்கி - செங்கலடி**

திரு எஸ். சிவஞானராஜா (இளைப்பாறிய முகாமையாளர்)
செல்வி வ. கனகசபை (முகாமையாளர்- காரைதீவு)

**மக்கள் வங்கி - திருமலை பிரதேச அலுவலகம்**

திரு A. ஐங்கரன் (பிரதி முகாமையாளர்)

**மக்கள் வங்கி - திருமலை நகரக்கிளை**

திரு ம. பிரேம்குமார் (முகாமையாளர்)
திரு எஸ். துஷாந்தன் (உத்தியோகத்தர்)

**மக்கள் வங்கி - திருமலை**

திருமதி K. வைஜெயந்தி (பிரதி முகாமையாளர்)
திருமதி ம. கிருஷ்ணானந்தி (பிரதி முகாமையாளர்)
திருமதி S. நிதர்ஷினி (பிரதி முகாமையாளர்)

**மக்கள் வங்கி - சேருநுவர**

திரு க. மதிவதனன் (முகாமையாளர்)

**கொமர்ஷல் வங்கி**

செல்வி சரண்யா சத்தியநாதன் (ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்)

குகஞானலிங்கம் தனுஷன்
(கனடா)
S. திருநாவுக்கரசு
(அச்செழு, நீர்வேலி)
E. செல்வேஸ்வரன்
(பாட்டா பாதணி முகவர், திருமலை)
திருமதி C. சிவலிங்கம்
(கனடா)
த. கணேசமூர்த்தி
(இளநிலை அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
தம்பையா புவனேந்திரன்
(முகாமையாளர் இலங்கை வங்கி, அச்சுவேலி)
திருமதி K. பால்ராஜ்
(சபாபதிவீதி, வண்ணார்பண்ணை கிழக்கு)
பொ. பாலசிங்கம்
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
செல்வி ஹரினி ஹரிதரன்
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
செல்வி ஹம்ஷாலினி ஹரிதரன்
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
பா. இராசேந்திரம்
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)
செ. மதியாபரணம்
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
நீ. சுப்பிரமணியன்
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)
செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்
(நாவலடி, உடுப்பிட்டி)
வே. இரத்தினசிங்கம்
(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)
சி. கணேசலிங்கம்
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
உரிமையாளர்
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)

சிவஞானம் கிருபாகரன்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
மு. சரவணபவான்
(கலைமகள் விலாஸ், சங்கானை)
செல்வி நா. ஜெயராணி
(அதிபர், யா/ சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலை)
இ. கோபாலசுந்தரம்
(சதா வெதுப்பகம், உரும்பராய்)
J. பிரபாகரன் மாஸ்ரர்
(நெல்லியடி)
க. நாகராசா
(காங்கேசந்துறை)
இ. சொக்கலிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)
கு. கங்கைவேணியன்
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
ந. சத்தியரூபன்
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
க. சோமசேகரம்
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)
ஐ. சிவகுமார்
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)
திருமதி வ. தபேந்திரன்
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)
க. இராசநாயகம்
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)
R.S. தனபாலன்
(பாலன் மில், வட்டுக்கோட்டை)
சி. சச்சிதானந்தம்
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)
உரிமையாளர்
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
வே. பொன்னம்பலம்
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)

உரிமையாளர்
(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)
வல்லிபுரம் சிவகுமாரன்
(சங்கானை)
உரிமையாளர்
(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)
இ. இராசநாயகம்
(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)
ஆ. சுந்தரலிங்கம்
(இளை. பிரதம அஞ்சல் அதிபர், அஞ்சல் திணைக்களம்)
நா. கந்தப்பு
(தோப்பு, அச்சுவேலி)
க. தர்மலிங்கம் J.P.
(நீர்வேலி)
மு. தர்மலிங்கம்
(சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி)
உரிமையாளர்
(வே. கந்தையாபிள்ளை அன்சன்ஸ், யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)
ஜெ. இராஜகோபால்
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
சேனாதிராசா சற்குணராசா
(பண்டத்தரிப்பு)
திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி
((முருகமூர்த்தி வீதி, சங்கானை)
தெ. கோபாலசிங்கம்
(சிவபூமி முதியோர் இல்லம், சுழிபுரம்)
து. மகேந்திரன்
(கைதடி மேற்கு, கைதடி)
த. சிவசுப்பிரமணியம்
(லீலா வெதுப்பகம், சங்கானை)
Dr சி. இராசலிங்கம்
(இளை. வைத்திய பொறுப்பதிகாரி, அச்சுவேலி)


# அரிய பணி ஆற்றிடும் ஆச்சிரமம்

– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –

கலியுகவரதன் கந்தப்பெருமானின் கருணையினால் கருமமே கண்ணாக இருந்து அரியபணி ஆற்றிடும் ஆச்சிரமந்தான் சந்நிதியான் ஆச்சிரமம். பசி என்று வந்தோர்க்குப் புசி என்று அன்னமளித்திடும் ஒரே ஒரு புனிதத் தலம் இந்தச் செல்வச்சந்நிதியிலுள்ள சந்நிதியான் ஆச்சிரமம். சொல்லில் வடிக்க முடியாத அருஞ் செயல்கள் செய்கின்ற இந்தச் சந்நிதியான் ஆச்சிரமம் நின்று நிலைத்து இன்னும் பல அறப்பணிகளை ஆற்றிட ஆற்றங்கரையான் அருள்புரியட்டும்.

வயிற்றுப் பசிக்கு அன்னமளிப்பது போல் அறிவுப் பசிக்கு "ஞானச்சுடர்" சஞ்சிகையை எமக்கு அளிக்கின்ற பணி சிறப்பானது. முந்திய காலங்களில் வெளிவந்த ஞானச்சுடருக்கும் இப்போது பிரசுரமாகின்ற ஞானச்சுடருக்கும் நிறைய வித்தியாசம். ஒவ்வொரு பக்கமும் படிக்கப் படிக்க உள்ளம் உவகையால் துள்ளுகின்றது.

வாசகர்களின் விருப்பம் அறிந்து அதை உணர்ந்து வெளியாகும் ஒரே சஞ்சிகை "ஞானச்சுடர்" என்றால் அது மிகையாகாது. மாணவர்களின் தேவை, வயது முதிர்ந்தவர்களுடைய தேவை, வாலிப வயதினரின் தேவை, குழந்தைப் பருவத்தினரின் தேவை என்று இன்னோரன்ன பல தரப்பினரதும் தேவைகளை அவரவர்க்கு ஏற்றாற் போல அகங்குளிர மனம் மகிழத் தருவதில் ஞானச்சுடருக்கு நிகர் ஞானச்சுடரே!




ஒவ்வொரு மாதமும் "ஞானச்சுடர்" எப்போது வரும்? என்று வாசலையே நோக்கிய வண்ணம் வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் உள்ளங்கள் எத்தனை எத்தனையோ? விஷயதானம் செய்வதில் முன்னிலையில் நிற்கும் ஞானச்சுடருக்கு எல்லையே இல்லை. ஆயிரங்கோடி நன்றிகள்!

**அதர்ம வழியில் ஈடுபட்டு ஜெயிப்பதைவிட தர்ம வழியில் நடந்து தோற்றுப்போவது மேலானது.**

அழகிய மூவர்ண அட்டைப்படத்துடன் செல்வச்சந்நிதி முருகனையே கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தும் ஞானச்சுடருக்கு எப்படி நன்றி கூறுவது? பக்திப் பரவசத்துடன் திருநீறு தாங்கிவரும் சஞ்சிகையின் பெருமதி சொல்லுந் தரமன்று!

இத்தனை பணிகளையும் சந்நிதி முருகனின் துணையோடு ஆற்றி வருகின்ற வணக்கத்துக்குரிய மோகனதாஸ் சுவாமிகளின் அருள்திறன் திருவருள் செயலேயொழிய வேறில்லை. ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்து குறையேதுமில்லாமல் நிறைவான முறையிலே செவ்வனே நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

"ஓம்" என்ற பிரணவத்தோடு "முருகா" எனும் நாமம் சேர்த்து முதற்பக்க அட்டைப் படத்திலேயே வேலோடு நின்று வினை களைந்து மயிலோடு வந்து அருள்புரியும் ஆற்றங்கரை வேலவனின் தோற்றம் பக்திரசம் ததும்பும் பரவச விருந்தளிக்கின்றது என்று சொன்னால் அது சாலப் பொருந்தும்.

"சுடர் தரும் தகவல்" என்று தொடங்கி புத்தகம் முழுவதையுமே வாசிக்கத் தூண்டுகின்ற "ஞானச்சுடர்" சஞ்சிகை எமக்குக் கிடைத்த ஓர் அரும்பெருஞ் சொத்தாகும். நாங்கள் விரும்பிப் படிக்கின்ற இந்த அரிய நூல் தொடர்ந்து வெளிவந்து எமது ஆசையை நிறைவேற்ற ஆற்றங்கரை வேலவனின் இன்னருள் துணை நிற்கட்டும்.

எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் இத்தனை அரிய பல கவிதைகளையும் கட்டுரைகளையும் தாங்கி எம் கரங்களில் தவழ்ந்து மகிழ்வுடன் திகழும் ஞானச்சுடரின் அச்சாணி அன்புக்குரிய சுவாமிகளே! அவரது அயராத முயற்சியும் இடைவிடாத ஊக்கமும் இணைந்துதான் இது வெளிவருகின்றது.

"எதுவும் என் கைகளிலில்லை; எல்லாம் அவன் செயலே" என்று பணிவோடு பகர்ந்து நிற்கும் சுவாமிகளின் தன்னடக்கப் பண்பு மெச்சுந் தன்மையது.

ஆகவே, இப்போது பிறந்திருக்கும் 2016 புத்தாண்டு முதலாக "ஞானச்சுடர் நன்கு ஒளிவீசிப் பிரகாசித்து எல்லோரது வாழ்க்கையிலும் வெளிச்சத்தைத் தந்து ஒளிரவேண்டும் என்று சந்நிதிக் கந்தன் தாள் பணிந்து வணங்கி வாழ்த்தி நிற்கின்றோம்!.

---

### எது ஞானம்?

ஒரு ஞானியைப் பார்த்து ஒருவர், "ஞானத்தில் சிறந்த ஞானம் எது?" என்று கேட்டார். "இன்பத்தினால் மகிழ்ச்சி அடையாமலும், துன்பத்தினால் சோர்வடையாமலும் இருப்பதுதான் ஞானம்" என்றார் ஞானி.

வந்தவர், விளக்கமாகக் கூறுங்கள் என்று கேட்டார். "இக்கழுதையை காலையிலும், மாலையிலும் பார்த்தால் உமக்குப் புரியும்" என்றார். ஞானி கூறியபடியே அவர் காலையும், மாலையும் கழுதையைக் கவனித்தார். அவருக்கு ஒன்றும் புரியாமல் போகவே ஞானியிடமே கேட்டார். ஞானி விளக்கினார்.

"இந்தக் கழுதைக்கு காலையில் தன் முதுகில் அழுக்கு மூட்டைகளைச் சுமந்து செல்கிறோமே என்ற வருத்தம் இல்லை; சுத்தம் செய்த துணிகளை மாலையில் சுமந்து வருகிறோமே என்ற மகிழ்ச்சியும் இல்லை. இதைப் பார்த்துத்தான் நான் அத்தகைய ஞானம் பெற்றேன்" என்றார்.

துன்பத்திலும், இன்பத்திலும் துவளாமல் இருப்பதே சிறந்த ஞானம் என்பதை உணர்ந்தார் அந்த நபர்.

-பக்தி-

*நல்லவனானாலும் பணம் இல்லாதவன் சொல் சபை ஏறாது.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

9. தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அறிவினை யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு எய்திற்றி லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி யேற்கெம் பரம்பரனே.

**ப.ரை:**

எம் பரம் பரனே- எங்கள் மேலோர்க்கும் மேலோனே; தவமே புரிந்திலன்- அடியேன் தவத்தைச் செய்திலேன்; தண்மலர் இட்டு முட்டாது இறைஞ்சேன்- குளிர்ந்த மலர்களை இட்டு நின்னைக் குறைவற வணங்கேன்; அவமே பிறந்த அறிவினை யேன்- பயனின்றிப் பிறந்த கடத்தற்கரிய தீவினையுடையேன்; உனக்கு அன்பர் உள் ஆம்- உனக்கு அன்பரா யுள்ளார் நடுவிலிருக்குமே, சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்- வீட்டின்பத்தையே அடைவதற் கேதுவாகிய செல்வத்தை அடைந்திலேன்; அடியேற்கு நின் திருவடிக்கு ஆம் பவமே அருளு- அடியேனாகிய எனக்கு நின் திருவடியை அடைதற்குரிய பிறவியையே அருள் செய்வாயாக.

எம் பரம்பரனே, தவமே புரிந்திலன்; மலர்இட்டு நின் திருவடியை வணங்கேன்; பயனின்றிப் பிறந்த கடத்தற்கரிய தீவினையையுடையேன் உனக்கு அன்பராயுள்ளார் நடுவிலிருக்கும் சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்; இனியாயினும் நின் திருவடியை அடைதற் குரிய பிறவியை அடியேற்கு அருள்செய்ய வேண்டும் என்பதாம்.

தவம் என்றது ஈண்டு சிவாச்சிரம ஒழுக்கநெறிகளை, தவமே என்புழி ஏகாரம் தேற்ற பொருட்டு, தண்மலர் என்றார் நாண் மலராதல் தோன்ற, இறைஞ்சுதற்கு மலர் சிறந்ததாதலின் "மலரிட்டு" என்றார்.

"இலையார் மலர்கொண் டெல்லி நண்பகல், நிலையா
வணங்க நில்லா வினைகளே"

(ஞான 25:5)

"தண்ண மலர்தூவித் தாள்கள் தொழுதேற்த, எண்ணு
மடியார் கட்கு இல்லை இடுக்கணே"

(ஞான 86:9)

"இச்சையான் மலர்கள் தூவி யிரவொடு பகலுந் தம்மை
நச்சுவார்"

(நாவு 66:1)

இந்த உலகம் பளிங்கு போன்றது. நாம் சிரித்தால் அது சிரிக்கும் சீறினால் அதுவும் சீறும்.

"விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் தன்னடி சூழ்மின்கள்"

(நாவு 195:1)

எனத் தேவாரத்து வருவனவும் காண்க.

முட்டாது- குறையாது. "செய்கடன் முட்டா வண்ணந் திருப்பணி செய்யும் நாளில் பெரியபுராணம். அரிவாட் 12 முட்டாது இறைஞ்சேன் என்றது மந்திரலோபம், கிரியாலோபம், திரவியலோபம், பத்திலோபம் முதலிய குறைபாடுகளின்றி வணங்கேன் என்றவாறு.

உனக்கன்பருள்ளாம் திரு. சிவமே பெறுந்திரு எனத் தனித் தனி இயைக்க. இறைவனுக்கு அன்பராயுள்ளார். நடுவிலிருத்தலும் செல்லமாதலின் "அன்பருள்ளாந் திரு" என்றார். அதனை வேண்டுதல், "உன்னடியார் நடுவுளிருக்கு மருளைப்புரியாய்" (கோயில் மூத் 1) என்பதனாலுமறிக. அது சிவத்தையே பெறுவதற்கு வாயிலாதலின் "சிவமே பெறுந்திரு" என்றார்.

"தவமே புரிந்திலன்" எனவும், "தன்மல ரிட்டு முட்டா திறைஞ்சேன்" எனவும், "அவமே பிறந்த அருவினையேன்" எனவும் "அன்பருள்ளாம் சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்" எனவும் அடிகள் அருளியது இயல்பாகத் தம்மைத் தாழ்த்திக்கூறும் முறைமை பற்றியதாகும்.

திருவடிக்காம் பவம்- திருவடியைப் பெறுதற்கரிய தகுதியமைந்த மானிடப்பிறப்பு. "இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிம்மா நிலத்தே" (தே 91:4). என அப்பரடிகள் அருளியமையுங் காண்க. பவம்- பிறப்பு. ஏகாரம் தேற்றப் பொருளது.

இதன்கண் தவம்புரிதலும் மலரிட்டு இறைஞ்சுதலும் அன்பருள்ளாம் சிவமே பெறுந்திரு எய்தலுமே மெய்ம்மை என உணரப்படுதலால் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலி பொருள் போதருதல் காண்க. 5.

10. பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னும் அன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே.

**ப.ரை:**

பரந்து பல் ஆய் மலர் இட்டு- விரிவாகப் பல ஆராய்ந்து எடுக்கப்பட்ட மலர்களைப் பெய்து, முட்டாது அடியே இறைஞ்சி- குறைவு படாமல் திருவடிகளையே சிறப்பாக வணங்கி, இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்னும்- ஈயும்படி வேண்டிக் கொண்ட எல்லாவற்றையும் எமக்குப் பெற்றுக்கொள்ளலாம் என்று கருதுகின்ற, அன்பர் உள்ளம் கரந்து நில்லா கள்வனே- அன்பர்களுடைய உள்ளத்தில் மறைந்து நில்லாத கள்வனே, நின்னை முழுவதும் ஏத்த- உன்னையே முழுவதும் வாழ்த்தும் வண்ணம், நின்தன் வார்கழற்கு அன்பு- நின்னுடைய நீண்ட கழலணிந்த திருவடிக்கட்கு செய்யும் அன்பினை, எனக்கு நிரந்தரமாய் அருள்வாய்- அடியேனுக்கு இடையீடின்றி நிகழும்படி அருள்செய்வாயாக.

விரிவாக மலர்களை இட்டுக் குறைபடாது நின் திருவடிகளையே வணங்கி இரந்த வெல்லாம் எமக்குப் பெறலாம் என்று கருதுகின்ற அன்பர்களுடைய உள்ளத்தில் கரந்து

*அவசரம், ஆளை மட்டுமல்ல, அறவழியையும் கெடுத்துவிடும்.*

நில்லாது கள்வனே நின்னை முழுவதும் வாழ்த்தும் வண்ணம் நின்னுடைய திருவடிக்கட் செய்யும் அன்பினை எனக்கு நிரந்தரமாய் நிகழும்படி அருள் செய்வாயாக என்பதாம்.

பரந்து என்னும் எச்சத்தைப் பரக்கவெனத் திரித்து இறைஞ்சி என்னும் வினையொடு முடிக்க. மலரிட்டு அடி இறைஞ்சுதல் இறைஞ்சுவார் நிலைமைக்குத்தகச் சுருக்கமாகவும் விரிவாகவும் அமையும். இங்கு பரந்து என்பது விரிவாக என்னும் பொருளில் வந்தது. இனி, பரந்து என்பதற்குப் பல தலங்கள்தோறும் சென்று எனினுமாம். வினைகெடப் பள்ளமும் மேடும் பரந்து திரிவரே" எனத் திருமந்திரத்து (509) வருதலுங் காண்க.

பன்மலர் என்றது கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்பவற்றை. ஆய்மலர் என்றது எடுத்து வைத்து அலர்ந்தபூவும் தானே விழுந்து கிடந்த பூவும் பழம்பூவும் உதிர்ந்த பூவும் அரும்பும் இரவில் எடுத்த பூவும் கைசீலை எருக்கிலை ஆமணக்கினை என்பவற்றிற் கொணர்ந்த பூவுமாகிய விலக்கியன ஒழித்து, உரிய காலத்தில் உரியமுறைப்பது புழுக்கடி எச்சந்தாக்கல் சிலந்தி கூடுகட்டல் மயிர்சுற்றல் முதலிய குற்றங்கள் இல்லாதனவாக ஆராய்ந்து எடுத்த மலர்களை. திருவடி இறைஞ்சுதற்கு மலர் சிறந்ததாதலின் "மலரிட்டு" என்றார். "ஏய்ந்த மாமலரிட்டு முட்டாதோர் இயல்பொடும் வணங்காதே" (அற்புதப் 2) எனவும் "மற்றுன்று மாமலரிட் டுன்னை வாழ்த்தி வந்தித்தலன்று" (திருக்கோவை 178) எனவும் வருவனவும் காண்க.

அடியே இறைஞ்சி இரந்தவெல்லாம் எமக்கே பெறலாமென்னும் அன்பர் என்க. அடியே என்பதில் ஏகாரம் தோற்றம். இறைஞ்சி என்ற வினையை இரந்த என்பதனோடு முடிக்க. இரத்தல்- தருகவென வேண்டிக்கோடல். எமக்கே என்பதில் ஏகாரம் அசை.

அன்பருள்ளம் கரந்து நில்லாக் கள்வன் என்றது அன்பருள்ளத்தில் மறைந்து நிற்க முடியாது வெளிப்படுகின்ற கள்வன் என்றவாறு "அடியார்க்குக் கரக்ககில்லோ தருள்செய் பெருமான்" எனத் தேவாரத்து (ஞான 195:8) வருதலுங் காண்க. இதனால் அன்பரல்லாதார் உள்ளத்துக் கரந்து நிற்பவன் என்பது போதரும்.

வார்கழல் என்பது அதனையுடைய திருவடியை உணர்த்தியது. "கழற்கு" என்னும் நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. "எம்பிரான் தில்லைச் சூழ்பொழிற்கே" (திருக் கோவை 167) என்புழிப்போல. வீடு பயக்கும் இறையருளையுண்டாக்கத் திருவடியிடத்துச் செய்யும் அன்பு சாதனமாதலின் "உன்தன் வார்கழற்கு அன்பு அருளாம்" என்றார். "மெய்யன்பை உடையாய் நான் பெறவேண்டுமே" அணியா ரடியா ருனக்குள்ள அன்புந் தாராய்" (பிரார்த்த 318) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க.

"கோலநீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலையிந்திரன் அரசினைக் கனவிலும் வெ்.கேன்
மாலயன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சாலநின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்"

(பானு 154)

எனக் கந்தபுராணத்து வருதலும் ஈண்டறியற்பாலது.

நிரந்தரம்- இடையீடின்மை. வடசொல்

"புலைப்புன்மையிலே, நிரந்தரமாய் நின்ற வென்னையும்"

(11ந் திருமுறை கோயிற்றிருப்பண்ணியர் 41)

தவறு செய்வது தவறு அல்ல. திருத்திக் கொள்ளாதிருப்பதே தவறு.

என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அன்பு நின்பால் இடையீடின்றி நிகழவேண்டுமென்பார். "நிரந்தரமாயருளாய்" என்றார்.

"ஏழையென்புன்மை கருதா திடையறா வன்பெனக்கு
வாழி நின்பாத மலர்க்கே மருவ வருளு கண்டாய்"

எனப் பதினொராந் திருமுறையில் வருதலுங் காண்க. அவ்வன்பு நின்னை ஏத்துவதற்கே பயன்பட வேண்டுமென்பார். "நின்னை ஏத்தமுழுவதுமே என்றார். ஏத்தல்- வாழ்த்துதல், "சிறப்புச் செய் துழையராப் புகழ் பேத்தி" (கலி 25:15) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

இதன்கண் நின்றன் வார்கழற் கன்பெனக்கு நிரந்தரமாய் அருளாய் என்பதனால் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலிய பொருள் போதருள் காண்க.

(தொடரும்...

---

**தைத் திருநாளே வருக!**

எங்கெங்கும் உழவு தொழில்
ஏற்றமுற மழை வெயிலைத்
தங்கு தடை இன்றியுமே
தந்துதவும் கதிரவனை;
பொங்கலிட்டு வாழ்த்திப்
புதிது படைக்கின்ற;
இங்கித நற் தைப்பொங்கல்
திருநாளே! நீ வருக!

வயல் காட்டில் உழைத்தபயன்
வந்துமே சேர்ந்ததனால்
உயர்வடைந்த உழவனவன்
உவகை கொண்டு தன் அன்பு
அயலவர்கள்; ஊரவர்கள்
அனைவருடன் சேர்ந்து பொங்கி
நயமாகக் கொண்டாடும்
நன்னாளே நீ வருக!

புத்தாடைகள் புனைந்து;
புதுக்கலசம்தான் எடுத்து
முத்து முத்தாய்ப் புத்தரிசி
பால் பழங்கள் அதனுள் இட்டு;
தத்துவ நல் பொங்கல் பொங்கி
தரணி எங்கும் களிக்க உயர்
தைத் திருநாளே வருக!
தானம் தவம் நிலைக்க!

-கி. குலசேகரன்-

*தானே செய்யக்கூடிய எதையும் பிறர் செய்யவிடலாகாது.*

# செம்பொருள் + துணிவு = செம்பொருட்டுணிவு

- திரு முருகவே பரமநாதன் அவர்கள் -

தமிழ்மொழிக்கு ஒரு இலக்கணம் உண்டு. அவ்விலக்கணம் கற்றோர், மொழிவளம் பேணுவர். பொருளை, கருத்தையறிந்து பிழைபடப் பேசார், எழுதார். தூய தமிழுக்கு இலக் கணம் ஆற்றுப்படுத்தும். பழைய இலக்கியங்கள், தொன்மைமிகு சமைய இலக்கியங்களைப் புரியத் தமிழ் இலக்கணம் இன்றியமையாதது. செம்பொருட்டுணிவும் அவ்வண்ணமே. செம்மை+ பொருள்= செம்பொருள். செம்பொருள் + துணிவு= செம்பொருட் டுணிவு, செம்பொருட்+ துணிவு: செம்பொருட்டுணிவு எனவரும். இதற்கான விதிகளை இலக்கணம் கற்றார் வாயிற் கேட்டறிக.

ஆறறிவு உடைய உயிர் மனிதம். இந்த மனிதத்துக்குப் பத்து அறிவு என்று திருமூலநாயனார் சொல்கிறார். அறிவும் பலவகைப்படும். பட்டறிவு, கெட்டறிவு ஒருவகை. கல்வியால் வரும் அறிவு இன்னோர் வகை. இயல்பறிவும் எம்மை வாழ வைக்கிறது. அனு பவமும் ஒருவகைக் கல்விதான். படியாதவரைக் கல், மரம் என வள்ளுவநாயனார் அறிமுகம் செய்கின்றார். படித்த மடையரும் உண்டு. எனவே வள்ளுவனார் வாக்கில் அறிவு பற்றிப் பார்ப்போம். இதை அறிவுடைமை என வள்ளுவம் பேசும். உடைமை செல்வம், உடையராய் இருத்தல். சில குறட்பாக்களைக் கருத்திற் கொள்வோம்.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

-430 குறள் எண்.

அறிவுடையவர்கள் எல்லாம் உடையர் ஆவர். அறிவில்லாதவர்கள் மற்று எல்லாப் பொருள்களும் உடையவர் ஆயினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

-423 குறள் எண்.

யாதொரு பொருளை, யாவர் யாவர் சொல்லக் கேட்பினும், அப்பொருளின் மெய்யான பயனைக் காணவல்லது அறிவு.

குணங்கள் மூன்றும் (இராசதம், தாமசம், சாத்வீகம்) மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார்வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப்பொருள் பகைவர்வாயினும், கெடு பொருள் நட்டார் வாயினும், ஒரேவழி கேட்கப் படுதலான் "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்" என்றார். வா யென்பது அவர் அப்பொரு ளின்கண் பயிலாமை உணர நின்றது. மெய்யாதல் நிலை பெறுதல்.

-பரிமேலழகர்.

*அச்சமே மனிதனுக்கு மரணத்தை ஏற்படுத்துகிறது.*

எண்பொருள ஆகச் செலச் சொல்லித்தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.

-அறிவுடைமை. 424.

உயர்ந்த கருத்தைத் தெளிவாகக் கூறுவதும், பிறர் கூறும் தெளிவற்ற சொற்களில் நுட்பமான பொருளைக் காண்பதும் அறிவாகும்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்பதறிவு.

-மெய்யுணர்தல். 358 குறள் எண்.

பிறவித் துயரைத் தரும் அஞ்ஞானம் அகல, முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரணமான - செவ்விய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாகும்.

மெய்ப்பொருள், நுண்பொருள்பற்றி அறிவுடைமையிலே பேசிய குறளாசான் மெய்யுணர் விலே பிறவியை அழிக்கும் மேலான பொருள் செம்பொருளே எனப்பாடியுள்ளார். அச்செம்பொருள் இறைவனே. சிவனே என்பதைத் தெளிவுபடப் பேசியமை ஆழ்ந்து நோக்க வேண்டியது.

தோற்றக் கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையாற் தன்னை ஒன்றுங் கலத்தலின்மையிற் தூய்தாய்த், தான் எல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றி அதனைச் செம்பொருள் என்றார் பரிமேலழகர்.

மெய்ப்பொருள் காண்பது, நுண்பொருள் காண்பது அறிவின்நிலை. பிறவியை அறுப்பதே மானுடத்தின் நோக்கம் என்பதைக் கடவுள் வாழ்த்திலும் குறிப்பிட்டுள்ளார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

-10. குறட்பா எண்.

இன் சொலால் ஈரம் அளைஇப் படிறில வாம்
செம் பொருள் கண்டார் வாய்ச் சொல்.

-இனியவை கூறல் 91. திருக்குள் எண்.

படிறு- வஞ்சனை, ஈரம்- அன்பு.

செம்மையான பொருளை அறிந்தவர்களின் வாய்ச் சொற்கள், இனியவையாய், அன்பு கலந்ததாய், வஞ்சம் இல்லாததாய் இருக்கும். வஞ்சகம் இன்மை, வாய்மை, மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல்லாம் செம்மையுடையதாய்த் தோன்றலின் "செம்பொருள்" எனப்பட்டது.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு.

-மெய்யுணர்தல். 355 குறட்பா எண்.

இந்தச் செம்மையென்ற பிரயோகத்தைத் தேவாரப் பாட்டிலும் காண்கிறோம்.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கு அரசர்தம் அடியார்க்கும் அடியேன்.

-8:33.20 சுந்தரர்.

திருவாரூரில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு ஆளாய் அமைந்த ஆரூரனாகிய யான், இறைவன் திருவருளையே செந்நெறியாய்க் கொண்ட திருநாவுக்கரசு நாயனாரின் அடியார்க்கு அடியேன். திரு, திருவருள் இப்பொருளமைவை அப்பர் பெருமானும் ஆண்டிருக்கிறார்.

சிவனெனு மோசை யல்ல தறையோ உலகிற்
திருநின்ற செம்மை யுளதே.

-4:8.1.

செம்மை, சிறப்பு, மேன்மை, சீர்மை, ஒத்துவருவன. திரு என்பது சிவனையும் குறிக்கும். சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியென்பது அப்பர்வாக்கு. சிவ- சிவத்தல், சிவப்பு, சிவலை, செம்மை, செம்பு என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்தது சிவ. சிவசிவ என்கிலர் தீவினையாளர் என்பது திருமந்திரம். சிவத்தோடு சம்பந்தம் உடையது சைவம். சைவத்தின் தெய்வம் சிவம். இதுவே சிவபெருமான் என்று அழைக்கப்படும். எனவே செம்பொருள் பரம்பொருளாம் சிவனையே முன்னிலைப்படுத்துகிறது. மணிவாசகப் பெருமான் செம்பொருள் என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளார்.

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊத்தையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக்கழலே
செல்வமே சிவபெருமானே
எம் பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

-37. பிடித்தபத்து.

*கருத்து:*

உம்பர்கட்கு அரசே- தேவர்களுக்கு அரசனே, ஒழிவு அறநிறைந்த யோகமே- எல்லாப் பொருள்களிலும் நீக்கமறக்கலந்து இருப்பவனே, ஊத்தையேன் தனக்கு- அழுக்கு உடம்பை உடையவனாகிய எனக்கு, வம்பு எனப்பழுத்து- புதியபொருள் போலத் தோன்றி, என்குடி முழுது ஆண்டு அருளி, வாழ்வு அற- உலக வாழ்வு நீங்க, வாழ்வித்த மருந்தே- ஆண்டருளிய அமுதமே- செம்பொருள் துணிவே- துணியப்பட்ட செம்பொருளே, சீர் உடைக்கழலே- சிறப்பான திருவடியை உடையவனே, செல்வமே- அருட் செல்வராய் இருப்பவனே, சிவபெருமானே- சிவபிரானே, எம்பொருட்டு- எங்கள் பொருட்டாக, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்- உன்னை உறுதியாகப் பற்றிப் பிடித்தேன், இனி எங்கு எழுந்தருளுவதே- நீ இனிமேல் என்னைவிட்டு எழுந்தருளிப்போவது.

-உரை- ஜி. வரதராசன்.

சிவன் என்றால் மங்கலமானவன் என்று பொருள். சங்கரன் நலத்தைச் செய்பவன், சம்பு- ஆனந்தத்தைக் கொடுப்பவன் என்று பொருள். எனவே சிவனின் மேற் தெய்வமில்லை. சைவத்தின்மேற் சமயம் இல்லை என்ற உண்மையைக் கூறும் திருவாசகம் ஒரு புனிதமான உலகப் புகழ் வாய்ந்த இலக்கியம். நம் இலட்சிய வாழ்விற்கு இது ஓர் இலக்கியமாம். சிந்திப்போம். செயற்றிறன் நிறைந்தவராய் வாழ்வோம்.

*நாற்புரம் பற்றி எரிந்தாலும் நாணயம் தவறாதே.*

# அருணகிரிநாதரின் ஞானத்தமிழ்

– திரு கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் –

“ பக்கரை விசித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பட்சியெனும் உக்ரதுர - கமுநீபப்
பக்குவ மலர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள் கை - வடிவேலும்
திக்கது மதிக்கவரு குக்குடமும் ரஷைதரு
சிற்றடியும் முற்றிய - பன்னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள் கை - மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடன் நெய்
எட்பொரி யவல் துவரை - யிளநீர்வண்
டெச்சில் பயறப்பவகை பச்சரிசி பிட்டு வெள்
ளரிப்பழம் இடிப்பல் வகை - தனிமூலம்
மிக்க அடிசிற் கடலை பஷணம் எனக் கொளொரு
விக்கின சமர்த்தன் எனும் - அருளாழி
வெற்ப குடிலச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தக மருப்புடைய - பெருமாளே”

-திருப்புகழ்.

“ ஏறுமயி லேறிவிளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே” 1
“ தந்தைக்கு உபதேசம் செய்த தமிழ்த் தெய்வம்” 2

அருணகிரிநாதர் திருப்புகழ் பாட, உதவி, ஞானத் தமிழான ஞானமொழியான “முத்தைத் தரு” என்ற அடியை எடுத்துக் கொடுத்தவர் முருகக் கடவுள். தந்தைக்குப் பிரணவத்தின் பொருளை உபதேசித்து “தகப்பன் சாமி” எனப் பெயர் கொண்டவர்.

முருகக் கடவுளின் திருமந்திரமும் “சரவணபவ” “குமாராய நம” என்ற ஆறெழுத்துக் களைக் கொண்டது. இதனை “ஆறெழுத்தடங்கிய அருமறை” என நக்கீரரும், “இசையில் சடாஷரம்” என அருணகிரிநாத சுவாமிகளும் போற்றியுள்ளனர். செந்தமிழ், இன்பத்தமிழ், பைந்தமிழ், தேன்தமிழ், தீந்தமிழ், நறுந்தமிழ், பக்தித்தமிழ், ஞானத்தமிழ் என்று தமிழ்மொழியின் பண்புகள் குறித்துப் பல பெயர்கள் எமது தமிழுக்குக் கிடைத்துள்ளன. இனிய தமிழ் தான் அளித்த முருகன் அருணகிரிநாதரின் வாயாலேயே தமிழின் சீர்மையையும், செம்மையையும், மேன்மையையும், உண்மையையும் எடுத்துக்கூற அருள் செய்துள்ளான். திருநாவுக்கரசு நாயனார் “ஞானத்தாற் தொழுவார் சில ஞானிகள்” என்று திருமுறையிலே சுட்டுகிறார். இறைவன் திருவருள் சமய வரலாற்றிலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், 63 மெய்யடியார்கள், மார்க்கண்டேயர், அருணகிரிநாத சுவாமிகள் நாயன்மார்கள் என்போர்க்கு இறைவன் (சிவன்-

*இறைவன் துணையின்றி வாழ்க்கை ஓடத்தில் ஏறியவர்கள் யாராலும் கரை இறங்க முடியாது.*

முருகன்) திருக்காட்சிகள் கிடைத்தன. பல்வேறு குலத்தினர், பல்வேறு தரத்தினர், பல்வேறு பண்பினர், பல்வேறு இயல்பினரானவர்க்கெல்லாம் பரம்பொருள் காட்சி கொடுத்து அருளினன்.

சுந்தரர், சேக்கிழார், அருணகிரிநாதர் என்போருக்கு முறையே "பித்தா", "உலகெலாம்", "முத்தைத்தரு" என்று அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட வரலாறுகளும் உள்ளன.

அருணகிரியாரது ஞானத்தமிழ், சந்தத்தமிழாகும். தமது சுய அனுபவத்தினை எவ்வாறெல்லாம் புகலமுடியுமோ அவ்வாறெல்லாம் லாவகமாகப் பாடுவதற்கு உதவியது இந்த ஞானத்தமிழ். ஞானத்தமிழாற் புகன்றவையனைத்தும் மானுட வாழ்வுக்குப் படிப்பினைகளாயின.

"தமிழ் வளர்க்கும் இதயத்தில் தான் வளரும் தெய்வம், அமிழ்தினும் இனிய சொல்லாம் முருகன் தெய்வம். சொல்லுக்குப் பொருள் கூறிச் சுவை தந்த தெய்வம்- தான் சொல்லாகிப் பொருளாகிச் சுவையுமான தெய்வம்" 6.

"மாசிலாத கன்னித் தமிழின் காவலனாகிவிட்டான்" 7. "சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை யடுத்தவகை அறுத்தெறிய உறுக்கியெழும் அறத்தை நிலை காணும்" 8. என்று புகழ்கிறது வேல்வகுப்பு. சொலற்கரிய திருப்புகழ் என்னும் அடை சிந்திக்கற்பாலது.

"அடைபெறுவாதென்று முத்தி யதிமதுரச் செந்தமிழ்க்கும் அருள்பெற நினைந்து சித்தியாகலாம்" 9. கடைக்கணியல் வகுப்பில் "அதிமதுரச் செந்தமிழ்" என்ற அடைபெய்யப் பட்டுள்ளமை நோக்கற்பாலது.

"முத்தமிழால் வைதாரையுமங்கு வாழ வைப்போன்" 10.

முத்தமிழ்ச் சிறப்பு விசேடமாகத் தமிழ்மொழிக்குரியது. கருத்தாலும், காலத்தாலும் முற்பட்டமொழி தமிழ்மொழி அதனைச் சுட்டும் அருணகிரிநாதர் திருப்புகழிலே "முந்துதமிழ்" என்றுரைத்துள்ளார். இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்பன முத்தமிழாகும். முத்தமிழின்பத்தைச் சுவைப்பதால் அருள் செய்பவன் முருகன். ஆதலினாலேயே ஆடுவர், பாடுவர், பாராயணஞ் செய்வர். முருகப்பெருமானின் தந்தையான சிவபெருமான் இராவணனது சாமகானத்திற்கு இரங்கியிளகியவர். எனவே செந்தமிழின்ப இசைப்பாடல்களாலே சந்தத் தமிழ்ப் பாடலின் இன்பமேலீட்டினாலே இரங்குபவன் முருகன்.
ஈழத்துக் கவிஞர் சோ. பத்மநாதன்.

"செந்தமிழின்பம் நுகர்ந்து வள்ளி
செவ்விதழ் ஈரம் பகிர்ந்து"

என்று நல்லைக் குமரனைப் பாடுகிறார். ஈண்டு "தமிழரானவரை மட்டும் வாழ வைப் பவன் மற்ற மொழிகளால் வைதவருக்கு வாழ்வில்லை" என்று கூறலாகாது. முருகப் பெருமானுக்கு மொழி வேறுபாடு கிடையாது. முத்தமிழால் வைதாரையுமங்கு வாழவைப்போன்" என்று பாடியது அருணகிரிநாத சுவாமிகளுக்குத் தமிழ்மொழியில் ஏற்பட்ட பற்றுதலினாலே யாகும். அருணகிரியாரின் மொழிப்பற்றை எடுத்துக் கூறும் சிதம்பர சுவாமிகள்,

"வடமொழி தென்மொழிப்பாவால் நிறை தயவுற
நினைப்புகழ்ந்து நின்றேத்தி"

12 என்று கூறுவர்.

"மொழி புகழும் உடைமணியும் அரைவடமும் அடி இணையும்
முத்தச் சதங்கையும் சித்ரச்சிகண்டியும் கொள்வோனே" 13.

பிரமதேவனிடம் "ஓம்" எனும் பிரணவத்தின் பொருளைக் கேட்டவன் முருகன். "தகப்பன்

*இச்சையும் விருப்பமும் அறிவின் எதிரிகள்.*

சாமி” எனப்படும் முருகனுக்குச் சிவன் சீடன், குரு முருகன். சுவாமியைக் குருமலை என்றும் போற்றப்படும். சிவனது மடிமீதிருந்து உபதேசம் செய்த கடவுள் முருகக்கடவுள். “ஒரு பெரும் தத்துவத்தின் சாறெடுத்து நல்ல ஓமெனும் மந்திரத்தின் பொருளுரைத்துத் தந்தைக்கு உபதேசம் செய்தமலை” என்று பாடுகிறார் சீர்காழி எஸ். கோவிந்தராஜன். விநாயகர், நாரதர், மகாவிஷ்ணு, பிரம்மா, அகத்தியர், வீரவாகு முதலியவர்கள் சூழ்ந்து நிற்க முருகக் கடவுள் தந்தையின் மடிமீதிருந்து உபதேசம் செய்யும் காட்சியின் விளக்கம், சிற்பங்களாகவும், சிலை வடிவங்களாகவும் சுவாமிமலையிலே காணலாம்.

ஞானபண்டிதன், குருநாதன் எனப்படுவோன் முருகனே.

“சிவத்தின் சாமி மயில்மிசை நடிக்குஞ் சாமி
யெமதுளே சிறக்குஞ் சாமி சொருபமீதொளிகாண” 14.

“ஓதுவித்த நாதர் கற்க ஓதுவித்த முனிநாண
ஓர் எழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே” 15.

“நாத போற்றியென முது தாதை கேட்க அனுபவ
ஞானவார்த்தை யருளிய பெருமாளே” 16.

“ஓம்” எனும் எழுத்தின் மகிமையை வேதகர்த்தாவாகிய பிரம்மாவும் கூற இயலாதென்றால் மற்றவர்கள் விளக்கமுடியுமோ எனக் கந்தபுராணம் வினவுகிறது. ஆகவே “ஓம்” என்னும் மகாமந்திரத்தைச் சதா நினைந்து வழிபடும் வரத்தை திருவேரகப் பெருமான் அருளவேண்டும் என அருணகிரிநாத சுவாமிகள் பிரார்த்திக்கின்றார்.

“ஓமெழுத்திலன்பு மிகவூறி
ஓவியத்திலந்த - மருள்வாயே” 17.

“ஓம் என்னும் எழுத்தாகிய ஏரினால் பண்படுத்தினால் திருவாகிய தெய்வத்திருவருள் கிட்டும்” என்று முருகப்பெருமான் குருமூர்த்தியாக உணர்த்துகிறான். திருப்புகழ் முழுவதுமாகவே முருகனது பெரும்புகழை உரைக்கும் அருணகிரியார் வாழ்வியலிலே தமதனுபவத்தையும் தமது மனம் மங்கையரின் மையற்பட்டுக் கிடந்துழன்ற நிலைமையையும் மங்கையருள் - வேசையரின் இழிவையும் பிறரது வாழ்வில் செம்மையேற்படத்தக்க முறையிலே வர்ணித்தும் பாடியுள்ளார்.

“முதுமா மறைக்கு ளொருமா பொருட்டுன்
மொழியே யுரைத்த
தகையாதெனக்குனடிகாண வைத்த
தனியேரகத்தின் - முருகோனே” 18.

சிவபெருமான் ஞானோபதேசம் பெற்ற தலமாகச் சாமிமலை இருப்பதால் இங்கு யக்நோபவீதம் (பூணூல் அணியும் சடங்கு) நிகழ்த்துதல் மிகவும் விசேஷமாகக் கருதப்படுகின்றது. திருவண்ணாமலையிலே முருகக்கடவுள் அருணகிரிநாதருக்கு “முத்தைத்தரு” என்று அடியெடுத்துக் கொடுத்ததால் அவர் அன்றுமுதல் பல்வேறு முருகத் தலங்களையும், அத்தலங்களிலுறையும் தமிழ்த்தெய்வம் முருகக் கடவுளையும் பாதாதிகேசமாகவும் கேசாதிபாத

மாகவும் வர்ணித்துத் திருப்புகழைப் பாடியருளினார். "தமிழ்" அருணகிரியின் தாளத்திற்கு ஆடியது. இது முருகனின் பெருங்கருணை.

"இலங்கு தர தமிழ் விளங்கவருதிரு
இலஞ்சி மருவிய பெருமாளே" 19.

தமிழ் விளங்க வந்துதித்தவன் முருகன். கந்தபுராணத்தின் காப்புச் செய்யுளிலே "திகட சக்கரம்" என்பதற்கு வீரசோழிய நிகண்டினை ஆதாரம் காட்டிப் பொருளுரைத்தவன் முருகக்கடவுள். சொற்புணர்ச்சி விதியில் வித்தகன் அவன். முற்றிய தமிழிலக்கண ஆட்சி உடையவன் முருகன். அச்செய்தியை அருணகிரிநாதர்,

"செந்தமிழ்நூல் விரித்தோனை" 20 என்கிறார்.

கீர்த்திபெற்ற திருப்புகழைத் தொடர்ந்துபாடி அருணகிரிநாத சுவாமிகள் முருகவேள் பணித்ததால், வயலூர் முருக பக்தர்களால் மிகவும் போற்றப்படுகிறது. திருப்புகழை முருகப் பெருமான் தனது திருமார்பில் பதக்கமாகத் தரித்திருப்பதாக வேடிச்சி காவலன் வகுப்பு "ஒளிவளர் திருப்புகழ் மதாணி கிருபாகரனும்" என்று விளக்குகிறது. திருப்புகழ்ப் பாடலைப் பாடியபடியே நோய் நீக்கம் பெற்ற அன்பர்கள் அனந்தம் என்றால், திருப்புகழின் பொருளையும் மகிமையையும் எழுத்துக்களாலும், வார்த்தைகளாலும் எடுத்துரைக்க இயலாது. அருணகிரிநாதர் பாடிய பதினாறாயிரம் திருப்புகழ் பாடல்களில் காலதேவனால் தூர்ந்தவை போகத் தற்பொழுது 1311 பாடல்கள் மட்டும், தணிகைமணி ஸ்ரீ.வ.சு. செங்கல்வராயபிள்ளை குடும்பத்தினர் ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் முதலியவர்களின் பெரு முயற்சியால் கிடைக்கப் பெற்றுள்ளன. சென்னையிலுள்ள தணிகைமணி வீட்டைத் திருப்புகழின் தாய்வீடு எனப் போற்றுவார் வெள்ளிமலைச் சுவாமிகள்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகள் தனது வாலிபப் பருவத்தில் உலக போகங்களில் தடுமாறித் தனது இளமையைக் கெடுத்துப் பிணியுற்று மனம் நொந்து திருவண்ணாமலையிலுள்ள வல்லாள மன்னன் கோபுரத்தின் உச்சியிலிருந்து உயிர் துறக்க வீழ்ந்தார். அங்கு கோயில் கொண்டுள்ள முருகவேள் அவரைத் தனது திருக்கரங்களாலே தாங்கிப் பாதுகாத்ததோடு அவரது பிணியையும் நீக்கிப் பிரணவ உபதேசம் செய்து உலகம் உய்யும் பொருட்டுத் திருப்புகழைப் பாடிப் பணிந்து "முத்தைத்தரு" என்று அடியையும் எடுத்துக் கொடுத்ததாகவும் வரலாறு கூறுகின்றது. இதனை அருணகிரிநாதரும் தமது திருப்புகழிலே கூறியுள்ளார்.

"ஆணவ அழுக்கடையு மாவியை விளக்கியநு
பூதியடை வித்ததொரு - பார்வைக்காரனும்" 21.

"ஆடக விசித்ரகண கோபுர முகப்பிலரு
ணபுரியினிற்கு மடையாளக் காரனும்
........ குறத்தி திருவேளைக்காரனே" 22.

"பாதமலர் பாடு நீ என்ன அடியேனுமெப்
படிபாட என்ற அளவில்
பத்தி தரு முத்தநகை அத்தியிறை வாவெனப்
பாடென்று சொல்லி இயலாற்

பூதலமுமெங்கிளையும் ஈடேறநாவிற்
பொறித்தவருரைத்த கவிதைப்
புத்தமுது பன்னிரு செவிக்கு நிறையக் கொண்டு
போதமுன் அளித்தருனினாற்..." 23.

அருணகிரிநாதர்க்கு அருள்புரிந்த முருகப்பெருமான் திருவண்ணாமலையில் வல்லாள மன்னன் கோபுரத்தின் வட பக்கம் கோபுரத்திளையனார் என்னும் பெயருடன் தரிசனம் தருகிறார். முருகப்பெருமான் அடியெடுத்துக் கொடுக்க அவர் பாடிய முதற்றிருப்புகழ்ப் பாடலே "முத்திக்கொரு வித்து" என அமைந்துள்ளது. ஆகவே திருப்புகழ் முத்திக்கு வழியாக விளங்குவதில் வியப்பொன்றுமில்லை. இம்முதற் பாடலே சைவ வைணவ சமரசத்தை நிலைநாட்டும் வகையிலும், வடமொழி, தென்மொழிப் பேதத்தைப் போக்கும் வகையிலும் அமைந்துள்ளதெனில் திருப்புகழ் ஒரு சிறந்த ஞானநூலாகத் திகழ்கின்றது என்பதற்கு யாதொரு ஐயமும் இல்லை, ஆறுமுகப்பெருமான் அடியெடுத்துக் கொடுத்த அப்பாடலை இன்று எத்தனைபேர் சரியாக வாசிப்பார்களோ? இறையுண்மையையும், பக்தியையும், திருப்புகழையும் சினிமா விழுங்கிவிட்டது! முற்றிலுமுண்மை. (தொடரும்...

## வாழ்க! வளர்க ஞானச்சுடர்

நமது சமூகத்தில் தற்போது பல்வேறு ஒலி, ஒளி மின்னணு அலைகள் நம்மை வலம் வருகின்றன. தொலைக்காட்சி வலைதள வெளிச்சங்களை நாம் வரவேற்காமலே நமது வீடுகளில் வந்து விடுகின்றன. ஆனால் அந்த ஒளி நம்மிடம் உள்ள இருளைக் கூட்டிவிட்டு உண்மை ஒளியை மறைத்து விடுகின்றது.

ஆனால் அமைதியையும், ஒழுக்கத்தையும், நல்லறிவையும், சமய அறிவையும் நமக்கு கொண்டுவந்து சேர்க்கும் ஞானச்சுடர் என்னும் பெட்டகம் அக, புற இருளை நீக்கி ஞான ஒளியை நமக்கு ஏற்றி வைக்கிறது.

இன்று தனிமனிதத் துதி, ஆபாசம், வன்முறை போன்றவை ஆக்கிரமிப்புச் செய்துள்ள இதழ்களுக்கு நடுவே அறிவுத் தெளிவையும் மன அமைதியையும் கொடுக்கும் ஞானச்சுடர், ஞானதீபமாக திகழ சந்நிதி முருகன் அருள் பாலிக்கின்றார்.

குடும்பத்தில் பெற்றோர் முதல் குழந்தைகள் வரை அலுவலகத்தில் மேலாளர் முதல் கனிஷ்டநிலை ஊழியர்வரை, கலாசாலை, கல்லூரிகளின் தலைமையாசிரியர், ஆசிரியர் முதல் மாணவர் வரை என அனைவரும் படித்துப் பலன் பெறக்கூடிய கருத்துக்களை தாங்கி வருகின்ற ஞானச்சுடர் அனைவருக்குமான மேம்பாட்டு இதழாகத் திகழ்கின்றது.

ஞானச்சுடர் இதழைப் படித்துப் பாதுகாத்து தொகுப்புக்களைத் திரட்டி வருகின்றனர் என்பதைப் பல வாசகர் அன்பர் வாயிலாகக் கேட்டு நான் மிகவும் ஆனந்தமும், மனநிறைவும் அடைந்துள்ளேன்.

வாழ்க! வளர்க! ஞானச்சுடர் என எனது சிரம் தாழ்த்தி சந்நிதி முருகனை வேண்டுகின்றேன்.

-ஆர்.வீ.கே-

*தெய்வீகத்தின் தனிமொழி மௌனமே.*

# பெற்ற தாயின் மாத்ரு பூஜை

– திருமதி பொ. செல்வக்காந்திமதி அவர்கள் –

ஒரு பெற்ற தாயின் குணாதிசயங்கள் தான் என்ன என்பதை யாவரும் அறிய வேண்டியது ஓர் விடயம்.

அவள் அன்பே உருவானவள். அவளுக்குப் பிரிவினை தெரியாது. பாசம் அவள் இரத்தத்தில் ஊறியுள்ளது. பரிவு அவளின் உடன்பிறப்பு. பொறுமையின் மறு பெயர் தாய்மை. அவள் ஈரநெஞ்சம் உடைய வள். உண்மையானவள். பிறருக்கு உதவவே அவள் பிறந்துள்ளாள். விட்டுக் கொடுப்பதே அவளின் பெருந்தன்மை. விவேகத்தில் சற்றும் சளைக்காதவள். அவளின் தியாகமே அவ ளது நிறம். அவள் நினைத்தால் சாதிக்க முடியாதது ஒன்றும் இல்லை. மலைபோல் துன்பம் வந்தாலும் தன்மானத்தை இழக் காமல் செயற்படுபவள். தாய் பத்து மாதம் குழந்தைப் பாரத்தை மனமுவந்து சுமப்பவள். தான் ஆழ்ந்து உறங்கும்போது, அருகில் உறங்கும் தன் குழந்தைமீது உட்காரும் ஈயை ஒட்டுபவள். கடைசியாக அவள் உணவை உட்கொள்ளும்போது அவளுக்கு உணவில்லாமல் போவது வீட்டுக்கு வீடு நடக்கும் சம்பவம்.

இவ்வளவு சிறப்பான குணாதிசயங் களை தாய் கொண்டதினாலேயே "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்ற பழமொழி பிறந்தது. கொடிய மகனாக இருந் தாலும் தாய்ப்பாசம் காட்டி உணவல்லவா கொடுப்பாள். இதனால்தான் "காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்ற பழமொழி தோன்றியது.

அழகான ஒரு திரைப்படப் பாடலைக் கவனியுங்கள். "அம்மா என்று அழைக்காத உயிரில்லையே- அம்மாவை வணங்காது உய்வில்லையே" என்ற ஜேசுதாசின் குரல் இனிமையானது. இறைவனது அன்பை ஒப்பீட் டோடு சொல்ல நினைத்தார். எல்லா உறவு களையும் தேடினார், அலசினார் மாணிக்க வாசகர். உலகத்திலே எது மிகுந்த அன்பு? கருத்து ஒருமித்த காதலர் அன்பா? துன்பம் வரும்போது துடிதுடித்து உதவும் நண்பர் களா? தம்பியுடன் தோள் வலிமைபோம் என்ற சகோதரர் உறவைப் பாடினார்களே அதுவா? அவையத்து முந்தியிருக்கச் செய்யும் தந்தை, தனையன் உறவா? இப்படிப் பலவாறாக அலசினார். இறுதியாக "பால் நினைந்தூட்டும் தாயினும் சால பரிந்து நீ" என்று பாடி முடித் தார். அன்பின் உச்சத்தை தாய் தன் மடி யில்த்தான் வைத்திருக்கிறாள். எவ்வளவு எழுதினாலும் அவள் தன் பெருமையை சொல்லமுடியாது. முற்றும் துறந்த துறவர் களான பட்டினத்தடிகளும், ஆதிசங்கரரும் தாய்க்குத் தனையன் செய்ய வேண்டிய கடமைகளை மறந்தார்கள் இல்லை. ஒருநாள் பட்டினத்தாரின் தாயார் இறந்து விடுகிறாள். சிதையில் தாயின் உடலை வைத்து எல்லோ ரும் காத்திருக்கிறார்கள். அவர் வரமாட்டார் என்று தாங்களே கிரியையைத் தொடங்கும் போது வந்துவிட்டார். ஈரல் ஒதுக்கி இடம் கொடுத்த மாதாவுக்கு கூந்தல் ஒதுக்கி கொள்ளி வைக்க வந்தார் பட்டினத்தடிகள். பட்டினத்தடிகள் அங்கு அடுக்கப்பெற்றிருந்த சிறு விறகுகளை ஒதுக்கி பச்சை வாழைப் பட்டையடுக்கி, அதன்மீது அன்னையாரை வளர்த்தி, "அந்திபகல் கையிலே கொண் டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ

மெய்யிலே தீ மூட்டுவேன்" என்று சொல்லி சில பாடல்கள் பாட பச்சை வாழைப்பட்டை கொழுந்துவிட்டெரிந்தது.

ஆதிசங்கரரும் தன் தாய்க்கு உன் கடைசி நேரத்தில் வந்து விடுவேன் என்று வாக்குக் கொடுத்தாராம். அப்படியே அவர் வந்து ஜெகத்குருவாக இருந்தும்கூட தனது தாய்க்கு கொள்ளி இட்டு காரியம் செய்வேன் என்றுகூறி, கிராமத்தின் எதிர்ப்பையும் பொருட் படுத்தாது எல்லாக் காரியங்களையும் செய் தார். வயிற்றில் சுமந்த தெய்வத்தை தோளில் சுமந்து தோட்டத்திலே அன்னையின் சட லத்தை இறக்கி வைத்தார். "ஹோ! அக்கினி பகவானே! புனிதமான என் தாயின் உடலை உனக்கென்று அளிக்கிறேன் ஏற்றுக்கொள் ஏற்றுக்கொள்" என்றார். குபீரென்று அக்கினி சுழன்றது. சிதையை வலம்வந்து பற்றிக் கொண்டது. தாய்! தாய்! அந்த உறவுக்கு ஈடே இல்லை. தொந்திசரிய முன்னூறு நாள் சுமந்தவள் அல்லவா? வருடத்தில் ஒருநாள் ஆவது இப்படிப்பட்ட தாய்க்கு பூஜை செய்ய வேண்டாமா?

தெய்வத் தாய்க்கு 10 நாட்கள் திரு விழா எடுக்கும் நாம், ஒருநாள் நாம் தாயைத் தெய்வமாக உட்கார வைத்து, மாலை அணி வித்து, பாதபூஜை செய்து, மந்திரம் சொல்லி, பிரசாதம் படைத்து ஆராத்தி எடுக்க வேண்டாமா? இத்திருவிழாவை "மாத்ருபூஜை" என்று பெயரிட்டு, மாணவர்கள், பிள்ளைகள், பெரியவர்களும்கூட தாய்மாரின் கால்களைக் கழுவி துடைத்து, விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு மலர்தூவி வணங்குதல் தாய்க்கு செய்யும் நன்றிக் கடனாகும். வருடத்தில் ஒருமுறையேனும் வணங்கி வந்தால் குடும்பம் தழைத்தோங்கும். பெரியவர்கள் செய்வதைப் பார்த்துக் குழந்தைகளும் பின்பற்றுவதற்கு ஒரு வழிகோலாகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

## ஆன்மிகச் சிந்தனை

தனக்குத் தானே தலைவனாயிருக்கும் அளவிற்கு தன்னை தகுதிப்படுத்திக் கொள்பவனே மனிதன் ஆவான். இப்படிப்பட்டவன் ஆண்டவனுக்கு நிகராக மதிக்கத்தக்கவன். தரும சிந்தனை என்பது உயர்ந்தவர்களுக்கு மட்டுமே உள்ள குணம் என்று நினைக்கிறோம். அது ஒவ்வொருவரும் தங்களைச் சுற்றியுள்ள மனிதர்களுக்குச் செய்யவேண்டிய அடிப்படைக் கடமையாகும். தியானத்தை ஒருபோதும் கைவிடாதீர்கள். அதனால் உண்டாகும் சக்தியை எளிதாக எடை போடாதீர்கள். மனிதன் தான் நினைத்தபடியே வாழும் தகுதியைத் தியானம் தரவல்லதாகும். கலியுகம் எதுவரை நீடிக்கும் என்றால், மனிதன் எதுவரை அநியாயம் செய்கிறானோ அதுவரை நீடிக்கும். அநியாயம் நீங்கினால் உலகில் கலியின் ஆட்சி முடிவுக்கு வந்துவிடும்.

இந்த உலகத்திலுள்ள எல்லாத் துன்பங்களைக் காட்டிலும் வறுமைத் துன்பம் மிகவும் கொடியது. வறுமையே எல்லாச் சிறுமைகளிலும் மோசமான சிறுமையாகும். மற்ற உயிர்களிடம் கருணையும் அன்பும் கொண்டால் உயிர் வளரும். அன்பிருக்கும் இடத்தில் ஜீவசக்தி குடிகொண்டிருக்கும். அவனிடத்தில் உலக உயிர்கள் அனைத்தும் நட்போடு உறவாடும்.


-பாரதியார்-

*வெறும் ஏட்டுக் கல்வியால் கடவுளை அடைய முடியாது.*

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 21. பரமன் ரமணன்



ரமணநகர்வாசியான ராஜபாளையம் ரமணியம்மா பின்வரும் நிகழ்ச்சிகளை என்னுடன் பகிர்ந்து கொண்டார்:

ஒரு சமயம் நான் பகவான்முன், ஹாலில் உட்கார்ந்திருந்தபோது, அடியவரொருவர் கொண்டு வந்து சமர்ப்பித்த ஏதோ பழங்களின் துண்டுகள் நிறைந்த தட்டு பகவான் முன்னால் வைக்கப்பட்டிருந்தது. ஒரு குரங்கு உள்ளே வந்தது. பகவான் சொன்னதனால் தொண்டர், மனமில்லா மலேயே அதற்கு ஒரு துண்டு கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு அது குதித்தோடி விட்டது. ஆனால் சீக்கிரமே மற்றொரு வானரம் நுழைந்தது. (முதல் வந்தவர் தெரிவித்திருப்பார்!) அதற்கும் ஒரு துண்டு கிடைக்கவே, மூன்றாவதாக ஒரு மந்தி தன் பங்கைப் பெற வந்தது, பகவான் அதற்கும் ஒரு பழத்துண்டு அளித்தவாறு, "சரி, சரி இப்போ நீ போய் வேறு யாரிடமும் தெரிவிக்காதே. இல்லாவிடில் இவர்கள் என்னிடம் கோபிப்பார்கள்" என்றதும் அந்தப் பயல் தன் பங்கை வாங்கிக்கொண்டு போய்விட்டது. அதன் பின் அவன் தோழர்கள் வேறு யாரும் வராததால் பகவான் சொன்னபடி நடந்து கொண்டானென்று தெரிகிறது.

சுமார் 75வயது மதிக்கத்தக்கவளும், கந்தல் துணி உடுத்த, பரம ஏழையான ஒரு தேன் சேகரிக்கும் மூதாட்டி, கையில் சிறு பாத்திரத்துடன் ஹாலுக்கு வந்தாள். பகவானருகில் வந்து, குனிந்து பகவான் முகத்தை நன்றாகப் பார்ப்பதற்காக, கண்களுக்கு மேல் கையை வைத்து எதிர் வெளிச்சத்தைத் தடுத்துக் கொண்டு பகவானைக் கண்களால் பருகியவாறு, செல்லப் பெயர்களால் அதை அழைத்துக் கொண்டே, திரும்பத் திரும்ப நமஸ்கரித்து, அடக்கமுடியாத ஆனந்தத்தை வெளியிட்டாள். கடந்த இருபத்தேழு வருடங்களாகத் தன் "செல்ல"த்தைப் பார்க்க வருவதற்கு முயன்று கொண்டிருப்பதாகவும், இப்போதுதான் முடிந்ததென்றும் தெரிவித்தாள். பகவான் உருகும் அன்புடன், "எனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறாய், பாட்டி. அதைக் கொடு சாப்பிடுகிறேன்" என்றது. (குசேலனின் அவல் ஞாபகம் வந்ததோ!) பாட்டி தான் கொண்டுவந்த தேனை எடுத்துக் கொடுத்தாள். பாட்டிக்குச் சாப்பாடு போட்டால் நல்லது என்றது பகவான். இந்தச் சொல்லை உத்தரவாக ஏற்று சின்னஸ்வாமி உடனே நிறைவேற்றினார். "யாராவது அவளுக்கு புடவை தர விரும்பலாம்" என்று பகவான் சொல்லவே, துடிப்புடன் எழுந்த பணியாளரிடம் தாழ்ந்த குரலில், "இவர்களுக்கெல்லாம் விலை உயர்ந்தவை பழக்கமிருக்காது. அதனால் எளிமையாக, சாதாரணமான ஏதாவதுதான் பொருத்தமாக இருக்கும் என்றது. பின்னர், சேலை வந்ததும் பகவான் பாட்டியிடம், பாட்டி பணக்காரர்கள் யாரோ இதை உனக்குத் தர

விரும்புகிறார்கள். தயவு செய்து பெற்றுக் கொள்" என்று பணித்தது. அந்தப் பாட்டி அதைக் கொஞ்சம் தயங்கித்தான் பெற்றுக் கொண்டாள் என்பதும் ரமணியம்மாளுக்கு நினைவிருந்தது.

உணவு விஷயம் தம்பிக்குச் சொன்ன தும், உடை குறித்து நளினமாகப் பணியா ளரை மெதுவாகப் பணித்ததும், கடைசியில் அன்பளிப்பை வாங்கிக் கொள்ளுமாறு "தேன் பாட்டியைத் தூண்டியதும் ரமணியம்மாளைப் பரவசப்படுத்தின. தெரிந்து, அறிந்து, புரிந்து, பரிந்து அருள் புரியும் பரம்பொருள் அது வன்றோ?

* * * *

ரமணியம்மாள் மேலும் தொடர்ந்தார்: "ஆரம்ப காலங்களில் பகவான் மலைமேல் இருந்தபொழுது கிழ இடைச்சி ஒருத்தி அடிக் கடி பகவானை தரிசித்து. "சாமி! நாள் முழுதும் இப்படி உட்கார்ந்திருக்கிறாயே? இந்தா! இதையாவது சாப்பிடு" என்று சொல்லி தான் கொண்டு வந்திருக்கும் கூழை பகவானுக்குக் கொடுப்பாள். இந்தக் கிழவி ஏறத்தாழ 1948ஆம் வருட சிவராத்திரி தினத் தன்று ஒரு பெரிய பானையில் கூழும், அத னுடன் தொட்டுக்கொள்வதற்கு அரிந்த வெங் காயத்தையும் கொண்டு வந்தாள். அந்த விழா நாளில் அங்கு வந்திருந்த அனைவருக்கும் பலமான விருந்து ஏற்பாடாகியிருந்தும், பக வான் மற்ற எல்லோரையும் அதைச் சாப்பிடச் சொல்லிவிட்டு தான் மட்டும் அந்தக் கூழை விரும்பிச் சாப்பிட ஆரம்பித்தது. அங்கிருந்த அனைவரும் தாங்களும் அக்கூழை சாப்பிடுவ தாகவும், மேலும் பகவான் அந்த விருந்தில் சிறிது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட் டுக்கொண்டதன் பேரில் பகவானும் அதற்கு ஒப்புக்கொண்டார். "பகவான் போஜன சாலை யில் உட்கார்ந்து அனைத்துப் பண்டங்களும் தன் இலையில் பரிமாறப்படும்வரை காத்திருந்து, பின் அனைத்தையும் ஒன்றாகக் கூழ்போல் கலந்து அருந்தியது. அப்பொழுது அங்கிருந்த நான், பகவானை மிகவும் உன் னிப்பாகக் கவனித்தேன் என்று ரமணியம்மாள் தெரிவித்தார்.

* * * *

ஒருநாள் பெரிய கோவில் பாதாள லிங்கத்தைப் பார்த்துவிட்டு, அருணாசலனை யும் தரிசித்துவிட்டு, ஆச்ரமத்துக்குத் திரும்பி வந்தேன். இன்றுகூட நான் எப்படி தைரியமாக பகவானெதிரில் நின்று, அதன் தூண்டுதலின் பேரில், பாதாள லிங்கத்தின் ஜீர்ணமான நிலை பற்றி விவரித்தேனென்று எனக்கு ஆச் சரியமாக இருக்கிறது. பகவான் கோவில் யானையைப் பற்றி விசாரித்துவிட்டு அருணா சலேச்வரர் பிரசாதம் பெற்றுக்கொண்டாயா? என்று கேட்டதும்தான் இத்தனை நேரமும் உள்ளங்கையிலேயே அதை வைத்திருந்தும் பகவானுக்குச் சமர்ப்பிக்காமலேயே நின்று கொண்டிருந்திருக்கிறேன் என்பது எனக்கு உறைத்தது. உடனே நான் கையை விரித்து நீட்டவே, பகவான் சிறுவனைப்போல் ஒரு சிட்டிகை விபூதியை எடுத்தணிந்து கொண்டது.

எப்பொழுதாவது பகவானிடம் நேரா கக் கேள்வி ஏதாவது கேட்டதுண்டா? என்று ரமணியம்மாளை நான் கேட்டதற்கு அவர் "பகவான் முன்னிலையில் சந்தேகங்களெல் லாம் தானே மறைந்துவிடும். அல்லது நாம் கேட்க நினைத்த அதே விஷயமாக ஹாலில் சர்ச்சை எழ, அதில் நிகழும் வினா விடைகளின் மூலம் நமக்கும் விடை கிடைத்துவிடும். அத னால் பகவானிடம் வார்த்தைகளால் எதுவும் கேட்கவேண்டிய அவசியமே ஏற்படவில்லை" என்றார்.

* * * *

தெற்கில் வெகு தூரத்திலிருந்து எப் பொழுதாவது வரும் ஒரு பண்டிதர் குறிப்பிடத் தக்க ஒரு விஷயத்தை என்னிடம்

*தீய பழக்கங்களிலிருந்து மீளவழி நல்ல பழக்கங்களைப் பழகுதல்.*

தெரிவித்தார். பாலக்காட்டைச் சேர்ந்த டாக்டர் பத்மநாபய்யர் பகவான் பேரில் அனேக பாட்டுக்கள், பஜனைகள் இயற்றியிருக்கிறார். (தஞ்சாவூர் பக்தை ஜானகியம்மாளின் மாப்பிள்ளை) எல்லோரையும்போல் அவரும் தான் எழுதியதைப் பகவானிடம் திருத்துவதற்காகக் காண்பிப்பார். இலக்கணத்திலோ, அக்ஷரத்திலோ பிழையிருந்தால் திருத்துமே தவிர, பகவான் சாதாரணமாக விஷயத்தைத் திருத்துவதில்லை. அன்று பத்மநாபய்யர், ஒரு பாட்டைக் காண்பிக்க பகவான் அதில் ஒரு மிகச் சிறு திருத்தம் செய்தது. திருத்தமென்னவோ மிகச் சிறியது. மாற்றமோ மிகப் பெரியது.

பாட்டின் ஒரு வரியில் டாக்டர் பத்மநாபன், எழுதிய "நானும் அவரும் ஒன்றே", என்றிருந்ததை பகவான் "நானும் அவரில் ஒன்றே" என்று மாற்றியது. அந்த இரண்டக்ஷரங்கள் மாறியதால் எத்தகைய மாற்றம்!.

(தொடரும்...

## ஆன்மீகம் மற்றும் மருத்துவம் கூறும் துளசியின் மகத்துவம்

துளசி இலையின் நுனியில் நான்முகனும் அடியில் சங்கரனும் மத்தியில் நாராயணனும் வசிப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. துளசி அனைத்து இலை, பூ, வேர்கள், கிளைகள், நிழல் எல்லாம் ஆன்மீகமானவை. பக்தியுடன் துளசியின் இலையைக் கிருஷ்ணருக்கு அளிப்பவர் அவர் அருகிலேயே வாழ்வர். துளசியின் மண்ணை எடுத்து உடலில் பூசிக்கொண்டு கிருஷ்ணரை வணங்குபவர், ஒவ்வொரு நாளும் நூறு நாள் பூஜை செய்த பயனை அடைவர்.

*துளசியின் மருத்துவ குணங்கள்:*

எளிதாகக் கிடைக்கும் துளசியில் மகத்துவங்கள் ஏராளம். துளசிச் செடியை ஆரோக்கியமான மனிதன் தினமும் தின்று வந்தால் குடல், வயிறு, வாய் தொடர்பான பிரச்சினைகள் அவன் வாழ்நாள் முழுவதும் வராது. ஜீரண சக்தியும், புத்துணர்ச்சியையும் துளசி இலைமூலம் பெறலாம். வாய் துர்நாற்றத்தையும் போக்கும். நமது உடலுக்கான கிருமிநாசினியாக துளசியை உட்கொள்ளலாம். துளசி இலையைப் போட்டு ஊற வைத்த நீரைத் தொடர்ந்து பருகி வந்தால் நீரிழிவு வியாதி நம்மை நாடாது. உடலின் வியர்வை நாற்றத்தைத் தவிர்க்க குளிக்கும் நீரில் முந்தைய நாளே கொஞ்சம் துளிசி இலையைப் போட்டு வைத்து அதில் குளித்தால் நாற்றம் நீங்கும். தோலில் பல நாட்களாக இருக்கும் படை, சொரிகளையும் துளசிஇலையால் குணமடையச் செய்ய முடியும். துளசி இலையை எலுமிச்சை சாறுவிட்டு நன்கு மைபோல் அரைத்து அந்த விழுதைத் தோலில் தடவி வந்தால் படைச்சொரி மறையும். சிறுநீர் கோளாறு உடையவர்கள், துளசி விதையை நன்கு அரைத்து உட்கொண்டு வரவேண்டும். கூடவே உடலுக்குத் தேவையான அளவிற்கு தண்ணீரும் பருகிவர பிரச்சினை சரியாகும். துளசி இலைக்கு மன இறுக்கம், நரம்புக் கோளாறு, ஞாபகசக்தி இன்மை, ஆஸ்துமா, இருமல் மற்றும் பிற தொண்டை நோய்களை உடனுக்குடன் குணமாக்கும் சக்தி உண்டு. துளசி இலைச் சாறில் தேன், இஞ்சி முதலியன கலந்து ஒரு தேக்கரண்டி அருந்தலாம். சளி, இருமல் உள்ள குழந்தைகளுக்கு தினமும் மூன்றுவேளை மூன்று தேக்கரண்டி இந்த துளசிக் கஷாயம் கொடுத்தால் போதும்.

*இன்பம் பனித்துளி போன்றது. அது சிரிக்கும்போது உலர்ந்துவிடும்.*

# கடவுளை வழிபட வேண்டுமா?

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

இது ஒரு அருமையான கேள்வி. ஏன்? இன்று நாம் வாழ்வது அவசர உலகம். நிற்க இருக்க உண்ண உறங்க நேரமில்லை. எந் நேரமும் நம்முள்ளே இருக்கிற ஆறு பகை வர்களும் ஐந்து கள்வர்களும் பிழையான வழியில் நம்மை அலைக்கழிக்கிறார்கள். பணம் வேண்டும், பட்டம் பதவி வேண்டும், மற்றவர்களிலும் பார்க்கத் தான் மேலானவன், கனவான், தர்மசீலன் என்ற பெயர் எடுக்க வேண்டும் என்பதே மனிதனின் பேரவா. அதற் காக பொய், களவு, வஞ்சகம், ஊழல் மோசடி கள் செய்வதில் பின் நிற்பதில்லை. இதனால் மனிதனுடைய நெஞ்சில் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல்லால் மனம் தூய் மையை இழந்து அழுக்குப் படிந்து விடுகிறது. தூய்மையான உள்ளத்திற்றான் கடவுள் சிந் தனை உண்டாகும்.

ஏழு வகைப் பிறவிகளில் ஐந்தறிவுள் ளவை விலங்குகள். ஆறு அறிவுள்ளவர்கள் மனிதர். ஆறாவது அறிவு பகுத்தறிவு. மனி தருக்கு விஷேடமாகக் கிடைத்தது. அதனால் மனிதன் மேலானவன். ஐந்தறிவுள்ள விலங்கு கள் உலாவுகின்றன; உணவு தேடி உண்கின் றன. இன விருத்தியும் செய்கின்றன. மனிதர் களாகிய நாமும் உழைக்கிறோம்; உண்கி றோம்; உடுக்கின்றோம்; உறங்குகின்றோம்; பிள்ளைகளைப் பெற்றுச் சந்ததியை வளர்க் கிறோம். எனினும் விலங்குகட்கும் மனிதனுக் கும் ஒரு வித்தியாசமுண்டு. விலங்குகட்கு சிந்திக்கும் திறனும் செயலாற்றும் திறனும் இல்லை. மனிதன் சிந்திக்கிறான்; செயலாற் றும் திறமும் உண்டு. பகுத்தறிவினாலும் தெய்வ உணர்ச்சியாலும் மனிதன் விலங்கு களிலும் மேலானவன். "மக்களே போல்வர் கயவர்" இவர்களை மாக்கள் (விலங்குகள்) எனச் சொல்வோம்.

மனித வாழ்வுக்கு உடை அவசிய மானதுபோல் கடவுள் சிந்தனையும் அவசியம். மனித வாழ்க்கைக்கு ஏன் கடவுளை வணங்க வேண்டும்? கடவுளை வணங்காதவர் வாழ வில்லையா? எனச் சிலர் கேட்கலாம். அவன் நாஸ்திகன். நமக்கு இந்த உடம்பு ஏன் கிடைத்தது. யார் இதைத் தந்தவர்? அதை நாம் சிந்திக்க வேண்டும். நமது உடம்பில் எத்தனை உறுப்புகள் உண்டு. அவற்றை நமக்குத் தந்த இறைவனை வணங்குவதற்கே அவை யாவும் பயன்பட வேண்டும். நாவலர் ஐயா, "நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற் கேயாம்" எனச் சொல்லியுள்ளார். நாவலர் ஐயா சரீரம் என்ற சொல்லில் அடக்கியதை, அப்பர் பெருமான் உடம்பிலுள்ள அத்தனை உறுப்புகளும் (தலை முதல் கால்கள் ஈறாக) கடவுளை வணங்கவேண்டும்- எந்நேரமும் நெஞ்சில் இறை சிந்தனை வேண்டும்- நாவா னது இறைவன் பெருமைகளைச் சொல்லி வாயார வாழ்த்தவேண்டுமென தான் பாடிய திருவங்க மாலையில் சொல்லியுள்ளார். வணங்கத் தலையும், வாழ்த்த வாயும் தந்த இறைவனை நாம் ஏன் வணங்க வேண்டும் எனக் கேட்பது மகா பாவமல்லவா?

கடவுள் வழிபாட்டால் முன்னை நல் வினை கூட்டால் இகபர சுகம் இரண்டையும் அடையலாம். இறைவனை வழிபடுவது நமது அன்றாட கடமைகளில் ஒன்று. வீட்டிலும் வழி படலாம். கோவிலுக்குச் சென்றும் வழிபடலாம்.

*இறைவனின் திருநாமத்தால் ஆகாதது எதுவுமே இல்லை.*

முற்பிறவி இப்பிறவிப் பாவ வினைகள் சிறி தளவாவது குறையும்; பக்தி பெருகும்.

கடவுள் வழிபாட்டால் இம்மை மறுமை இரண்டிலும் பயனடையலாம். சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் ஒரு வகை. லௌகீக வாழ்விலுடையோர் வேறுவகை. அப்பர் சுவாமி, காரைக்காலம்மை, பட்டினத்தடிகள் சிவன்பால் பத்தி கொண்டவர்கள். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனதில் மறவாதிருக்க வேண்டும்" "திருவாய் பொலி யச் சிவாயநமவென்று நீறணிந்தேன் தருவாய் சிவகதி" என வழிபடுகிறார் அப்பர் சுவாமிகள்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் பிறவாமை வேண்டும் மீண்டும் பிறந்தால் உன்னை மறவாத மனதை எனக்குத்தா. அது மட்டுமல்ல நீ திருநடனம் செய்யும்போது உன் பாதங்களின்கீழ் இருக்க அருள்புரிவாய்" என அழுதழுது வேண்டுகிறார் காரைக்கால் அம்மையார்.

"பிறவாதிருக்க வரம் பெறல் வேண் டும்; பிறந்து விட்டால் இறவாதிருக்கவும் ஒரு மருந்துண்டு. அதுதான் தில்லையம்பலவாணர் அடிக்கமலம் மறவாதிருக்க வேண்டும். அது தான் நீ சாகாமல் இருக்க மருந்து" எனப் பட் டினத்தடிகள் கூறுகிறார்கள். இவர்களுடைய வழிபாடு இறைவனை அடைய வேண்டுமென் பதே.

ஆனால் நம்மில் சிலர் வாழ்நாள் முழு வதும் கஷ்டங்கள் அனுபவித்து கடைசியில் இறைவா எனக்கேன் இவ்வளவு துன்பம்? இத்துன்பத்திலிருந்து விடுபட அருள்வாய் எனக் கேட்பர். இன்னொருவர் பெருமானே! நான் முற்பிறவியில் செய்துகொண்ட புண் ணியம், உனது திருவருள், எனது முயற்சியி னால் எல்லாவகையான பேறுகளும் பெற்றுள் ளேன். இதுவே திருப்தி என கடவுளைப் போற்றுவான். இன்னும் சிலர் கல்வி, செல்வம், உத்தியோகம், பட்டம் பதவி தா எனப் பல நேர்த்தி செய்வர். பாலாபிஷேகம் செய்வேன், காவடி எடுப்பேன், மொட்டை அடிப்பேன் எனக்கு வந்துள்ள நோயை மாற்று. நினைத்த காரியம் நடந்தால் நின் சந்நிதிக்கு வருவேன். நூறு தேங்காய் உடைப்பேன். நூற்றெட்டு சிட்டி நெய் விளக்கேற்றுவேன் இது கடவுளு டன் செய்யும் வியாபாரம். நமக்கு என்ன தேவையோ அதை முன்பிறவிப் புண்ணிய பாவங்களுக்கேற்பத் தந்துள்ளார். கடவுள் எனக்கு ஏதும் தா எனக் கேட்கிறாரா? "வேண் டத்தக்கதறிபவன், வேண்ட முழுவதும் தரு வோய் நீ நான் வேண்டுவது எதுவாயினும் அது உன் விருப்பம்" ஆகவே நாம் எதையும் தா என்று கேட்பது தவறு.

அடுத்து, கடவுளை வணங்க கோயி லுக்குப் போகும்போது வசதிக்கேற்ப சூடம், தேங்காய், அர்ச்சனைப் பொருட்கள், பூ, பால், இளநீர் எனக்கொண்டு போவோம். வெறுங் கையோடு போகலாகாது. "யாவர்க்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை" எனத் திருமூலர் சொல்லியுள்ளார். மக்களுக்குக் கொடுப்பது தான் மகேஸ்வரனுக்குச் சேரும். ஒரு பாடல் இதோ.

" படமாடக் கோயில் பகவற்கொன்று ஈயின்
நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயின்
படமாடக் கோயில் பகவர்க்காகும்"

இறைவன் உலகிலுள்ள யாவற்றையும் படைத்து, எறும்பு முதல் எண்ணாயிர கோடி ஜீவராசிகட்கும் வேண்டுவன தந்து பாதுகாப்பவர். இறைவனுக்கு நாம் கொடுக்க வேண்டியது

*மனதில் சுயநலம் உள்ள வரையில் ஒருவனுக்குக் கடவுள் பக்தி வாய்க்காது.*

எதுவுமேயில்லை. மனத்தைத் தூய்மையாக வைத்து இறை சிந்தனையோடு நாம் எதைச் செய்தாலும் பக்தியோடு அர்ப்பணித்தால் அதை அவன் ஏற்றுக்கொள்வான்.

இறைவன் நம்மிடம் எதை விரும்புகிறான். மூன்றே மூன்றுதான் எனக் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை சொல்கிறார்.

(1) வெள்ளை நிற மல்லிகை யோவேறெந்த மாமலரோ
வள்ளலடி யிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

(2) காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாம் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

(3) பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

உள்ளக்கமலம், கூப்பியகைக் காந்தள், நாட்டவிழி மூன்றையும்தான் கடவுள் விரும்புகிறார்.

ஆகவே நாம் எம் உள்ளத்தைத் தூய்மையாக வைத்து மனதில் இறைவனை இருத்தி மனக்கண்ணால் தரிசித்து கைகளைக் கூப்பி வணங்குவோம்.

---

## கடவுள்

தன்னைக் காணவந்த அன்பர்களிடம் அளவளாவிக் கொண்டிருந்தார் ஒரு துறவி. “ஞானி, மற்றவர்களின் அனுபவங்களைக் கண்டுதான் பாடம் கற்கிறார். சாதாரண மனிதன், தனக்கு ஏற்படும் அனுபவங்களால் பாடம் கற்கிறான். ஆனால் மூடன், எந்த வகையிலும் பாடம் கற்பதில்லை!” என்று கூறினார்.

கூட்டத்திலிருந்த ஒருவர், தனக்குக் கடவுள் நம்பிக்கை ஏற்படவும், ஆன்மிகத்தில் ஈடுபாடு கொள்ளவும் ஓர் அற்புதத்தை நிகழ்த்திக் காட்டுமாறு கேட்டார். “சட்டென்று துறவி அவரிடம், “யாராவது உங்களை அடித்தால் உங்களுக்கு உண்டாகும் வலியைப் பிறருக்குக் காட்ட முடியுமா?” என்று வினவினார். அந்த நபருக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது யோசித்தபிறகு துறவியிடமே கேட்டார்.

“வலியின் உணர்வைப் போலவே கடவுளையும் ஒருவரால் மற்றவருக்குக் காட்டமுடியாது. அதைத் தாமாகவேதான் அனுபவித்துப் புரிந்துகொள்ள முடியும். கடவுள் இருக்கிறார் என்பதை நிரூபிக்க எந்த நிருபணமும் தேவையில்லை. அப்படிச் செய்ய முற்பட்டால் அது வீண் முயற்சியே!” என்றார் துறவி. கடவுள் இருப்பதை எளிமையாகப் புரிய வைத்த துறவியைப் பணிந்தார் அந்த நபர். -பக்தி-

கடவுள் வேறு சத்தியம் வேறில்லை. கடவுளே சத்தியம், சத்தியமே கடவுள்.

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



### 36. திருவருளும் நிலமும்

தரையை அறியாது தாமே திரிவார்;
புரையை உணரா புவி.

**பொருள்:**

நிலமே எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் இருந்து அனைத்தையும் தாங்கி நிற்கிறது. ஆயினும் மாந்தர் தம்மைத் தாங்கி நிற்பது நிலம் என்பதனைச் சிறிதும் நினைத்துப் பார்ப்பதில்லை. நிலத்தின் உதவியை அறவே மறந்து தாமே தமக்கு ஆதாரம் என்று எண்ணித் திரிவர்.

அதுபோலத் திருவருள்தான் தம்மைத் தாங்கி நின்று நடத்துகிறது என்பதனைச் சிறிதும் உணராமல் உயிர்கள் இவ்வுலகில் வாழ்கின்றன.

**சொற்பொருள்:**

தரையை அறியாது- மாந்தர் நிலத்தின்மேல் வாழ்ந்தும், நிலம்தான் தம்மைத் தாங்கி நிற்கிறது என்பதை நினையாமல், தாமே திரிவார்- தாமே தமக்கு ஆதாரம் என்று எண்ணித் திரிவர். (அதுபோல) புவி- உயிர்கள், புரையை உணரா- திருவருளால் எல்லாவற்றையும் பெற்று நின்றும், அவற்றைத் தந்து தம்மை வழிநடத்துவது திருவருள் என்பதைச் சிறிதும் உணர்வதில்லை.

**விளக்கம்:**

*திருவருளே ஆதாரம்:*

இறைவனது திருவருள் அவனது திருவடியாகச் சொல்லப்பெறும். அளவிடற்கரிய இறைவனது பெருமையைக் கூற வந்த மணிவாசகர், அவனது திருவடி கீழுலகம் ஏழினுக்கும் கீழாக உள்ளது என்று கூறுகிறார்.

"பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்" (திருவெம்பாவை 10)

இதன் கருத்து இறைவனது திருவடியே எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருக்கிறது என்பதாகும். எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருந்தாலன்றித் தாங்குவது என்பது அமையாது. அப்படிப்பட்ட ஆதாரப்பொருள் திருவருள்.

*நல்ல எண்ணமும் நற்செயலும் வீண்போவதில்லை.*

திருவருளே ஆதாரம் என்பதை எப்படி விளங்கிக் கொள்வது? எல்லோருக்கும் தெரிந்த ஓர் எடுத்துக்காட்டின் மூலம் அவ்வுண்மையை விளங்க வைக்கிறார் ஆசிரியர். நிலம்தான் நம்மையெல்லாம் தாங்கி நிற்கிறது. நிலமாகிய ஆதாரம் இல்லையென்றால் நம்மால் நிற்க முடியுமா? ஓடமுடியுமா? நிமிர்ந்து கை வீசி நடக்கத்தான் முடியுமா? அந்த நிலத்தைப்போல இருப்பது திருவருள். நமது வாழ்வுக்கு முதலாக இருந்து தாங்கி நடத்துவது திருவருள்.

*அன்றாட வாழ்க்கையில் உணரலாம்:*

இத்தகைய திருவருளை எல்லோரும் அவரவருடைய வாழ்க்கையில் நன்றாக உணரலாம்; வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலேயும் உணரலாம். அதற்கு மனம்தான் வேண்டும்.

எதிர்பாராத நிகழ்ச்சிகள் நம் வாழ்க்கையில் எத்தனையோ நடக்கின்றன. சான்றுக்கு ஒன்றைக் காட்டலாம். ஒரு திரைப்படம் பல மாதங்களாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் அப்படி என்னதான் இருக்கிறது என்று பார்க்க வேண்டும் என்ற ஆசை நமக்கு! நமக்கு இருக்கின்ற ஆசை மனைவிக்கும் இருக்காதா? ஆகவே அவளையும் அழைத்துச் செல்லலாம் என்று முடிவு செய்கிறோம். ஒரு நண்பரோடு தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு அந்தப் படத்திற்கு இரண்டு நுழைவுச் சீட்டுக்கள் வேண்டும் என்று சொல்லுகிறோம். அவரும் மாலை 5 மணிக்கே கொண்டு வந்து தருவதாக வாக்களிக்கிறார். (அது அவரால் மட்டுமே முடியும்!). அதன்படி நாமும் காத்திருக்கிறோம். அந்த நேரமும் வந்தாயிற்று. ஆனால், அவர் வரவில்லை. நேரம் செல்லச் செல்ல நம் மனம் பதைக்கிறது. அவரோ கடைசி வரையில் வரவேயில்லை. எப்படியிருக்கும் நமக்கு? அந்த நண்பரை மனதிற்குள் திட்டித் தீர்க்கிறோம்.

மறுநாள் காலையில் செய்தித்தாளைப் பார்த்ததும் நாம் அதிர்ந்து போகிறோம். நாம் போக இருந்த அந்தத் திரையரங்கு தீப்பற்றிக் கொண்டதாம். தீக்குப் பலியானோர் பலர். உயிர் அச்சத்தோடு ஓடிய மக்கள் கூட்டத்தில் மிதிபட்டு மாண்டோர் மிகப் பலர். படுகாயங்களோடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டோர் இன்னும் பலர். இந்தச் சோகச் செய்தியைப் படித்ததும் நேற்று அந்த நண்பர் வராததே நல்லதாய்ப் போயிற்று என்று நினைக்கிறோம்; இறைவனுடைய திருவருள் என்று நினைக்க நமக்கு மனம் இல்லை.

*மாந்தரது செருக்கு:*

எல்லா நலம் தீங்குகளையும் திருவருள் வருவிக்கிறது என்பதை உணராமல் மாந்தர் நன்மை வரும்போது நம்முடைய பெருமையால் அதனை அடைந்தோம் என்று செருக்குக் கொள்கிறார்கள்; தீங்கு வரும்போது பிறர் செய்தார் என்று எண்ணிக் கோபம் கொள்கிறார்கள்.

கோபுரத்தின் கீழ்ப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஒரு பொம்மை நினைத்ததாம். இவ்வளவு உயரமான கோபுரத்தை நானல்லவா தாங்கி நிற்கிறேன்! நானில்லை என்றால் இந்தக் கோபுரம் இப்படி நிமிர்ந்து நிற்க முடியுமா? என்று எண்ணிச் செருக்குக் கொண்டதாம்! அதுபோல மாந்தர் திருவருளை மறந்து தாமே மற்றவர்களைத் தாங்குவதாக எண்ணிக் கொள்கிறார்கள்; "நான் இத்தனை பேருக்குத் தலைவன்" என்று அகந்தை கொள்கிறார்கள்.

*நல்ல நட்பு நலம் தரும்.*

இ:.து எது போன்றது எனில், எல்லாரையும் எல்லாவற்றையும் தாங்குவது நிலமாக இருக்க, அதனை மறந்து அவரவரும் தாமே தமது ஆற்றலால் நிற்பதாகவும், உலவுவதாகவும் கருதிக் கொள்வது போன்றதாம்.

### 37. திருவருளை இழந்தவர்

மலை கெடுத்தோர் மண் கெடுத்தோர் வான் கெடுத்தோர் ஞானந்
தலை கெடுத்தோர் தற்கேடர் தாம்.

**பொருள்:**

திருவருள் உணர்வை இழந்தவர் மலையை இழந்தவரோடு ஒப்பர்; நிலத்தை இழந்தவரோடு ஒப்பர்; வானை இழந்தவரோடு ஒப்பர். அவர் தமக்குத் தாமே கேடு செய்து கொள்பவர் ஆவார்.

**சொற்பொருள்:**

ஞானம் தலை கெடுத்தோர்- சிவஞானமாகிய திருவருளை உணராது வாழ்வோர், மலை கெடுத்தோர்- மலைமேல் பல காலம் குடியிருந்தும், அம்மலைதான் தம்மைத் தாங்கி நிற்கிறது என்று எண்ணாது வாழ்பவரோடு ஒப்பர். (மேலும்) மண் கெடுத்தோர்- நிலத்தின் கண் வாழ்ந்தும், அந்நிலம் செய்யும் உதவியை நினையாமல் வாழ்பவரோடு ஒப்பர். (இன்னும்) வான் கெடுத்தோர்- வான் ஆகிய வெளியில் தாம் உலவியும், அவ்வானே தாம் இயங்குவதற்கு இடம் கொடுப்பது என்பதை உணராது வாழ்பவரோடு ஒப்பர், தற்கேடர்- இவ்வாறு திருவருளை உணராது வாழ்பவர் தமக்குத் தாமே கேடு செய்து கொள்பவர் ஆவார்.

**விளக்கம்:**

*திருவருளை இழந்தவர்:*

எல்லா உயிர்களுக்கும் நிலைக்களமாய் நின்று தாங்கியும் அவற்றை இயக்கியும் வருவது திருவருள். ஆயின், மாந்தர் தம்மைச் செலுத்துகின்ற திருவருளைச் சிறிதும் உணராதவராய், திருவருள் நாட்டம் இல்லாதவராய், உலக வாழ்வில் அழுந்தியுள்ளனர். இவர்களையே "ஞானந் தலை கெடுத்தோர்" என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். இங்கு ஞானம் என்பது திருவருளாகிய பேரறிவைக் குறிக்கும். "தலை கெடுத்தோர்" என்பதில் தலை என்பதற்குத் தனியே பொருளில்லை. கெடுத்தல் என்பது இழத்தல் எனப் பொருள்படும். எனவே, திருவருளை இழந்தவரே ஞானம் தலை கெடுத்தோர் எனப்பட்டார் என்பது விளங்கும். திருவருளை இழத்தலாவது, அருள் இடமாக வாழ்ந்தும் அதனை அறியாதிருத்தல்.

*மூன்று உவமைகள்:*

திருவருளை இழந்தவர் நிலையை மூன்று உவமைகள் கொடுத்து உணர்த்துகிறார் ஆசிரியர். அவ்வுவமைகளைப் பின்வருமாறு விளக்கிக் காட்டலாம்.

1. ஊட்டி, கொடைக்கானல் முதலிய மலைகளில் வீடு கட்டிக்கொண்டு வாழ்வோர் நிலத்திற்கு மேல் இவ்வளவு உயரமான இடத்தில் தாம் இருப்பதையோ, அம்மலை சிறிது

நிலை குலைந்தாலும் தம் நிலை என்னவாகும் என்பதையோ சிறிது எண்ணிப் பார்ப்பதில்லை. அன்றாட வேலைகளில் மூழ்கி, மலையே தமக்கு ஆதாரம் என்பதை அடியோடு மறந்து அவர்கள் வாழ்கிறார்கள். அவர்களையே மலை கெடுத்தோர் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். அஃதாவது, மலையில் இருந்து கொண்டே அம் மலையின் உதவியைச் சிறிதும் உணராமல் வாழ்வோர். அவர்களைப் போன்றவரே திருவருள் நிலையை உணராதிருப்போர்.

2. நிலமின்றி உயிர் வாழ்க்கை இல்லை. மாந்தர் நிலத்தில் தோன்றி, நிலத்தில் வாழ்ந்து, நிலத்தில் மடிகிறார்கள். உடம்போடு கூடிய உயிர்கள் வாழ்வதற்கு வேண்டிய உணவு முதலிய நுகர்ச்சிப் பொருள்களைத் தந்து உதவுவது நிலமேயாகும். நிலத்தின் ஈர்ப்பு ஆற்றல் அன்றோ நம்மையெல்லாம் தாங்கிநிற்கிறது. இவ்வாறெல்லாம் தாய்போலத் தாங்குகின்ற நிலத்தின் உதவியைச் சிறிதும் நினையாமல், பொருளை ஈட்டும் முயற்சியிலேயே பொழுதையெல்லாம் போக்கி ஆடி ஓடி அலைவர் மாந்தர். அவர்களையே மண் கெடுத்தோர் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். அஃதாவது, மண்ணிடையே வாழ்ந்தும் அதன் உதவியைச் சிறிதும் எண்ணாதிருப்போர். அவர்களோடு ஒப்பர் திருவருள் நிலையை உணராதவர்.

3. வான் எல்லாப் பொருளுக்கும் இடமாய் அவற்றை இருக்கச் செய்கிறது; மாந்தர் போய் வந்து இயங்குவதற்கு இடம் தருகிறது. வான் ஆகிய வெளியில் உலவும் மாந்தர் அவ்வெளியின் உதவியைச் சிறிதேனும் நினைத்துப் பார்ப்பதுண்டா? வெளியானது இடம் தருவதனால் அன்றோ மக்கள் நடமாட முடிகிறது. அதனை மறந்து தம் திறத்தினாலேயே நடமாடுவதாக அவர்கள் எண்ணிக் கொள்கிறார்கள். அவர்களையே வான் கெடுத்தோர் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். அஃதாவது வான் ஆகிய வெளியில் இயங்கியும் அதன் உதவியைச் சிறிதும் எண்ணாதிருப்போர். அவர்களோடு ஒப்பர் தம்மை இயக்குகிற திருவருளை உணராதிருப்போர்.

*மூன்று உவமைகள் சொல்லக் காரணம்:*

இச் செய்யுளில் ஞானமாகிய திருவருளுக்கு உவமையாக மலை, மண், வான் ஆகிய மூன்று பொருள்களைக் கூறியுள்ளார் ஆசிரியர். இவ்வாறு ஒரு பொருள்மேல் மூன்று உவமைகளைக் கூறுவது எதற்கு? என்று கேட்கலாம். இதற்குப் பின்வருமாறு விடை கூறலாம்.

திருவருள் எங்கும் வியாபித்து நிற்பது. எங்கும் என்பதை மேல், கீழ், புடை (பக்கம்) என்னும் மூவிடங்களாக விரித்துக் கூறலாம் அல்லவா? உமாபதி சிவம் அவ்வாறு கொண்டு, அவ்விடங்களிற் பரந்து நிற்கும் திருவருளுக்குத் தனித்தனியே உவமை சொல்லப் புகுந்து, முறையே மலையையும் மண்ணையும் வான் ஆகிய வெளியையும் கூறினார் எனலாம். மேல் என்பதற்கு ஏற்ப மலையும், கீழ் என்பதற்கு ஏற்ப மண்ணும், உலவும் இடமாகிய புடை என்பதற்கு ஏற்ப வானும் பொருந்திய உவமைகளாயின.

இதற்கு முந்திய செய்யுளில் "தரையை அறியாது தாமே திரிவார்" என்று கூறிக் கீழ் இடமாகிய நிலத்தை எடுத்துக் காட்டி, அதுபோலத் திருவருள் அனைத்துப் பொருளையும் தாங்கி நிற்றலை உணர்த்தினார். அப்படியானால், மேல் புடை ஆகிய இடங்களில் திருவருள்

தாங்கி நிற்றல் இல்லையோ? என்னும் ஐயம் மாணாக்கர்க்கு எழலாம் அல்லவா? அவ் ஐயம் அறுத்தற் பொருட்டே மலையும் மண்ணும் வானும்போல மேல், கீழ், புடை ஆகிய எவ்விடத்திலும் தாங்கி நிற்பது திருவருளே என இச்செய்யுளில் வரையறுத்துக் கூறி முடித்தார் என்பது உணர்தற்குரியது.

இவ்வுவமை மூன்றனுள் மலை என்பது மண்ணில் அடங்கி நிற்பது. அந்த மண்ணோ வானில் அடங்கி நிற்பதாகிறது. இந்த மூன்றுக்கும் உள்ள இவ் இயைபு கருதியே, மலை, மண், வான் என அந்த வரிசை முறையில் நிறுத்தினார் ஆசிரியர் எனலாம்.

இங்கு ஓர் வினா எழலாம். மலை, மண் உள்ளிட்ட எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி நிற்பது வான்தானே. அந்த வான் ஒன்றையே திருவருளுக்கு உவமையாகக் கூறினால் போதுமே. பிறவற்றைக் கூறுதல் எதற்கு? என்று கேட்கலாம். இவ்வாறு கேட்பது பொருந்துவதே.

நாம் அறிந்த பொருள்களிலே மிகவும் பெரியது வானமே. அதுவே பிற பொருள்கள் எல்லாவற்றையும் தன்னுள்ளே அடங்கக் கொண்டு விரிந்து நிற்பது. அது பற்றியே எங்கும் நிறைந்து நிற்பதாகிய திருவருளை வான் என உருவகப் படுத்திக் கூறினர் பெரியோர். அருள்வெளி எனவும், சிதாகாசம் எனவும், சிற்பரவியோமம் எனவும் (வியோமம்- வெளி) வரும் வழக்குகளைக் காணலாம். "தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும் படிக்கு இச்சை வைத்து" என்பது தாயுமானவர் வாக்கு.

வான் ஆகிய வெளி ஒன்றையே திருவருளுக்கு உவமையாகக் கூறுவது பொருந்துமாயினும், மாணவர் எளிதில் விளங்கிக் கொள்வதற்காக, மேலே தாங்கி நிற்பது மலை, கீழே தாங்கி நிற்பது மண், இடையே உலவுவதற்கு இடம் கொடுப்பது வான் என்ற முறையில் அம்மூன்றையும் உவமையாகக் கூறி, மேல் கீழ் புடை என எவ்விடத்தும் உயிர் களுக்குத் தாரகமாய் இருப்பது திருவருளே எனத் தெரிவித்தார் ஆசிரியர் எனக் கொள்ளலாம்.

*தற்கேடர்:*

திருவருளில் இருந்தும் திருவருளையறியாதவர் வினைத் துன்பத்திற்கு ஆட்படுகிறார்; திருவருளால் பெறுதற்குரிய மெய்யுணர்வினைப் பெறாதே போகிறார். வீடுபேறாகிய பெரும் பயனையும் இழந்தவராகிறார். சுருங்கக் கூறினால், தமக்குத்தாமே கேடு செய்து கொள்பவர் ஆகிறார். திருவருளின் உதவியினால் நன்மையைத் தேடிக் கொள்ளாமல் இவ்வாறு துன்பத்தை வருவித்துக்கொள்கிறார்களே என்ற இரக்கக் குறிப்புத் தோன்ற அவரைத் "தற்கேடர்" என்று சுட்டுகிறார் ஆசிரியர். (தொடரும்...

**ஆன்மிகச் சிந்தனை**

சமூக நலனுக்கு உதவுபவை அனைத்தும் தர்ம செயலே, அறச்செயலே ஆகும். மனிதராகப் பிறந்தவர் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒருவிதத்தில் உலகிற்குக் கடன்பட்ட வர்களே. இறைவனை நினைத்து வாழாதபோதுதான் மனிதப்பிறவி அர்த்தமில்லாதது என்று ஆகும். இறைவனைத் தியானித்தும், பிறர் நலனுக்காகவும் வாழும் தியாக வாழ்க்கை வேண்டப்படும், சிறப்புடையதே ஆகும். இந்த உண்மையைத் தாயுமானவர் "அன்பினின் நனைந்து தொண்டில் காய வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

*பிறர்க்கு நன்மை செய்பவர்க்கே நன்மைகள் அனைத்தும் வந்து சேர்கின்றன.*

# கபீர்தாஸ்

**– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –**

இவ்வுலகில் மனிதனுக்கேற்படும் துன்பங்களை வெல்வதற்கு மகான்கள் அவதரித்துப் போதனை மூலமாகவும் சாதனை நெறியிலும் அறவுரையாற்றி வழிகாட்டி நின்றனர். இவர்கள் பூவுலகின் மனித தெய்வங்கள். இவர்கள் பரத கண்டத்தில் வாழ்ந்த புனிதர்கள். மனித உருவில் நடமாடிய தெய்வங்கள். இவர்களில் நாமதேவர் எனும் புனிதரின் வரலாற்றை சுருக்கமாகவும் "கபீர்தாஸ்" என்பவர் பற்றி விரிவாகவும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

மகராஷ்டிர மாநிலத்தில் நரஸ்வமணி என்னும் கிராமத்தில் கி.பி. 1270ஆம் வருடம் தையல் தொழில் செய்து வந்த தாமாஷேட்டியும் மனைவி குணாபாயும் பண்பாடு ஒழுக்கம் நிறைந்தவர்கள். பாண்டுரங்கன்மீது பக்தி கொண்டவர்கள். குழந்தை இல்லாத குறை சொல்லி அழுது தொழுதவர்கள். வேண்டுதல் பலிதமாக நதிக்கரையில் ஆண்குழவியருள வாரியணைத்து இல்லமேகி இல்லாள் கையில் கொடுத்து "நாமா" எனப் பெயரிட்டு வளர்த்தனர். அவர்கள் தினமும் உணவாக்கிப் பாண்டுரங்கனுக்கு நைவேத்தியமிட்டு அதனைப் பிரசாதமாக உண்டு வந்தனர். அன்று கணவன் எங்கோ சென்று வர அதிகநேரமானதால் 5 வயதான தன் பிள்ளையை அழைத்து உணவைக் கொடுத்துப் பாண்டுரங்கனுக்குப் படைத்துப் பிரசாதம் கொண்டுவர அனுப்பினார். சிறுவன் அதனைக் கொண்டு போய் பண்டரிநாதன் முன் படைத்து உண்ணுமாறு வேண்டினான். இது திருநாரையூரிலே பொல்லாப் பிள்ளையாருக்கு அமுது படைத்து உண்ணும்படி செய்த நம்பியாண்டார் நம்பி அடிகளின் செயலை நினைவூட்டி நிற்கிறது. சிறுவனாய நான் படைத்த உணவை இறைவன் உண்ணாமை கண்ட சிறுவன் அப்பா தருவதை உண்பவனே என்னிடம் யாது குறை கண்டீர்? என்று படிக்கட்டில் தலையை மோதி அழுதான். அத்தருணம் நாதனின் அசைவு கண்டு அகமகிழ்ந்தான். ரங்கன் சிறுவன் வைத்த நைவேத்தியத்தை உண்டதோடு சிறுவனுக்கும் ஊட்டி மகிழ்ந்தார். மிக்க மகிழ்ச்சியுடன் வெற்றுப் பாத்திரத்தோடு குதித்தோடி வீட்டுக்கு வந்த சிறுவனிடம் "பிரசாதம் எங்கே?" என்றனர் பெற்றோர். "அதை நானும் ரங்கனும் சாப்பிட்டு விட்டோம்" என்றான் சிறுவன். ஆனால் பெற்றோர் நம்ப மறுத்தனர். வழியில் யாருக்கோ தானம் பண்ணிவிட்டான் என்றே எண்ணினர்.

மறுநாள் சிறுவனிடம் உணவு கொடுத்துக் கோவிலுக்கு அனுப்பிவிட்டுப் பெற்றோர் மறைந்து சென்றனர். கோவிலில் அவர்கள் கண்ட காட்சி ஆச்சரியப்படச் செய்தது. அங்கு கெஞ்சலும் கொஞ்சலுமாகப் பாண்டுரங்கனுக்குச் சிறுவனும், சிறுவனுக்கு இறைவனும் உணவூட்டக் கண்ட பெற்றோர் பிள்ளையை வாரியெடுத்து உச்சிமோந்து மகிழ்ந்தனர். அன்றிலிருந்து இவர் நாமதேவர் என யாவராலும் அழைக்கப்பட்டார். இவர் "அபங்கம்" என்னும் கவிநயம் சொட்டும் ஆயிரக்

கணக்கான கவிதைகளை மராட்டிய மொழியில் எழுதிப் பாண்டுரங்கனுக்குப் பாமாலை சூட்டி மகிழ்ந்தார். சீடர் பலருடன் சிவன் கோவில் வாசலில் ராம நாம கீர்த்தனம் பாடக் கண்ட சிவன் பூஜகர்கள் விரட்டியடித்தனர். வருந்திய தேவர் பின்புறம் செல்லச் சிவன் அப்புறம் திரும்பி அவருக்குக் காட்சி தந்தருளினார். எளிமையும் ஆழ்ந்த பக்தியும் யாவருக்கும் உதவும் பண்பும் கொண்ட நாம தேவர் கி.பி. 1356ஆம் வருடம் முத்தி அடைந்தார்.

"கபீர்தாஸ்" இஸ்லாமியராக வாழ்ந்தாலும் வேர்மூலம் அந்தணர் குடும்பமாகும். இவர் எழுத்தறிவோ படிப்பறிவோ இல்லாதவர். கடவுளிடம் தானும் தனது குடும்பமும் பசி ஆறியிருக்கவும் தம்மையடைந்தவர் பசி ஆறிச் செல்லவும் அருள வேண்டுகிறார். அதாவது "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்" வள்ளுவர் வழி நோக்குகிறார். எழுதப் படிக்க முடியாதவர் ஈரடிப் பாடல்களால் இறைவனை வாழ்த்தியவர். இவரது நயம் படைத்த கவிதைகளை ஆங்கில மொழியில் இரவீந்திரநாத தாகூர் வெளியிட்டுள்ளார்.

மனிதநேயம் கொண்ட மகான், கருணைக் கடல், தூய பக்திமான் மத ஒற்றுமையைப் பேணி மக்களை நல்வழிப்படுத்தியவர்.

"கபீர்தாஸ்" பரத கண்டத்து வடமாநிலமான உத்தர பிரதேசத்தின் பிரதாப்கர் எனும் ஊரில் வாழ்ந்த ஏழை அந்தணக் குடும்பத்தில் நோய்வாய்ப்பட்ட கணவன் இறக்க ஓரிரு மாதங்களில் கி.பி. 1440ஆம் வருடம் பிறந்த குழந்தையை வளர்க்க முடியாத வறுமைநிலையில் கங்கை நதிக் கரையில் விட்டுச் சென்றாள். இந்நிலையில் காசியம்பதியில் பட்டு நெசவு தொழில் செய்பவரான தமால் என்னும் பெயருடைய இஸ்லாமியப் பெரியவர் மனைவியுடன் இன்ப வாழ்வு வாழ்ந்த நிலையிலும் வயது முதிர்ந்துவிட்ட நிலையில் தமக்கொரு குழந்தை இல்லையே என்ற ஏக்கமுடையவராயிருந்தனர். அத்தருணம் வீட்டுக்கு வந்த பெரியவர் ஒருவர் "உங்கள் விருந்தோம்பல் தொடர ஒரு குழந்தையை இறைவன் தந்தருள்வார்" என்று கூறிச் சென்றார். இதுகேட்ட தமால் இந்த வயோதிப நிலையில் இருக்கும் எமக்கு இறைவன் குழந்தை தருவாரா? என்று சிரித்தார்.

மறுநாள் காலை பட்டுநூல்களைக் கங்கையில் கழுவிக் கொண்டிருந்தபோது கைநழுவிப் பட்டுநூல் நீரில் மிதந்தோடியது. அதனைக் கைப்பற்ற எழுந்தோடினார். அப்போது அவர் காதில் குழந்தையின் அழுகுரல் கேட்டது. உடனே வயோதிபராய தமால் பட்டு நூலை மறந்து அழுகை வந்த பக்கமாக ஓடி அழுத குழந்தையை அள்ளியெடுத்து இல்லமேகி மனைவியிடம் கொடுத்து "பெற்றால்த்தான் பிள்ளையா" இதுதான் அன்று பெரியவர் கூறிய குழந்தை. இதற்கு அல்லாவின் பெயர்களில் "மேன்மையானவன்" எனும் பொருள்தரும் "கபீர்" எனப் பெயரிட்டு அன்பு சொரிந்து அரவணைத்து வளர்த்து வரலாயினர். குழந்தையும் வளர்ந்து சிறுவனாகித் தந்தை தாயாரைப் பேணி இறை வழிபாட்டிலும் நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டு வந்ததோடு ஏழைகட்கு உதவுதலிலும் குறையின்றி நடந்தார். சமய அனுட்டானம் தொழுகை ஆகியவற்றில் பக்தி சிரத்தையுடன் ஈடுபட்டார். இதனால் அவர் "கபீர்தாஸ்" என அழைக்கப்பட்டார்.

இந்நிலையில் (மூலவேராம் அந்தண வழி முளைவிட முன்னை வினை கைகூட) காசியில் துறவுபூண்டிருந்த ராமானந்தரைக் குருவாக ஏற்று அருளுபதேசம் பெறுதற்கு விரும்பிய "கபீர்தாஸ்" அங்கு ராமானந்தர் தங்கி இருந்த ஆச்சிரமத்துக்குச் சென்றபோதெல்லாம் வேற்றுமதத்தவன் என்ற காரணத்தால்

அறிவு என்பது அளிக்கப்படுவதல்ல சம்பாதிக்கப்படுவது.

சீடர்களால் அடித்து விரட்டப்பட்டார். ஆயினும் துன்புற்றாரேயன்றி மனம் தளர்ந்தாரில்லை. ராமானந்த குருதேவரின் காலடி பற்றி உபதேசம் பெறுவதில் உறுதியுடன் இருந்தார்.

ஒருநாள் அதிகாலைவேளை ராமானந்தக் குரு குளிக்கும் நீரோடையின் படித்துறையில் படுத்துறங்கினார். குளிக்க வந்த குருவின் பாதங்களால் மிதிபட்டார். பதறிப்போன ராமானந்தர் ராம ராம என உச்சரித்தார். அவர்கள் உச்சரித்த ராம ராம என்ற சொல்லையே தாரக மந்திரமாக உச்சரித்தபடி ஆச்ரமத்துள் புகுந்து கொண்டார். குளித்துவிட்டு ஆச்ரமத்துக்கு வந்த துறவியாராகிய ராமானந்தர் அங்கிருந்த சிறுவனே படித்துறையில் தன் காலில் மிதிபட்டவன் என்றுணர்ந்து அவரைத் தன் சீடராக ஏற்றுக் கொண்டார். கல்வி அறிவோ, எழுத்தறிவோ இல்லாத "கபீர்" குருவருளே திருவருளாக வேர்டி மண்ணாக இந்துமதம் முளைவிட ஞானம் பெற்றார்.

இவரை "இந்து இஸ்லாம் மதங்களின் இணைப்பாளராக விளங்கிய ஞானி" என ஆய்வாளர் கூறுவர். "கபீர்தாஸ்" சர்வமத சமரச சன்மார்க்க சபையைத் தோற்றுவித்தவர். இதுகண்ட இஸ்லாமிய மதவாதிகள் இந்துவாகி விடுவாரோ என ஐயுற்றதும் உண்டாம். இவ்வாறு நிறைவான வாழ்வு கண்ட பெரியார் கி.பி. 1515ஆம் வருடம் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டார். அவரது பூதவுடலை எரிக்க இந்துக்களும், புதைக்க இஸ்லாமியரும் விரும்பினர். இத்தகராறு முற்ற எதுவும் செய்யாமலே வெண்பட்டினால் உடலை மூடிச் சென்றவர் விடிந்து பட்டு நீக்கியபோது பூதவுடலின்றிப் பூக்கள் பரவிக் கிடந்தமை கண்டு அதிசயமுற்றனர். என்னே! மனித மாண்பு.

"சிவபூமி"யாம் நம் நாட்டிலும் சித்தர்களாகவும் அறிஞர்களாகவும் தொண்டர்களாகவும் மனித செல்வங்கள் நடமாடியுள்ளமை கண்கூடு. யோகர் சுவாமிகளின் "ஓம்" எனும் மந்திர ஒலி ஹாவாய்த் தீவில் எதிரொலித்ததாகக் கூறுவர். மாதாஜி அம்மையார் நூற்றுக்கு மேற்பட்ட அறிவுப்பெட்டகம் தந்தவர். புனித பூமியின் மனித தெய்வம் அல்லவா? இன்னும் பல மனித தெய்வங்கள்; வணங்குதற்குரியோர், விரிக்கில் பெருகும்.

---

## எம் பெருமானே எனை ஆளவா முருகா

என் பொறுப்பை நீ எடுப்பாய் வேல் முருகா
உன் தலத்தை நான் நினைத்தேன் வாமுருகா
மண் நிலத்துப் பேராசை வாழ்வோ. இனிப் போதும் முருகா
உன்னை எண்ணி எண்ணித் துதிபாட வைப்பாய் முருகா
கருவுற்ற நாளினிலே எதை நினைத்தேன் முருகா
உருகிற்றே தினம் உனை நினைத்தேனே வா முருகா
பெருகிற்றே உள்ளன்பு தினம் தினம் நினைத்தே
பெருமானே எனை ஆளவா உன்தன் நீல மயில்மீதிலே முருகா

-சின்னப்பு தனபாலசிங்கம்-

குணநலன் என்பது வழங்கப்படுவதல்ல வளர்க்கப்படுவது.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...


**2015 உற்சவகாலம் தொடக்கம்...**

| | | |
|---|---|---|
| ப. சாருஷன் | சாவகச்சேரி | 1000. 00 |
| Dr K. சிவஞானசூரியர் | கொழும்பு- 6 | 14180. 00 |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | கோப்பாய் | 5000. 00 |
| இளையதம்பி சிவராஜா | கரவெட்டி கிழக்கு | 5000. 00 |
| K.M. செல்வரட்ணம் | நவாலி | 6000. 00 |
| ஜெ. கௌதமன் ஆத்தியடி | பருத்தித்துறை | 1000. 00 |
| கு. அபிஷானி | உடுவில் | 1500. 00 |
| சி. குணேஸ் | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| அருணாசலம் சாவித்திரியம்மா | பருத்தித்துறை | 14000. 00 |
| ராஜேஸ்வரி ஞானேந்திரன் | உடுவில் | 1000. 00 |
| மணியம் இம்பெக்ஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ருபன் ஜேனுஷன் | நீர்வேலி | 1000. 00 |
| கி. செல்வநாயகி மூலம் கிருஷ்ணன் நினைவாக | வதிரி கரவெட்டி | 2000. 00 |
| ஜெகதீஸ் பாமினி | அச்சுவேலி | 5000. 00 |
| ந. யோகேஸ்வரன் | உரும்பராய் | 2000. 00 |
| N. கதிர்காமத்தம்பி | துன்னாலை | 6000. 00 |
| ஓர் அன்பர் | சாவகச்சேரி | 5000. 00 |
| திரு சூரியகுமார் | இணுவில் | 1000. 00 |
| ம. அருள்நங்கை | ஆவரங்கால் (சுவிஸ்) | 5000. 00 |
| உ. சற்குணபாலன் | மயிலியதனை | 2000. 00 |
| சா. சாந்தகுமார் | லண்டன் | 5000. 00 |
| சிவதாசன் சிவாஜினி | உடுப்பிட்டி | 2000. 00 |
| S. விஸ்ணுஜன் | சாவகச்சேரி | 1000. 00 |
| ரூ. தீபிகன் | இணுவில் | 3000. 00 |
| திரு கந்தவனம் | லண்டன் | 15000. 00 |
| க. சிவஞானம் சுதா பேக்கறி | கொக்குவில் | 15000. 00 |
| க. நடராஜா | காரைநகர் | 3000. 00 |
| கெ. சிவகுமார் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| சி. சந்திரமூர்த்தி | லண்டன் | 10000. 00 |
| ச. ஸ்ரீரங்கன் | லண்டன் | 1000. 00 |
| வி. சிவநாதன் குடும்பம் | கனடா | 10000. 00 |

| | | |
|---|---|---|
| கு. நித்தியானந்தன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சி. சுதர்சன் | அச்சுவேலி | 5000. 00 |
| த. உருத்திரா | பருத்தித்துறை | 15000. 00 |
| கு. திருப்பதி | கனடா | 5000. 00 |
| சே. சுகந்தன் | சண்டிலிப்பாய் | 15000. 00 |
| சி. மகேஸ்வரன் குடும்பம் | துன்னாலை | 5000. 00 |
| பா. பாலேந்திரன் குடும்பம் | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. தவேந்திரன் | கரவெட்டி | 5000. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | நெல்லியடி | 2000. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | கனடா | 20000. 00 |
| வைரமுத்து ஜெயச்சந்திரா ஊரிக்காடு | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| வி. ராஜேஸ்வரி | பருத்தித்துறை | 1000. 00 |
| திருமதி பவானி வடிவேலு | சாவகச்சேரி | 12000. 00 |
| த. கந்தசாமி | கோண்டாவில் கிழக்கு | 1000. 00 |
| ம. முருகேசு | யாழ்ப்பாணம் | 500. 00 |
| மூ. ஆனந்தமூர்த்தி | துன்னாலை தெற்கு | 2000. 00 |
| செ. தனபாலசிங்கம் | ஏழாலை | 2000. 00 |
| ப. திருஷான் | முள்ளியவளை | 1000. 00 |
| அ. சண்முகராஜா பேராசிரியர் வி. சிவசாமிமூலம் | லண்டன் | 20000. 00 |
| க. லிங்கராசா | அளவெட்டி | 1000. 00 |
| க. யோகராசா | அல்வாய் | 5000. 00 |
| சிவப்பிரகாசம் சிவபாஸ்கரன் | சுவிஸ் | 10000. 00 |
| மகாலிங்கம் சரஸ்வதி | மலேசியா | 5000. 00 |
| அமரர் க. சிவக்கொழுந்து P.M நினைவாக | உடுப்பிட்டி | 10000. 00 |
| திரு சிவபாலன் | திருகோணமலை | 1500. 00 |
| சசிகரன் தனபாலசிங்கன் | கொழும்பு | 2000. 00 |
| முத்தையா குணபாலசிங்கன் | இருபாலை | 5000. 00 |
| ஐ. சிவராஜா | நீர்வேலி | 1000. 00 |
| அன்னமுத்து முத்தையா | கோப்பாய் வடக்கு | 6100. 00 |
| மாணிக்கம் செல்லம்மா | சந்நிதி வீதி | 10000. 00 |
| K. ஸ்ரீனிவாசம் மூலம் மீனாச்சி முருகதாஸ் நினைவாக | கொழும்பு | 5000. 00 |
| ந. மகேஸ்வரி | சாவகச்சேரி | 1000. 00 |
| K.S. கணபதிப்பிள்ளை | கைதடி | 2000. 00 |
| ப. சண்முகநாதன் | சண்டிலிப்பாய் | 15000. 00 |
| இ. தர்சிகா | சிறுப்பிட்டி | 5000. 00 |
| சி. கபிசாந் | உடுவில் | 1000. 00 |
| திரு தங்கவேல் | ஏழாலை | 2000. 00 |

(தொடரும்...


# படங்கள் தரும் பதிவுகள்



வாராந்த நிகழ்வுகளில் இடம்பெற்ற இன்னிசை நிகழ்வுகள்.




உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாகச் சேவைதான் செய்ய முடியும்.



வாராந்த நிகழ்வுகளில் இடம்பெற்ற இன்னிசை நிகழ்வுகள்.




சுடுகாட்டுக்கு அப்பாலும் நம்மைத் தொடர்ந்து வருகின்ற ஒரே நண்பன் நல்லொழுக்கமே.



வாராந்த நிகழ்வுகளில் இடம்பெற்ற இன்னிசை நிகழ்வுகள்.



உலகம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள்.



வாராந்த நிகழ்வுகளில் இடம்பெற்ற இன்னிசை நிகழ்வுகள்.



தன்னைச் சரிப்படுத்திக் கொள்பவனே உலகைச் சரிப்படுத்தத் தகுதியானவன்.

# சித்தம் அழகுறச் சிவப்பணி புரிந்த சிவத்தமிழ்ச்செல்வி

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –



தேனென இனிக்கும் திருவாசகத்தை ஓதி, உணர்ந்து, வாழ்ந்து, பேசிப் பேறுபெற்றவர் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். திருவாசகம் ஒன்றுதான் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தவல்ல மருந்து என்பதை 1957ஆம் ஆண்டு காரைநகர் மணிவாசகர் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட திருவாசக திருவெம்பாவை போற்றிடும் மணிவாசகர் விழாவிலே எடுத்தியம்பி, சித்தமதைப் பத்திரமாக்கினவரே, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார். "திருச்சதகம்" என்னும் பக்தி வைராக்கிய விசித்திரத்தைத் தேன் சிந்தும் வாசகத்தினாலே மொழிந்த திறமையினால், பதின்மூன்று வருடங்கள் காரைநகரில் தொடர்ந்த வண்ணம் திருவாசகம் பூத்தது எனலாம். காரைநகர் செய்த தவப்பயன் புண்ணியம் பூத்தது. புது நூல்கள் வெளியிடவும், பதிப்பிக்கவும் ஏற்ற வழி அன்னைக்கு வரமாகியது.

**கௌரவம்**

1970ஆம் ஆண்டு, ஈழத்துச் சிதம்பரத்தில் குடமுழுக்கு வைபவம் சிறப்பாகவும், தித்திக்கவும் இனிதே நடைபெற்றவேளை, மணிவாசகர் சபையினரால் சிவத்தமிழ்ச்செல்வி என்ற பட்டம் சூட்டி கௌரவம் அளிக்கப்பட்டது. சூரிய சந்திரர் இருக்கும் வரை இந்தப் பட்டம் அம்மையாருக்கு நிரந்தரமாகிவிட்டது. அதேபோல இவரால் மேற்கொண்ட, மேற்கொண்டு வரும் அத்தனை சிவப்பணிகளும் வானமுள்ளவரை வளர்ந்து, வரம் கொடுப்பதாய்ச் சிறக்க எல்லாம் வல்ல அம்பாள் இரங்குவாள்.

| | | |
|---|---|---|
| திருவாசகக் கொண்டல், | செஞ்சொற் செம்மணி, | சிவஞான வித்தகி, |
| துர்க்கா துரந்தரி, | ஞான வித்தகி, | ஞான சஞ்சீவி, |
| சித்தாந்த வித்தகி, | புராண வித்தகி, | சிவாகம பாநு, |
| கலாநிதி, | காருண்ய வாணி, | சிவதர்ம பாலினி |

சிவஞான சொரூபினி- எனப் பற்பல கௌரவங்கள் இவரை வந்து சேர்ந்தன. வாசம் செய்தன. இதனால் முகத்தில் ஒரு தெய்வீகக் களை கட்டிற்று. அம்பாளும் இவரிடம் குடி புகுந்திட, இவரும் அம்பாளிடம் குடி புகுந்தார். வேறு என்னதான் வேண்டும். அல்லாமலும் ஒரு வேலையை இருபத்துநான்கு மணித்தியாலமும் ஆற்றியமையாலேதான் துர்க்கை அம்பாளின் திருவருள் உலகமுள்ளவரை அது நீடிக்கிறது. தனது வாழ்நாள் பூராக அம்பாளை விட்டு விலகாமல் திருப்பணியாற்றினார். அதுவே அறப்பணியாக வெல்லப்படுகிறது. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை மாணவர்கள் முதல் மேதாவிகள் வரை, தாய் தந்தை இல்லாதவர்கள்

*நாளை என்றால் தாமதம் ஆகிவிடும். இன்றே வாழ்ந்து விடுங்கள்.*

முதலாக நோய் நொடியுற்றவர்கள் வரை எது எது, எப்ப எப்ப, எப்படி எப்படி, எவ்வளவு எவ்வளவு, எதற்கெதற்கு எத்தகு உதவிகள், கௌரவங்கள் செய்ய வேண்டுமோ, செய்ய முடியுமோ அதையதையெல்லாம், அவ்வப்போது நிறைவாகச் செய்து முடித்தார். அன்னை சிவப்பழகாக இருந்தமையாலும், அம்பாளின் அவதாரப் பெண்மணியாக இருந்தமையாலும் மற்றும் நிறைவான வயதினை முத்திரையாகக் கொண்டிருந்தமையாலும் அவர் ஆற்றிய தொண்டுகளனைத்திலுமே ஒரு கனதி, ஒரு காத்திரம் பொலிந்திருந்தது. இதை யாரும் மறக்க மாட்டார்கள். ஒருமுறை மகளிர் தினக் கொண்டாட்டத்தின்போது, ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு வீடு என்ற தூர நோக்கினைக் கூறியபோது பலத்த கரகோஷமேற்பட்டது. அவர் எண்ணிய ஒவ்வொன்றும் அம்பாளினால் நிறைவேற்றப்படுகிறது. நாம் கருவிகளேயொழிய, வேறொன்றுமில. தம்மோடு வசிக்கும் அத்தனை உறவுகளையும் அரவணைத்து ஆறுதலளித்து, அபயம் கொடுத்த பேருபகாரியாக மிளிர்ந்தவரே சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்கள். துர்க்கை அம்பாளின் கருணையினால் உலகத்தின் பெருந் தலைவியாக இன்றும் வணங்கப்படுகின்றார்.

தாற்பரியம்

1925ஆம் ஆண்டு ஜனவரி ஏழாந் திகதியன்று அன்னையின் அவதாரம் பேறடைய, வருடந்தோறும் அவர் பிறந்த இத்தினம், அறக்கொடை விழாவாகப் பரிணமிக்கிறது. இவ்வறக் கொடைக்குப் பயனாளிகள் அன்னையின் பெயர் சொல்லி வரம்பெறுகிறார்கள்.

சதானந்தம்

அளவெட்டி சதானந்தா வித்தியாசாலையில் அன்னை அவர்கள் கற்பித்தபோது யாம் சின்னஞ் சிறுவர்களாக அவரிடம் கல்வி கற்றோம். கேணிக்கரை வைரவர் கோவிலில் வெள்ளிதோறும் பிரார்த்தனையோ அப்படிச் சிறப்பாக நடக்கும். அதில் அப்போதைய அதிபர் அமரர் பொன்னுத்துரை அவர்கள் அன்னையிடமே முழுப்பொறுப்பையும் விட்டுவிடுவார். அவரது உடை நடை பாவனை எல்லாமே சமயப் பாதுகாப்போடு அமைதியாக வணங்க வைக்கும். இத்தருணத்தில், இந்த விடயத்தை, நாம் பின்பற்றியேயாக வேண்டும். அவரையொத்த ஒரு பெண்மணி பிறக்கவேண்டுமென நாம் பிரார்த்தனை செய்வோமாக.

2008 யூன் 15ஆம் திகதி தெல்லியூர் துர்க்கையம்பாள், அன்னையைத் தன்னிடம் அழைப்பித்து, ஆகவேண்டிய நற்காரியங்களை செயலாற்றி வருகின்றாள். தற்போது அம்பாளும் அன்னையும் ஆலய வளாகத்தில் விழிகாட்டி வழிகாட்டுகின்றார்கள். தமிழும், சைவமும், கலையும், பண்பாடும், மெஞ்ஞான விஞ்ஞானமும் ஓங்குகின்ற ஒரு பல்கலைக் கழகமாக துர்க்காபுரம் விளங்கவேண்டுமென்பது ஒரு தூர தரிசனமாகும்.

---

### ஆன்மிகச் சிந்தனை

தெய்வீக அனுபவங்களைப் பெறவேண்டுமானால், பின்னால் திரும்பிப் பார்க்காமல், வாழ்வா, சாவா என்று எண்ணிப் பாராமல் ஆன்மிகச் சாதனையைத் தொடரவேண்டும். மனச் சஞ்சலத்தை அடக்கி, உண்மையாக தெய்வீக வாழ்க்கை வாழ முயல்பவர்களுக்கு இறுதியில் அமைதியும், ஆனந்தமும் கிடைப்பது உறுதி. ஆன்மிக நூல்களைப் படிப்பதை எப்போதும் வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இதை ஆன்மிக சாதனையின் ஓர் அங்கமாகவும், இது இல்லாத ஆன்மிக சாதனை முழுமையடையாததாகவும் கருத வேண்டும்.

*நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகின்றாய்.*

(தொடர்ச்சி...

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## வாழ்க்கை ஒரு போராட்டம்

### 09. பிரபஞ்சம் முக்குணங்களால் செயற்படுகிறது.

எதிர் எதிரான ஆற்றல்களின் செயற்பாட்டுத் தளத்திலேதான் நாம் இருக்கின்றோம். அந்த ஆற்றல்கள் ஒரே சமயத்தில் பிரபஞ்சத்தை நோக்கி வெளிப்புறமாயும், தனிப்பட்டவரின் ஆளுமையை நோக்கி உட்புறமாகவும் செயற்படுகின்றன. பிரபஞ்சத்தின் நிலைமையைத் தத்துவ ரீதியாக விபரித்தால் அது ஒரு போர்க்களமேதான். பகவத்கீதை ஒரு கோயிலிலோ, திருச்சபையிலோ, மசூதியிலோ, வழிபாட்டுத் தலத்திலோ உபதேசிக்கப்படாமல் ஏன் யுத்தகளத்தில் வைத்தே உபதேசிக்கப்பட்டது என்பதை அதன் மூலம் எங்களால் புரிந்துகொள்ள முடியும். ஒருவகையில் இந்தப் பிரபஞ்சத்தையும் ஒரு கோயில் என்றால் சந்தேகத்திற்கு இடமேயில்லாமல் அதில் தவறிருக்காது. ஏனெனில் பிரபஞ்சம் முழுவதுமே கடவுளின் இருப்பிடமேதான். நாம் எதனையும் கடவுளாகப் பாவனை செய்ய முடியும். ஆனால் ஏதாவது ஒன்றை மட்டும் தனித்துப் பிரித்து அப்படிப் பாவனை செய்வது கடினம். பிரபஞ்சப் படைப்பு மூன்று வகையில் செயலாற்றுவதாக நாம் காண்கிறோம். முக்குணங்களான இராசதம், தாமசம், சத்துவம் என்பன வெவ்வேறு அளவுகளில் கலந்து செயற்படுவதையே நாம் காண்கிறோம்.

### 10. நியதியும் நீதியும்.

பகவத்கீதையின் முதலாவது சுலோகம் "தர்மஷேத்திரம்", "குருஷேத்திரம்" என்ற இரண்டு பொருள் பொதிந்த வார்த்தைகளோடு தொடங்குகின்றது. செயற்பாடுகள், பிணக்குகள், யுத்தங்கள் என்பன நடைபெறும் ஓர் இடமே இந்தப் பிரபஞ்சம். அத்துடன் அது நியதிக்கும், நீதிக்கும் ஆன ஓர் இடமும் ஆகும். குருஷேத்திரமே தர்ம ஷேத்திரமும் ஆகும். எமது உடலிலுள்ள உயிர்க்கலங்கள் எல்லாவற்றையும் ஓர் ஆளுமைகொண்ட முழுமையானதாய் ஒன்றுபடுத்தக்கூடிய நியதி ஒன்று எமக்கு உள்ளே உள்ளது. அதேபோலப் பிணங்கிக் கொள்வது போலத் தோன்றும் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ளவற்றை ஒன்றுபடுத்தக்கூடிய ஒரு நியதியும் உள்ளது. எமது உடலிலுள்ள உயிர்க்கலம் ஒவ்வொன்றும் ஏனையவற்றை விட வித்தியாசமானது. உடலில் இருந்து உயிர் பிரியும்போது முழுமையாகத் தோற்றமளித்த உயிர்க்கலங்கள் யாவும் தனித்தனியாகப் பிரிந்து ஒருமைத் தன்மையும் நீங்கி ஐம்பூதங்களோடும் கலந்து அழிந்து விடுகின்றன.

*அன்பே கடவுள்; அன்புடன் அழைத்தால் மறுமொழியும் அன்புடன் கிடைக்கும்.*

எமது எண்ணம் ஒவ்வொன்றும் தனித் தனியானதே. அப்படி ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான எண்ணங்களை நாம் எண்ணுகின்றோம். எனினும் அந்த ஆயிரம் எண்ணங்களையும் எண்ணுகின்ற ஆள் ஒருவர்தான் என்றும் நாம் அறிகின்றோம். நான் இன்று சிலவற்றை எண்ணுகின்றேன்; நேற்று சிலவற்றை எண்ணினேன். நேற்றைய எண்ணங்களுக்கும் இன்றைய எண்ணங்களுக்கும் இடையே வெளிப்படையாக ஒரு தொடர்பும் இல்லை. ஆனாலும் நான் ஒருவனே இரண்டு நாளும் எண்ணியதனால் அவற்றுக்கிடையே ஒரு தொடர்பு உண்டு என்பதை அறிகிறேன். எமது உடலும், உளவியல் கட்டமைப்பும் ஏதோ ஒன்றினால் ஒன்றுபடுத்தப் படுகிறது. அவ்வாறு அவற்றை ஒழுங்குபடுத்தி ஒன்றுபடுத்தும் பொருளாகிய நியதியையே தர்மம் என்று அழைக்கின்றோம். உடலை ஓர் அர்த்தமுள்ள முழுமையானதாக ஒன்றுபடுத்தி வைத்திருக்கும் பொருளுக்கு நியதி என்று நாம் பெயரிட்டு அழைக்கின்றோம். அதனாலேதான் எமது உடலைத் தம் எண்ணப்படி நடந்து கொள்ளும் தனித் தனி உயிர்க் கலங்களாக எண்ணாது முழுமையான உடலாகக் கருதுகின்றோம்.

தர்மம் என்பது நியதியே. அதனை நாம் நீதி என்றும் அழைக்கின்றோம். பிரபஞ்சத்தில் உள்ள எல்லா அமைப்புக்களையும் ஒன்றுபட்டு இயங்க வைப்பது பிரபஞ்ச நீதி ஆகும். அதிலுள்ள தனித்தனியானவற்றை இயங்க வைக்கும் நீதியை நியதி என்கின்றோம். செயற்பாடு; இயக்கம், மாற்றம் என்பவற்றை நோக்கும்போது எல்லாம் வெவ்வேறானவை போலத் தோன்றுகின்றன. ஆனால் அது முழுவதும் உண்மை அன்று.

## 11. சமத்துவப்படுத்தும் நோக்கு.

அணுவில் இருந்து சூரியமண்டலம் வரை எங்கும் ஓர் ஒழுங்கு நிலவுகின்றது. ஓர் அணுகூட ஒழுங்கு இல்லாமல் இருப்பதில்லை. ஓர் அணுவிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் இடையே ஒரு சமநிலை பேணப்படுகிறது. ஓர் அணுவிலுள்ள இலத்திரன்கள் அதன் மத்தியிலுள்ள மையக் கருவினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. சூரிய மண்டலம் சூரியனின் ஆற்றலால் அழகான முறையில் ஒன்றாக இயங்குகின்றது. அதேமாதிரியான ஓர் ஆற்றல் எமக்கு உள்ளேயும் இருக்கின்றது. அந்த ஆற்றலினாலேதான் நாம் ஒவ்வொருவரும் முற்றாக ஒழுங்கமைக்கப்பெற்ற உடலுள்ள தனிப்பட்ட ஆளுமை உடையவர்களாக இருக்கின்றோம். எமது ஆளுமை ஓர் ஒழுங்கற்ற பகுதிகளின் தொகை அன்று. தொடர்புடையதாகவும், காரண காரியத் தோடும், ஒழுங்கான முறையிலும் எம்மால் சிந்திக்க முடிகிறது. அப்படியான தனித்துவம், வெளிப்புற நோக்கு, வேறுபாடு என்பன இருந்தாலும் முழுப்பிரபஞ்சம், முழுப்படைப்பு, நாம், அணு என்ற எல்லாவற்றையும் இயக்கும் ஒரு தர்மமும் உள்ளது. யோகத்தின் நோக்கமே இந்த இரண்டு பிணக்குறும் ஆற்றல்களை ஒன்றுபடுத்திச் சமப்படுத்துவதாகும்.

நாம் வெளிப்புறமாக மட்டும் உலகத்தோடு தொடர்பு பட்டவர்களாக இருக்க வேண்டியவர்கள் அல்லர். அதேபோல முற்றும் உலகத்தோடு தொடர்பற்ற தனிப்பட்டவர்களாக இருக்கவேண்டியவர்களும் அல்லர். பகவத்கீதையின் முழுப் போதனையும் இவை எல்லாவற்றையும் ஒன்றாக ஒழுங்குபடுத்திச் சமத்துவத்தில் வைப்பதாகவே அமைகின்றது.

*ஒருமுறை பேசுமுன்னர் இருமுறை யோசித்துப்பேசு. துயரில்லை.*

## 12. கீதை முன்வைக்கும் யோகம்.

இராசத குணத்தின் காரணமாக எல்லாம் புறநோக்கு உடையனவாக உள்ளன. அதனால் அவற்றுக்கு இடையே ஓர் ஒழுங்கு அல்லது இயைபு இருப்பதில்லை. இதனால் சமநிலையை அடைவதற்கான போராட்டம் எங்கும், எப்பொழுதும் நடந்துகொண்டே இருக்கின்றது. எல்லாப் போராட்டங்களும் வாழ்க்கையில் ஒரு சமநிலையைக் கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியே ஆகும். அரசாங்க நியதி, சமூக நியதி, சமுதாய நியதி, குடும்ப நியதி முதலான எல்லா நியதிகளும் எல்லா இடங்களிலும் எப்பொழுதும் ஓர் ஒத்திசைவைப் பேணுவதற்கான தேவையையே குறிக்கின்றது. எமது உடம்பின் ஒரு சிறு பகுதியிலோ, மனித சமூகத்தின் ஒருசிறு பகுதியிலோ சமநிலை இல்லை என்றால் உடனே எமது அனுபவத்தில் ஓர் ஆதங்கம் நுழைந்து விடுகின்றது. எப்போது இந்த நிலை மாறிச் சமநிலை வரக்கூடும் என்பதே அந்த ஆதங்கம் ஆகும். காலில் ஒரு சிறிய முள் குத்தினால் அடுத்த கணம் எமது ஆனந்தம் முழுவதும் போய் மகிழ்ச்சி அற்றவர்களாகி விடுகின்றோம். சமுதாய இயக்கத்தைத் தடைப்படுத்தும் ஓர் அம்சம் கண்டுபிடிக்கப்பட முடியாத வகையில் இருந்தால், அச்சமுதாயத்தில் உள்ள மனிதரின் மனங்கள் குழம்பி அதனை எப்படிக் கண்டுபிடிப்பது, எப்படி அதனைத் திருத்தலாம் என்று சிந்திக்க அவர்கள் கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றார்கள். ஒரு மிகச் சிறு அம்சத்தின் குழப்பமே முழுவதன் அமைதியைக் குழப்புவதற்குப் போதியதாகும். உதாரணமாக ஒரு சிறிய காது வலியே எம்மை நாள் முழுவதும் துன்பப்படக் காரணம் ஆகி விடுகின்றது அல்லவா! எனவே ஒரு சிறிய அளவில் கூடச் சமநிலை இன்மை நிலவக்கூடிய சந்தர்ப்பத்துக்கு இடமளிக்கக் கூடாது. ஒவ்வொரு தனி மனிதர் இடத்திலும் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் பிரபஞ்சப் பிணக்கைத் தீர்ப்பதற்கான ஒரு முழுமையான அணுகுமுறையையே பகவத்கீதை முன்வைக்கும் யோகம் ஆகும்.

## 13. புலன்களின் அராஜகம்.

உலகத்திலே பிணக்கு நிலவி வருவது போதிய அளவுக்கு வெளிப்படையாகவே உள்ளது. உலகம் சீரழிந்து உள்ளமையை நாம் எல்லோரும் அறிகின்றோம். உலகத்தைப் பற்றி ஒவ்வொரு நாளும் குறை கூறிக் கொண்டு இருக்கின்றோம். அப்படி அதனைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு இருப்பதனால் அச்செயல் ஓர் அறிவற்ற செயலே ஆகும். அப்படியான சூழ்நிலையில் எப்போது, எவ்வழிகளைப் பயன்படுத்தி நாம் நடந்து கொள்ளப் போகிறோம் என்பதனைப் பூரணமாக உணர்ந்து கொள்ளாதவர்களாகவே இருக்கின்றோம். அதாவது நாம் யோக நிலையில் இருக்கவில்லை என்பதே அதன் அர்த்தமாகும். நேரம் இடம் என்ற அடிப்படையில் உலகத்தில் வெளிப்படையாகச் சம்பவிக்கும் விடயங்களை மட்டும் காண்கின்றோம். நாம் புலன்கள் தரும் தகவல்களை முற்றும் நம்பி, அந்தப் புலன் உலகிலேயே வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். இவ்வாறு தவறான புலன்களின்மூலம் பெறும் தகவல்களைத் திருத்தும் அளவுக்கு எமது காரணகாரிய அறிவைப் பயன்படுத்தி நாம் புரிந்து கொள்வதில்லை.

எமது காரணகாரிய அறிவு பலவீனம் ஆனது. எமது புரிந்துகொள்ளும் திறனும் பலவீனம் ஆனது. புலன்கள் மூர்க்கத்தனம்

*உழுது விளைவிக்காத எந்த நிலமும் ஒருபோதும் உதவாது போய்விடும்.*

ஆனவையாகவும் தீவிரமானவை ஆகவும் இருக்கின்றன. அதனாலேதான் நாம் மிகக் குறைந்த ஆக்கத்திறம் உள்ளவர்களாக இருக்கின்றோம். புலன்கள் தீவிரமானவை ஆகவும், அடம்பிடிப்பவை ஆகவும் இருக்கும் வரை நாம் மிகக் குறைவான ஆக்கத்திறன் உடையவர்களாக இருப்பதைவிட வேறு வழி இல்லை. அதனை வெல்லும் அளவுக்கு எம்மிடமுள்ள ஒழுங்குபடுத்தும் ஆற்றலும் புரிந்துகொள்ளும் ஆற்றலும் பலமானவையாக இல்லை.

அரசாங்கத்தின் ஒழுங்குபடுத்தும் ஆற்றலைவிட அந்த அரசாங்கத்திலுள்ள தனிமனிதர்கள் பலம் வாய்ந்த புரட்சியாளர்களாய் இருக்கும் ஓர் அராஜக நிலையை நாம் கற்பனை செய்து பார்க்கமுடியும். இது தான் எங்களிடமும் உண்மையில் நடந்து கொண்டு இருக்கின்றது. வெளி உலகப் பொருள்களின் அடிப்படையில் செயற்படும் புலன்களின் அனுபவமாகிய பிணக்குச் சூழ்நிலையை வெல்லக்கூடிய அளவு எம்மிடம் உள்ள ஒழுங்குபடுத்தும் ஆற்றல்களான காரண காரிய அறிவும், புரிந்துகொள்ளும் திறனும் பலமுள்ளவை ஆக இல்லை. நாம் எமது புலன்களுக்குத் தலைவர்கள் ஆக அன்றி அடிமைகள் ஆகவே இருக்கின்றோம். எப்பொழுதும் ஏதோ ஒரு புலனின் தேவைகளுக்கு ஒவ்வொரு கணமும் ஆட்பட்டவர்களாகவே இருக்கின்றோம். இதனை எந்த வகையிலும் சுதந்திரம் என்று கருதமுடியாது. புலன்கள் எவற்றைச் சொல்லுகின்றனவோ அவை எல்லாவற்றையும் எமது காரண காரிய அறிவு புரிந்துகொள்ளும் திறன், பொது அறிவு, கற்ற கல்வி என்பவற்றைப் பயன்படுத்திச் சரியானவை என்று ஏற்றுக்கொள்ளும் அளவிலேதான் நாம் இன்று இருக்கின்றோம். இந்த வகையில் மிக மோசமான புரட்சியாளர்களே புலன்கள். ஆனால் பகவத்கீதை இந்தச் சூழ்நிலை தொடர்ந்து கொண்டு போவதை விரும்பவில்லை. (தொடரும்...

## தைமுதல் நாளே தமிழர் திருநாள்


தைமுதல் நாளே தமிழர் திருநாள்
தந்திடும் இனிய பொங்கல் நாளாம்
தைமுதல் நாளே தமிழர் புத்தாண்டு
தந்திடும் புதிய வழிகள் பலவும்
தைமுதல் நாளே வழிகள் பிறக்கும்
தந்திடும் நல்ல பயன்கள் யாவும்
தைமுதல் நாளே தமிழர் பெருநாள்
தந்திடும் சகல வளங்கள் எல்லாம்

-வ. யோகானந்தசிவம்-

# ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரமும் அர்ச்சுனனும்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரத்தில் குந்திதேவி இயல்பாகவே கிருஷ்ணனுக்கு அத்தை ஆகிறாள். அதனால், குந்தி புத்திரர்களான தருமன், வீமன், அருச்சுனன் ஆகிய மூவரும் மைத்துனர்களாகவும் நம்பிக்கையான நண்பர்களாகவும் கிருஷ்ணனோடு ஒட்டி உறவாடி வாழ்ந்து வருகிறார்கள்.



பாண்டுவின் இரண்டாவது மனைவி மாத்ரி தேவிக்கு நகுலனும் சகாதேவனும் இரட்டையர் களாகப் பிறக்கிறார்கள். அவர்களும் வீரம், கல்வி, அழகு, ஒழுக்கம், கடவுள் பக்தி முதலியவற்றில் சிறந்து விளங்குகிறார்கள். ஆக ஐந்துபேரும் பஞ்ச பாண்டவர்களாக பாரதம் போற்ற வாழ்கிறார்கள்.

பரம்பொருளான திருமாலின் அவதாரம், தீமையாளரை அழித்து நல்லோரைக் காப்பதற்காக நிகழ்ந்தது. அதற்கு பாண்டவர்களுள் யாரை இறுதி வரை துணைவனாக்கலாம் எனக் கவனித்து வரு கிறார் கிருஷ்ணன்.

தருமன், பெயருக்கேற்ப, "யாரொடும் பகை கொள்கிலன்" என்றபின் போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது" என்ற சிறந்த அரசனாகும் தகுதி வாய்ந் தவன். நன்மை பயக்கும் எனத் தெரிந்தாலும் பொய்ம்மை பேசாதவன்.

பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கும் எனின். (குறள் 292)

துரோணர் ஆயுதங்களைக் கீழே போடச்செய்வதற்காக அவரது மகனுக்கு ஆபத்து என்று அவரை அறியச் செய்வதற்கு ஒரு பொய் சொல்ல விரும்பாத தருமன், அசுவத்தாமா இறந்தது மெய்யே என்றும், அது யானை என்றும் சொல்லி விடுகிறார். (அசுவத்தாமா என்ற பெயரில் ஒரு யானையும் உண்டு என்பது வாசகர்கள் அறிவர்.) ஆயினும் கிருஷ்ணன் அந்தச் சமயத்தில் தனது பாஞ்சசன்னிய சங்கை ஊதி, "யானை" என்ற சத்தம் துரோணர் காதில் ஒலிக்கவிடாமல் செய்துவிடவே, துரோணர் தமது போர் முயற்சியைக் கைவிட்டு இறக்க நேர்ந்தது. அதுவுமன்றி, அஞ்ஞாதவாச காலத்திலே கந்தர்வருடன் போரிட்ட துரியோதனனையும் கர்ணனையும் கந்தர்வர் சிறைப்பிடித்துக்கொண்டுபோன நேரம், "அவர்கள்

*செல்வத்தால் வரும் புகழைவிட சாதனையால் வரும் புகழ் நிலைத்து நிற்கும்.*

நமது சகோதரர்கள்தானே; அவர்களைக் காப்பாற்றுவாய்" என அர்ச்சுனனை அனுப்பி வைத்தவன் தருமன். மேலும் சூதாட்டத்துக்கு அழைத்தபோது, மறுப்புக் கூறுவது அரச தருமமாகாது எனக் கூறிச் சூதாடித் தோற்றது மன்றி, ஒருவருக்கொருவர் உதவி செய்ய வழியுமின்றிப் பாஞ்சாலி மானபங்கப்பட நேர்ந் ததுவும் இந்தத் தருமன் தேடிக்கொண்ட வினைதானே!

ஆகவே, தருமனை நம்பி ஒரு அலு வலுக்கும் போக முடியாது என்பது கிருஷ் ணனுக்குத் தெரிந்திருந்தது.

அடுத்து பீமன். இவனுக்கு இணை யான பலமுள்ளவனான துரியோதனன், இவ னுக்குச் செய்த தீமைகள் அனந்தம். அத னால் எத்தனையோ சபதங்கள் செய்து இருக் கும் பீமன், கட்டுக்கடங்க மாட்டான் என்பது கிருஷ்ணன் அறிந்து கொண்டவன். தனியே பலசாலி என்பதனால் மட்டும் பீமனைத் துணை வனாக்க கிருஷ்ணன் எண்ணவில்லை.

இனி, சிறந்த "வில்லுக்கு விஜயன்" எனப் பெயர்பெற்ற அர்ச்சுனன் இருக்கிறான். "போர் செய்வதே முடிவு" என்ற நிலை வந்த போது, உதவி கேட்கத் துவாரகைக்கு அர்ச் சுனன் போகிறான். அர்ச்சுனனை முந்திக் கொண்டு, துரியோதனன் அங்கு போனபோது கிருஷ்ணன் அறிதுயில் கொள்ளுகிறான். அத னால் அவன் விழிக்கும்வரை அவனது தலை மாட்டில் இருக்கிறான் வணங்காமுடியோனான துரியோதனன். ஆகவே அர்ச்சுனன் கால் மாட்டில் இருந்தான்.

எல்லாமறிந்த கிருஷ்ணன் விழித்து முதலில் அர்ச்சுனனிடம் குசலம் விசாரித்தான். அர்ச்சுனன் தொடர்ந்து, நிகழப்போகும் போரில் உதவி கேட்டான். அச்சமயம் துரியோதனன், தான் முதலில் வந்ததாகக் கூறித் தனக்கே உதவி செய்ய வேண்டும் எனக் கேட்கிறான். அப்பொழுது கிருஷ்ணன், தனது படை வீரரைத் தருகிறேன் என்று சொன்னபோது, துரியோதனன் திருப்தியுடன் திரும்பி வரு கிறான். அர்ச்சுனன் பக்கம் திரும்பிய கிருஷ் ணன், நண்பனே! உனக்கு நான் சாரதியாக வருகிறேன் என்று சொல்லி குறுநகை புரிந் தான். அவனது அவதார நோக்கம் நிறைவேற இதுவும் ஒரு படிக்கல்லாக அமைகிறது.

துரியோதனன் பக்கத்தில் யாராலும் வெல்லப்படவோ கொல்லப்படவோ முடியாத பீஷ்மரும் துரோணரும் இருந்தாலும், அவர் கள் நீதிவழி செல்பவர்கள்; பாண்டவர்மீது பாசமுள்ளவர்கள். ஆனாலும் துரியோதன னுடைய ஆளுகையில் இருப்பவர்கள். செஞ் சோற்றுக் கடன் கழிக்கப் போருக்குப் புறப் பட்டவர்கள்; அவர்கள் தமது மரணம் எப்படி நடக்கும் எனத் தெரிந்தவர்கள். அதன்படி அவர்கள் இறப்பார்கள். ஆனால் கர்ணன் இருக்கும் வரை துரியோதனனை வெல்ல முடியாது. கர்ணன், அர்ச்சுனனைக் கொல் வதற்கென்று நாகாஸ்திரத்தை வைத்திருக் கிறான். இது தெரிந்திருக்கும் கிருஷ்ணபக வான், கர்ணனின் கொடைத் திறனைப் பயன் படுத்தி, இந்திரன்மூலம் அவனது கவச குண் டலங்களை அகற்றி விடுகிறான். குந்தி தேவியைக் கர்ணனிடம் அனுப்பி, பாண்டவர் அவனது தம்பியர் என்பதைக் கூறுகிறான். ஆனால், தன்னைப் "பிறப்பறியாதவன்" என்று கூறி இழிவுபடுத்திய அர்ச்சுனனை எப்படியும் கொல்வேன் என்று கூறிவிடுகிறான். இருவரில் ஒருவர் இறப்பது உறுதி என்று கூறிய கர்ணன், எப்படியும் உங்களுக்கு ஐந்து பிள்ளைகள் இருப்பார்கள் என்றும் குந்தியம்மையாரிடம் கூறு கிறான்.

இஃது இவ்வாறாக, போர்க்களத்திலே அணிவகுத்து நிற்கும் இருபக்கத்து வீரர் களுக்கு மத்தியில் இரதத்தைக் கொண்டு போய் பார்த்தசாரதி நிறுத்தியபோது, பார்த் தன், தன் முன்னே எதிர்த்தரப்பில் நிற்கும்

*தானம் என்பது நாமே வலியச் சென்று நன்மை செய்வது.*

உறவினர், வில்லாசிரியர்கள், மற்றும் நண்பர் ஆகியோரைப் பார்த்ததும், வில்லையும் அம்பையும் நழுவ விட்டுத் தேர்த் தட்டில் அமர்ந்து விட்டான்.

இவர்களைப் போர் செய்து கொன்றுவிட்டு, அதனால் வரும் வெற்றியும் வேண்டாம்; அரசபோகமும் வேண்டாம் என்கிறான்.

அர்ச்சுனா!

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. (குறள் 467)

ஆனபடியால் போர்க்களத்துக்கு வந்துவிட்டபின்பு, இன்னார் இனியார் எனப் பார்க்க வேண்டாம்; கடமையைச் செய்வாய்; பயனை (இருவினை) என்னிடம் விட்டுவிடு என உபதேசம் செய்து அவனைப் போர்புரிய வைக்கிறார் கிருஷ்ணபகவான். அவன் பெற்ற உபதேசமே பகவத்கீதையாக மலர்ந்தது. அர்ச்சுனன் பக்தி வைராக்கியம் பெறுவதற்குப் பொருத்தமானவன்; சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்த மனதோடு போர் புரிந்தான். தீயவர்களுக்குத் துணை நின்ற கொடைவள்ளல் கர்ணனும் கொல்லப் பெறுகிறான். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அவதார நோக்கம் நிறைவேற அர்ச்சுனன் உதவி செய்த பலனைப் பெறுகிறான்.

## இறை வழிபாட்டில் எலுமிச்சம்பழத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம்

எல்லாம்வல்ல இறைவனுக்கு நம்மால் இயன்றவற்றை பக்தியுடன் அளிப்பதே பூஜை. ஆண்டவனுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனானது அவருக்கு மட்டும் இல்லாமல் அனைத்து ஜீவராசிகளையும் சென்றடைந்து பயன் அளிக்கிறது. நாம் நமது சக்திக்கு ஏற்றவாறு பக்தியுடன் அளிக்கும் அனைத்துப் பொருட்களையும், இறைவன் அன்புடன் ஏற்கிறார். ஆகமங்களில் ஒவ்வொரு தெய்வ வடிவங்களுக்கும் அவர்களுக்குரிய சிறப்பான மலர், பழங்கள், மந்திரங்கள், வஸ்திரங்கள், எந்த நாட்களில் செய்யவேண்டும் என மிகச் சிறப்பாக வகுத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒருசில அனைத்து தெய்வங்களுக்கும் பொதுவானதாக உள்ளது. புஷ்பங்களைத் தொடுத்து மாலையாக அணிவிப்பதைப்போல, சில சிறப்பான பழங்களையும் மாலையாகக் கட்டி கடவுளுக்கு அர்ப்பணிப்பதை ஆகமங்கள் ஆமோதிக்கின்றன. அவற்றில் முக்கியமான ஒன்றுதான் எலுமிச்சம்பழம்.

தீயவற்றைப் போக்கி நன்மையை அளிக்கக்கூடிய மிகப்பெரிய மருந்து இது. வெற்றியின் அடையாளமாகவும் வீரத்தின் அடையாளமாகவும் எலுமிச்சம்பழம் உள்ளது. காளி, மாரி, துர்க்கா போன்ற வீரத்தை வெளிப்படுத்தி நம்மைக் காக்கும் தெய்வங்களுக்கு இவை மிக உகந்தது. எனினும், மற்றத் தெய்வங்களுக்கும் இவற்றை அளிக்கலாம். இவ்வகையில் எலுமிச்சம்பழத்தை மாலையாகக் கடவுளுக்கு அளிப்பதனால், அந்தப் பழத்தின் சிறந்த மஞ்சள் நிறத்தினாலும் தன்மையாலும் நாம் நமது காரியங்களில் வெற்றியடையலாம் என்பது உறுதி. அக்காலங்களில் நாம் நமது பிரார்த்தனையைத் தெரிவிக்க வேண்டுமெனில், அவர்களாகவே தங்களின் பிரார்த்தனைகளை சங்கல்ப்பித்துக்கொண்டு பூவையோ, பழங்களையோ தொடுத்துக் கடவுளுக்கு அளித்து நன்மைகளைப் பெற்றார்கள். முயன்றவரை நாமும் நம் கைகளால் பூவையோ, பழங்களையோ மாலையாகத் தொடுத்து இறைவனுக்குப் படைத்துப் பயனடைவோம்.

*உண்மையான பெரிய மனிதருக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல்.*

(தொடர்ச்சி....

# விதுர நீதி

- திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் -

**மூன்றின் வகைகள்:**

ஒரு மனிதனுக்கு காரியம் சித்தி ஆவதற்கு உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்று வகையான உபாயங்கள் உள்ளன. மனிதர்களிலும் இதேபோல உத்தமர், மத்திமர், அதமர் என மூன்று வகையான மனிதர்கள் இருக்கின்றார்கள். அவரவர்களின் தகுதிக்கு தகுந்தபடியான விடயங்களில், அவரவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

மனைவி, வேலைக்காரன், பிள்ளை என்னும் இந்த மூன்று பேர்களும், பணத்தை உடையவர்களாக இருந்தபோதும், அதன் அதிகாரிகளாக நினைக்கப்படுவதில்லை. இவர்கள் யாருக்குக் கீழ் இருந்து வருகின்றார்களோ, அவர்களுக்கு அந்தப் பணம் உடைமையாக இருக்கிறது.

அடுத்தவர் பொருளை அபகரிப்பது, அடுத்தவன் மனைவியைச் சேர்வது, அன்புள்ள வனை நீக்குவது என்னும் மூன்று தோசங்களும் அழிவை உண்டாக்கும்.

காமம், குரோதம், லோபம் (கருமித்தனம்) என்னும் இவைகள் நரகத்தின் மூன்று வகையான வாயில்கள். ஆத்ம நாசத்திற்குக் காரணமானவை. ஆகையால், இந்த மூன்றையும் தள்ளிவிட வேண்டும்.

சுவாமியிடம் வரம்பெறுவது, இராஜ்யத்தை அடைவது, மக்கள் செல்வம் என்னும் இம்மூன்றையும் தராசின் ஒரு தட்டிலும், பகைவனைத் துன்பத்திலிருந்து விடுவிப்பது என்பதைத் தராசின் மற்றொரு தட்டிலும் வைத்துப் பார்த்தால் இரண்டுமே சமமாகவே இருக்கும். எனவே பகைவனைத் துயரத்திலிருந்து விடுவிப்பதுதான் சிறப்பானதாகும்.

ஏற்கனவே தன்னைச் சேர்ந்தவன், இப்போது தன்னிடம் சேர்கிறவன், உங்களைச் சரணடைபவன் என்னும் இந்த மூவரையும் தனக்குச் சங்கடம் வந்த காலத்தில் கூடக் கைவிடக் கூடாது.

**நான்கின் வகைகள்:**

பலம்கொண்ட அரசன், தள்ளவேண்டிய நான்கு காரியங்கள்: அறிவில் குறைந்தவர்கள், விரைவாகச் செய்துமுடிக்க வேண்டிய விடயத்தில் தாமதம் காட்டுபவர்கள், சோம்பேறிகள், முகஸ்துதி செய்து பிழைக்க நினைப்பவர்கள் என்னும் நான்குபேர்களிடமும் அரசன் ஆலோசனை பெறக்கூடாது.

இல்லறத்தில் இருந்து கொண்டு செல்வந்தனாக இருப்பவன் வீட்டில், வயது முதிர்ந்த பங்காளி, செல்வந்தராக இருந்து வறுமை அடைந்துள்ள உறவினர், ஏழையான நண்பன், குழந்தை இல்லாத சகோதரி ஆகிய நால்வரையும் பராமரிக்க வேண்டும். ஏனென்றால் முதியவரான பங்காளி குல தர்மங்களை உபதேசிப்பார், செல்வந்தனாக இருந்து வறுமை நிலையடைந்த உறவினர் குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை உபதேசிப்பார்.

*மனச்சாட்சிக்கு அடங்கி நடந்தால் எளிதில் தீங்கு செய்ய முடியாது.*

ஏழையான நண்பன் நன்மையே செய்வார். குழந்தை இல்லாத சகோதரி குடும்பத்தின் பொருளைக் காப்பாற்றித் தருவதில் கண்ணும் கருத்துமாக இருப்பாள்.

தேவகுரு பிரகஸ்பதி (வியாழன்) இந்திரனிடம், உடனே பலிப்பவைகளாகச் சொன்னவை நான்கு: தேவதைகளின் எண்ணம், புத்திமான்களின் மகிமை, கல்வி கற்றவர்களின் பண்பு, பாவிகளின் திருட்டு முதலியனவாகும்.

அக்கினி காரியம், மௌனம், படித்தல், யாகம் என்னும் நான்கும் பயத்தைப் போக்கி அபயமளிப்பவையாகும். இவைகளே, வேறுவிதமாகச் செய்யப்பட்டால் பயத்தைக் கொடுக்கின்றன.

**ஐந்தின் வகைகள்:**

தந்தை, தாய், அக்னி, ஆத்மா, குரு என்னும் இந்த ஐந்தும் மனிதனால் பெரு முயற்சியுடன் பணிவிடை செய்து காப்பாற்றப்பட வேண்டியவையாகும். இவைகளையே பஞ்சாக்கினி என்பது வழக்கம்.

தேவர்கள், பித்ருக்கள் (இறந்தவர்கள்), சான்றோர்களான மனிதர்கள், துறவிகள், அதிதிகள் (விருந்தினர்) என்னும் இந்த ஐந்து வகைப்பட்டவர்களையும் வழிபடுபவன், உலகத்தில் பெரும் புகழை அடைகிறான்.

எங்கு போனாலும் அங்கெல்லாம் நம்மைத் தொடரும் ஐவர்: நண்பர்கள், விரோதிகள், நடுநிலை வகிப்பவர்கள், ஆதரிக்கப்படவேண்டிய பெரியோர்கள், நம்மை அண்டிப் பிழைப்பவர்கள்.

ஐந்து இந்திரியங்களை உடைய மனிதனின் இந்திரியங்களில், ஓர் இந்திரியத்தில் கொண்ட பற்றினால், அதன் வழியாக இவன் அறிவானது, துளைகொண்ட மண் பாத்திரத்திலிருந்து தண்ணீர் கசிவதுபோல, வெளியில் நழுவிவிடும்.

**ஆறின் வகைகள்:**

செல்வத்தை விரும்புகின்ற மனிதன்; அதிக தூக்கம், சோம்பல், வீண்பயம், குரோதம், முயற்சி இல்லாமை, விரைந்து செயற்படாமை என்னும் ஆறையும் நீக்கவேண்டும்.

மனிதன் ஒருபோதும் விடக்கூடாத ஆறு: உண்மை பேசுவது, அடுத்தவர்களுக்கு உதவுவது, சுறுசுறுப்பு, பொறாமை இல்லாமை, பொறுமை, தைரியம் என்பவை.

சாஸ்திரங்களின் நுண்மையான கருத்துக்களைத் தெளிவாகக் கூறும் திறமை இல்லாத ஆசாரியன்.

வேத மந்திரங்களை ஒழுங்காக உச்சரிக்காது யாகத்தில் ஹோமம் செய்பவர்.

குடிமக்களைக் காப்பாற்றாத அரசன்.

எப்போதும் பிரியமில்லாத வார்த்தைகளைப் பேசும் மனைவி.

காட்டிற்குப் போய் ஆடு, மாடுகளை மேய்க்காமல் கிராமத்திலேயே வசிக்க விரும்பும் இடையன்.

கிராமத்திலிருந்து தன் தொழிலைக் கவனிக்காமல் காட்டில் வாழ வேண்டும், என்று நினைக்கும் நாவிதன்.

இந்த ஆறு பேர்களையும், நம்பும் மனிதனுக்கு, ஓட்டைக் கப்பலில் ஏறிக் கடலைத் தாண்ட விரும்புபவனின் கதிதான் ஏற்படும்.

*நம்பிக்கை இல்லாத இதயம் மூளையைக்கூட மோசம் செய்யும்.*

எந்நாளும் செல்வத்தின் வரவு, நோய் இல்லாமல் இருப்பது, அன்புடன் பிரியமாகப் பேசுபவளுமான மனைவி, அன்பு கொண்டவனாகவும் - சொன்ன பேச்சைக் கேட்பவனுமான மகன், அமைதி நிரம்பிய வீடு, செல்வத்தைக் கொடுக்கும் கல்வி என்னும் இவை ஆறும், மனித இனத்திற்கு எப்போதும் சுகத்தைத் தருபவைகளாகும்.

காமம், கோபம், கருமித்தனம், அறியாமை, கர்வம், பொறாமை என்னும் ஆறும் மனதில் நித்தியமாக இருக்கின்றன. இவைகளை, நீக்கியவன் இந்திரியங்களை வென்றவனாகிறான். அவனுக்குப் பாவங்களுடன் தொடர்பே கிடையாது.

**ஆறுபேர்களால் பிழைக்கும் ஆறுவகையான மனிதர்கள்:**

திருடன்- அஜாக்கிரதையாக இருப்பவனால் பிழைக்கிறான்.
வைத்தியன் - நோயாளியால் பிழைக்கிறான்.
யாகம் செய்து வைப்பவன்- யாகம் செய்ய விரும்புபவர்களால் பிழைக்கிறான்.
விபச்சாரம் செய்யும் பெண்கள்- காமம் கொண்டவர்களால் பிழைக்கிறார்கள்.
அரசன்- வழக்காளிகளால், சண்டை போடுபவர்களால் பிழைக்கிறான்.
பண்டிதர்கள் (கல்விமான்கள்) - மூடர்களால் பிழைக்கிறார்கள்.

**சிறிது காலம் கவனிக்காமல் விட்டால்கூட அழியக்கூடிய ஆறு:**

பசுக்கள், தொழில், விவசாயம், மனைவி, கல்வி, பணத்துக்காக நண்பனாக இருப்பவர்கள் என்பவை.

**ஆறுபேர்கள் அவமானப்படுத்தும் ஆறுபேர்கள்:**

கல்வி கற்றபின் சீடர்கள்- குருவை அவமதிக்கிறார்கள்.
மனைவியை அடைந்தவன்- தாயை அவமதிக்கிறான்.
ஆசை நீங்கிய மனிதன்- ஆசையைத் தணித்த பெண்ணை அவமதிக்கிறான்.
பயனை அடைந்த மனிதன்- உதவி செய்தவனை அவமதிக்கிறான்.
கரையை அடைந்தவன்- கரைசேர உதவிய படகை அவமதிக்கிறான்.
அரச பதவி பெறுபவர்- சாதாரண மக்களை அவமதிக்கிறார்.

**எந்நாளும் சுகமளிக்கும் ஆறு:**

நோயற்ற உடம்பு, கூன் இல்லாத வாழ்வு, உறவுகளைப் பிரிந்து வேற்று நாட்டில் வாழவேண்டிய அவசியம் இல்லாமை, நற்குணம் கொண்டவர்களின் சேர்க்கை, தன் உழைப்பால் கிடைக்கும் செல்வத்தால் வாழும் வாழ்வு, பயம் இல்லாத வாழ்க்கை என்பன.

**துயரத்தை அடையும் ஆறுபேர்கள்:**

பொறாமை கொள்பவன், அருவெறுப்பாக நடப்பவன், எத்தனை வந்தாலும் திருப்தி இல்லாதவன், கோபம் மிகுந்தவன், எப்போதும் எல்லாவற்றிலும் சந்தேகப்படுபவன், அடுத்தவன் வாழ்வில் அண்டிப் பிழைப்பவன் என்னும் இந்த ஆறுபேர்களும் துயரத்தையே அடைவார்கள்.

(தொடரும்...

*பிறரை நம்பி வாழ்பவனுக்கு வறுமை என்றும் இருந்துகொண்டே இருக்கும்.*

# வினையும் விளைவும்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

மனிதரிடம் நற்பண்புகளும் உண்டு; தீய பண்புகளும் உண்டு. நற்பண்புகள், அவற்றைக் கொண்டுள்ளவருக்கும், பிறருக்கும் நன்மை பயப்பன. தீய பண்புகள் எவர்க்கும், எப்பொழுதும்; தீமைகள்- தீங்குகளையே விளைவிப்பன. மனிதர்கள் இவற்றை தெளிவாகப் புரிந்துகொள்ளும் அறிவு, ஆற்றல் என்பவற்றை இயல்பாகப் பெற்றிருந்தும்; புரிந்துகொள்ள மறுப்பதாலேயே, உலகில் துன்பங்கள், துயரங்கள், அமைதியின்மை, துர்நடத்தைகள் என்பன எங்கும் மலிந்து காணப்படுகின்றன. இயற்கையின் சீற்றங்கள், பருவ மாற்றங்கள், பூகோளம் வெப்பமடைதல், வளிமண்டலம் மாசடைதல்; இவற்றால் ஏற்படும் அனர்த்தங்கள், அழிவுகள், இழப்புக்கள் யாவற்றிற்கும் மனிதர்களே பொறுப்பேற்க வேண்டும். மனிதர்களின் அடாத செயல்கள்; தகாத நடத்தைகள்; ஒழுக்கவீனங்கள்; பழி பாவங்கள் தாராள மயப்படுத்தப்பட்டமை; குற்றங்களின் பெருக்கம் என்பனவே, இன்றைய துர்ப்பாக்கிய மற்றும் அவல நிலைக்கு காரணம் என்பது யாவராலும் உணர்ந்து கொள்ளவேண்டிய உண்மை.

செயலுக்கேற்ற விளைவு நிச்சயம் உண்டு. வினை, கன்மம் என்று சைவ சித்தாந்தம் கூறுவது, செயல் என்பதையேயாகும். "முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்பன கன்மவினை தொடர்பான ஆன்றோர் அனுபவமொழிகள். காரண காரியத் தொடர்பு பற்றி, விஞ்ஞானம் கூறும் உண்மையும் இதுவேயாகும். காரணம் இன்றிக் காரியம் இல்லை. ஒவ்வொரு காரியத்திற்கும், காரணமொன்று இருந்தேயாக வேண்டும். மெய்ஞானம், விஞ்ஞானம் இரண்டுமே இதனை ஏற்றுக்கொள்கின்றன.

நல்வினை, தீவினை என வினை இரு வகைப்படும். நல்வினை என்பது நற்செயல், நற்காரியம், புண்ணியம் எனவும் சமய நூல்கள் கூறும். தீவினை என்பது தீய செயல், தீய காரியம்; பாவம் எனவும் சமயம் கூறும். நல்வினை செய்தவர்கள் இன்பங்களையும்; தீவினை செய்தவர்கள் துன்பங்களையும் அனுபவிப்பர். இதுவே இறைநீதி ஆகும். இன்பமும் துன்பமும் நமது தேட்டங்களேயாகும்.

வினையானது மனம், மொழி, உடம்பு என்னும் மூன்றினதும் வழியாகச் செய்யப்படுகிறது. இவை மூன்றும் தூய்மையாக இருக்கும்போது, ஆற்றப்படுகின்ற வினைகள், நல்வினைகள் ஆக அமையும். அவை தூய்மையற்று, அழுக்குகளுடன் சேர்ந்து காணப்படுமேயானால்; ஆற்றப்படுகின்ற வினைகள் தீவினைகளாகி விடுகின்றன.

*பிறரை அதிகம் நேசிப்பவன் அதிகம் காயப்படுகிறான்.*

களவு செய்ய எண்ணுவது, திட்டமிடுவது; மனத்தினால் செய்யப்படுகின்ற வினை. களவு செய்ய உடந்தையாக இருக்கும்படி ஒருவரைக் கேட்டல்; அல்லது களவு செய்யும்படி, வழிமுறைகளைக் கூறி, ஒருவரை ஏவுதல், மொழியினால் - பேச்சினால் செய்யப்படும் வினையாகும். இவை தீவினைகள் எனப்படும். தீவினை செய்தவர்களுக்குத் துன்பம், துயர்கள் நிச்சயம். தீவினைகளை அனுபவித்தே தீர்க்க வேண்டும். அவை பிறவிக்குக் காரணமாக அமைவதோடு, பிறவிகள் தோறும் உடன் செல்லும் தன்மையன. தீவினைகள் தீய பயத்தலால், அவை தீயிலும் அஞ்சப்படும். இறைநீதி, நீதிபரிபாலனத்தில் உறுதியாகவே இருக்கும். இவ்வுண்மையை விளங்கிக்கொண்ட எவரும் தீவினை செய்ய அஞ்சுவர். ஒழுக்கநெறி வாழ்வுக்கு, இறைநம்பிக்கை இறையுணர்வு மிகவும் இன்றியமையாததாகும்.

"தீயவை தீயபயத்தலால், தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்பது வள்ளுவர் மறை வாக்கு. கேட்டு வாழ்ந்தால், உண்டு வாழ்வு; அல்லது தாழ்வு நிச்சயம். இன்று தீவினைகளுக்கு அஞ்சாமல், அவற்றை வாழ்க்கைப் பழக்கமாகக் கொண்டு வாழ்ந்து வருபவர்களின் தொகை அதிகரித்து வருவதே, இயற்கைச் சீற்றங்கள் மற்றும் அவற்றால் ஏற்படும் அனர்த்தங்கள், அழிவுகள், காலநிலைப் பருவ மாற்றங்கள்; அவற்றினால் ஏற்படும் தீய விளைவுகள், அவலங்கள் யாவற்றிற்கும் பிரதான காரணிகள் ஆகும்.

மனிதர்கள் இயற்கையைச் சீண்டினால்; இயற்கை மனிதரைச் சீண்டும் என்பது மாற்றமுடியாத இயற்கை விதி. எனவேதான், "மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின் அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு" என்கிறது, வள்ளுவர் தமிழ்மறை. பிறருக்கோ, இயற்கைக்கோ, கேடுகளைத் தரும், தீய செயல்களை நாம் மறந்தும் எண்ணக்கூடாது; செய்யவும் கூடாது. அவ்வாறு எண்ணினாலோ, செய்தாலோ; அத்தகையவர்களுக்கு, இறைநீதி எனப்படும் அறம், துன்பங்களை வழங்கியே தீரும், என்பது இவ்வெண்பா தரும் பொருள் ஆகும்.

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றியது வரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன். செயல்"

-ஔவையார்.

நல்வினை, தீவினை எனும் இருவகை வினைகளுக்கீடாக, முறையே இன்ப துன்பங்களை வழங்கும், இறை நீதியின் தீர்ப்பின் படியேயன்றி; மனிதருடைய எண்ணங்களின் படியோ; விருப்பு வெறுப்புக்கமையவோ ஒன்றும் நடவாது. இவ்வுண்மையை உணர்ந்தவர்கள், பிறருக்கோ, இயற்கைச் சூழலுக்கோ, தீங்கு செய்ய ஒருபோதும் துணியமாட்டார்கள்.

"தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார்", என்பது ஔவை வாக்கு. "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்கிறது புறநானூற்றுப் பாடலடி. ஒவ்வொருவரும் அனுபவிக்கின்ற இன்ப, துன்பங்களுக்கு; அவரவரேதான் காரணம். தாம் தாம் முன் செய்த வினைகளை; நல்லதோ, கெட்டதோ; அவரவரேதான் அனுபவித்துத் தீர்க்க வேண்டும். விளைவு இல்லாத வினை இல்லை; வினையினூடே, விளைவு தொக்கி நிற்கும். இது இயற்கை நீதி.

இயற்கையில் மனிதர்களுக்குத் தேவையான எல்லா வளங்களும் நிறைவாகவே

இருக்கின்றன. அவற்றை வாழ்க்கை வளங்களாக மாற்றித், தம் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக்கூடிய, அறிவும் ஆற்றலும் மனிதர்களிடம் நிறையவே உண்டு. இயற்கை வளங்கள், மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உரியனவேயன்றி; மனிதர்களின் ஆசைகள், பேரவாக்களைப் பூர்த்தி செய்வதற்கல்ல என்பதை உணர்ந்து; அளவு முறை பேணி அவற்றைப் பயன்படுத்தி வருவார்களேயானால், இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படும். இயற்கைக்கு எந்தவித இடையூறுகளும் ஏற்படாது; இயற்கை மாசடைதலும் தவிர்க்க வழி பிறக்கும்.

இயற்கையில் யாவும் சரியாக அமைந்து; அனைத்துமே முறையாக நடந்து வருகின்றன. மனிதன் குறுக்கீடு செய்யும் போதே, இயற்கை வெகுண்டெழுகின்றது. இயற்கை பேராற்றல் உடையது. அதை வெற்றிகொள்ள எவராலும் முடியாது.

"யாரொருவர் இயற்கை ஒழுங்கமைப்பை மீறியும், அதற்கு மாறாகவும், அதை அலட்சியப்படுத்தியும் வாழமுனைகிறார்களோ; அவர்கள் துன்பங்களுக்கும் - தொல்லைகளுக்கும் - பிரச்சினைகளுக்கும் உள்ளாகிறார்கள்" என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

எப்பொழுதாயினும், ஒரு செயல் தவறாகச் செய்தாலும்; நடத்தையில் பிறழ்வுகள் ஏற்பட்டாலும்; அவற்றைப் பாவங்கள் எனப் பதிவு செய்து காலப்போக்கில் அதற்குரிய தண்டனையைத் துன்பங்களாக, ஒவ்வொருவரும் அநுபவித்தே ஆக வேண்டும். இது இயற்கை நியதி.

இயற்கை எப்படிப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்தால், அன்பும் கருணையுமே அதன் உள்ளடக்கம் என்னும் உண்மை தெரியவரும். நன்மை செய்பவர்களுக்கு, இன்பத்தை வழங்குவது, அறக்கருணை; தீமை செய்பவர்களுக்கு துன்பத்தைக் கொடுத்து, அவர்களின் பாவப் பதிவுகளை நீக்குவது, மறக்கருணை ஆகும். இதுவே இறை நீதி.

அன்பு, கருணை, உண்மை, நீதி, அறம், ஒழுக்கம் என்னும் விழுமியங்களை உணர்ந்து, தன் வாழ்விலும், செயலிலும், நடத்தை முறைகளிலும், பின்பற்றி வாழ்வதே, இறைவழிப்பட்ட இறைவழிபாடு ஆகும்.

இறைவன் காட்டியுள்ள, பாதையில்; வழியில்; நம் வாழ்க்கையை இட்டுச்சென்று, வாழுதல்தான், நாம் இறைவனுக்குச் செய்கின்ற உண்மையான வழிபாடு ஆகும். இறைவனால் விரும்பப்படுபவைகளைச் செய்தலும்; வெறுக்கப்படுபவற்றைச் செய்யாமல் விலக்கி விடுதலும்; நாம் இறைவனுக்குச் செய்கின்ற உண்மையான வழிபாடு ஆகும்.

"கடவுளால் விரும்பப்படுபவைகளாவன: இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன: கொலை, புலாலுண்ணல், களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், செய்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்" என்று நாவலர் பெருமான் நான்காம் பாலபாடத்தில் கூறியுள்ளார்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்; வேறொன்றறியேன் பராபரமே", என்றும்; "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே" என்றும் தாயுமானவர், இறைவனை வேண்டி நிற்கின்றார். இதே வேண்டுதல்களை நாமும் இறைவனை நோக்கி, வேண்டி, வழிபாடு செய்து; நாமும் இன்புற்று பிறரையும் இன்புறச் செய்து; இயற்கையையும் பாதுகாத்து நல்வாழ்வு வாழ்வோமாக.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

**"வாழ்க வளமுடன். வாழ்க வையகம்"**

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

தொடர்ந்த பயணம் எமது வழமையான வழித்தடத்தினூடாகச் சென்று பதுளை ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயத்தை அடைந்தது. நாம் இரவுப் பொழுதைக் கழித்தபின் அடுத்தநாட் காலை 7.30 மணியளவில் பதுளை மகளிர் இல்லத்தை அடைந்தோம். இம்முறை அவர்களுக்கான கற்றல் கையேடுகளையும் G.C.E. O/Lக்கான வினாத்தாள்களையும் அவர்களிடம் வழங்கினார் ஆச்சிரம சுவாமிகள்.

உண்மையில் எங்களின் பயணம் வெறும் பொருட்களையோ பணத்தையோ மட்டும் வழங்கும் உதவிப் பயணங்களாக அமையாது மிகவும் காத்திரமான வருங்கால மலையகச் சிறார்களின் கல்விப்பசிக்கு முழுமையாக இல்லாதபொழுதிலும் எள்ளளவேனும் தீனிபோடும் ஓர் உன்னத பணியில் ஈடுபட்டுள்ளதைக் கல்விப்புலத்தைச் சார்ந்தவன் என்ற வகையில் இங்கு சுட்டிக்காட்ட விழைகின்றேன். ஏனெனில் இங்குள்ள பெருங்குறையை எங்கள் பயணங்களின்போது சுட்டிக்காட்டினர். ஆம்! இங்குள்ள பாடசாலைகளில் கணித-விஞ்ஞான ஆசிரியர்களுக்கு மிகமிகத் தட்டுப்பாடு. இதனைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களிலே இருந்து வருகிறார்கள். இப்பிள்ளைகள் உயர்தரத்தில் கலைப் பிரிவுப் பாடங்களையே தெரிவுசெய்ய வேண்டிய கட்டாய நிலை. உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்குரிய பாடசாலைகள் இவர்களுக்கு இல்லை. இதனால் உயர்தரத்தில் கலைப்பிரிவிலேயே கற்று ஆகக் குறைந்தளவுக்கேனும் தமிழ்ப்பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களாகவும் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களாகவுமே உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் பண்ணோடு இசை கற்பிக்கவல்ல ஆசிரியர்களுக்கும் (சங்கீத ஆசிரியர்களுக்கு) மிகமிகத் தட்டுப்பாடாக இருப்பதையும் உணர்ந்த சுவாமிகளும் சைவ மகா சபையினரும் கற்றல் சார்ந்த உதவிகளாக அறநெறிப்பாடசாலைகளுக்கான உதவியாகவும், O/L இல் மாணவர் தரத்தை உயர்த்தவல்ல இக்கற்றல் கையேடுகளோடு கூடிய G.C.E. O/L வினாத்தாள்களையும், இங்கே மாணவர்களுக்கு எங்கள் ஆசிரியர்களால் வழங்கப்படுகின்ற சமகால வினாப்பத்திரங்களையும் உதவுதல் சாலப்பொருத்தமானது என்றும் இது இவர்களுக்கு காலத்தின் தேவையாக இருப்பதையும் உணர்ந்தே அக்கற்றல் கையேடுகளோடு கூடிய வினாத்தாள்களையும், கற்றல் உபகரணங்களையும் வழங்கியுதவும் ஆயத்தத்துடன் வந்திருந்ததையும் இங்கு வந்தபொழுதுதான் சிறியேனால் அறியக்கூடியதாக இருந்தது. அத்துடன் எங்கள் பயணம் எவ்வித விளம்பர வியாபார நோக்கமற்றது என்பதையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். எமது பயணத்தின்போது சுவாமிகளால் வழங்கப்பட்ட வயலின், தாளம், சுருதிப் பெட்டிகள் போன்ற சங்கீத கற்றல் உபகரணங்கள் இதன் ஒரு பகுதியாகவே அமைந்தது. தற்போது ஓர் தற்காலிக ஆசிரியையை ஒழுங்குபண்ணி இச்சிறார்களின் இசைப் பயிற்சிக்கு உதவி வருவதையும் இப்பயணத்தினூடாக அறிய முடிந்தது.

*நீ யாரிடம் உன் இரகசியங்களைச் சொல்கிறாயோ அவரிடம் உன் சுதந்திரத்தை இழப்பாய்.*

அதுமட்டுமல்ல இவ்வுதவிகளை எமது முன்னைய வருகைகளின்பொழுது இங்குள்ள சில பாடசாலைகளின் துடிப்பான அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் எங்களிடம் கோரியிருந்தனர். அதற்கமைவாக இம்முறை இப்பயணம் அமைந்ததும் சிறப்பா கிறது. அவர்களின் அன்பான உபசரிப்பில் காலை ஆகாரத்தை நிறைவு செய்து கோண முட்டாவ அறநெறிப்பாடசாலைக் குழுமத்தின ரைச் சந்திப்பதற்காகப் புறப்பட்டோம்.

அங்கு நாம் கண்ட காட்சி அப்பப்பா... எவ்வளவு ஆர்வத்துடன் எங்களுக்காகப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் சில பெற்றோர் களும் காத்திருந்தனர். இவர்களின் ஆன்மீக உடல், உளநலத்தை விருத்தி செய்ய ஆன் மீக யோகா பயிற்சியை வழங்குவதற்கான ஆயத்தங்களை எமது சைவ மகா சபைப் போஷகரும் யோகக்கலை பயிற்றுவிப்பாளரு மாகிய திரு கலியுகவரதன் அவர்கள் செய் திருந்தார்கள். எனவேதான் அக்கலையைப் பயின்றுவிட வேண்டும் என்ற ஆர்வத்துடன் இவர்கள் இருந்தமையையும் அறியமுடிந்தது.

அதற்குமேலாக வறுமையிலும் செம் மையாக வாழும் அவர்களது நடை உடை பாவனைகளையும் உபசரிப்பையுங்கூட உணர முடிந்தது. மிகமிகப் பின்தங்கிய கிராமப்புறப் பிள்ளைகளாக இக்குஞ்சுகளும் பெற்றோர் களும் கல்விக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார் கள். முழுக்க முழுக்கக் கூலித்தொழிலாளர் களின் பிள்ளைகள் எப்படியாகவேனும் கற்று தம் சமுதாயத்தை உயர்த்த வேண்டும் என்ற மனநிலை இடைநிலைப் பிள்ளைகளின் உள் ளத்தில் குடிகொண்டிருப்பதையும் உணர்ந் தோம்.

ஏறக்குறைய 120’x20’ விஸ்தீரண முள்ள ஒரு பெரிய மண்டபத்தில் இப்பிள்ளை களுக்குரிய பயிற்சிவகுப்பு ஒழுங்காகியது. பிள்ளைகள் யோகா பயிற்சிக்கான உடை களுடன் ஆசனமெடுத்தனர். மண்டபம் நிறைந்த சனக்கூட்டம். பார்வையாளர் அவ்வளவுபேரும் பயிற்சிக்காக வந்தவர்களே. அதுமட்டுமல்ல இதில் பங்குபற்றியோர் 5ஆம் வகுப்பிற்கும் G.C.E. O/L இற்கும் இடைப்பட்டோராக இருந்த துடன் சில பெற்றோர்களும் ஆசிரியர்களுங் கூட பங்குபற்றி இருந்தமை குறிப்பிடக்கூடிய தாகவும், பாராட்டப்படத்தக்கதாகவும் மன நிறைவைத் தரக்கூடியதாகவும் இருந்தது. அத்துடன் சாதி மத பேதமற்று இருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இவர்களுக்குரிய யோகப் பயிற்றுவித்தல் நடைபெற்றுக்கொண்டிருக்க எம்மோடு சேர்ந்த சிலருடன் அடியேன் ஆல யத்தோடு அமைந்த அறநெறிப் பாடசாலை மண்டபத்திற்குச் சென்றோம். அங்கேயும் குஞ்சுகள் மஞ்சள் வெள்ளைச் சீருடையில் மிக அழகாக எங்களுக்காக தங்கள் ஆசிரியர் களுடன் காத்திருந்தனர். இவர்களுக்கான திருமுறைகளைக் கற்றுக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டோம். மிகவும் இலகுவான எளிய பண் அமைதி கொண்ட இவர்களின் தரத்திற்கேற்ப சில திருமுறைகளைக் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.


அங்குகூட இங்குள்ளது போன்று தேவாரம் கேட்டால் ஐந்து கரத்தனை... சொல் கின்ற தன்மை காணப்பட்டது. எம்மவர்கள் பஞ்சபுராணம் ஓதும்பொழுதுகூட ஐந்து கரத்தனை என்று தொடங்குவதைப் பல இடங் களிலும் காணமுடிகின்றது. ஒரு இடத்தில் இதுபற்றிக் கேட்டபொழுது, பஞ்சபுராணம் என்று கல்வெட்டுகளிற்கூட ஐந்து கரத் தனை... என்று முதலில் போட்டே இருக்கிறார் கள்தானே ஐயா என்ற வாதமும் உள்ளதை வாசகர்களுடன் பகிர்கின்றேன்.

அன்பான வாசகர்களே! ஐந்து கரத் தனை.... என்பது 11ஆம் திருமுறையில்

*சரியானது எது என்று தெரிந்தபின்னும் அதைச் செய்யாமல் இருப்பதுதான் கோழைத்தனம்.*

வைக்கப்பட்டுள்ள திருமந்திர வகுப்பைச் சேர்ந்தது. கல்வெட்டுக்காரர் யாரோ விநாயக வணக்கத்திற்காக எப்பொழுதோ பஞ்சபுரா ணங்கள் என்ற தலைப்பில் ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை என்று தொடர்ந்து தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் என அடித்துவிட்டார்கள். அதனை இன்றும் வாழை யடி வாழையாக கல்வெட்டுக்கள் தாங்கி நிற்கின்றன. விரும்பின் ஒரு கல்வெட்டை எடுத்துப் பாருங்கள். அதனை அடிப்படையாக வைத்து வசந்த மண்டபத்தில் சிவாச்சாரியார் பஞ்சபுராணம் கேட்க சிலர் ஓதிவருகிறார்கள். இது பல இடங்களிலும் நடைபெறுகிறது. ஏன் ஓமெனும் பிரணவருப நாயகா எனவும் தொடங்கிப் பாடியதையும் அடியேன் கண்டுள் ளேன். இது வெறும் பயணத்தைச் சொல்லும் கட்டுரையாகவன்றி எம் வருங்காலத்தினரின் சைவ வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும் என்ற பேரவாவினாலே பட்டறிவை வைத்துப் பகரும் வரிகள் இவை.


இவர்களுடன் ஆனந்தப் பொழுதைக் களித்து அங்கே யோகா பயிற்சி வகுப்பிற்குச் செல்கின்றோம்... (காட்சி தொடரும்...



# அண்ணாமலையின் சிறப்பு

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

திருவாரூரில் பிறந்தால் முத்தி; சிதம்பரத்தில் இருந்தால் முத்தி; காசியில் இறந்தால் முத்தி எனக் கூறுகின்றார்கள்.




ஆனால் நாம் ஒரு ஊரில் பிறப்பதோ, இறப்பதோ நம்முடைய கையில் இல்லை. நமக்கு முத்தி கிடைக்காதா என யோசிக்கவேண்டாம். திருவண்ணாமலையை நினைத்தாலே முத்தி கிடைக்கும் என்கின்றனர் ஞானிகள். "அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே" என்னும் சம்பந்தர் தேவாரம் இதற்குச் சான்றாக அமைகின்றது.

திருவண்ணாமலையில் சிவபெருமான் ஜோதிப் பிளம்பாக நின்று காட்சி கொடுத்ததுதான் இதற்கு முக்கிய காரணமாகும்.

ஒரு சமயம் விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் இடையில் தங்களுக்குள் யார் பெரியவர் எனும் போட்டி உண்டாயிற்று. அதற்கு அவர்கள் சிவனின் அடியையும் முடியையும் காணச் செல்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நான்முகன் சிவபெருமானின் முடியைக் காண ஒரு அன்னத்தின் உருவை எடுத்துக் கொண்டு மேலே பறந்து சென்றார்.

அடியைக் காண்பதற்கு திருமால் ஒரு பன்றியின் உருவை எடுத்துக் கீழே நிலத்தைத் துளைத்துச் சென்றார். ஆனால் இருவரும் சிவனின் அடி, முடி காணாது தோல்வியைத் தழுவினார்கள். பிரம்மாவோ தான் ஈசனின் முடியைக் கண்டதாகப் பொய்கூறி ஒரு தாழம்பூவை அதற்குச் சாட்சியாக அழைத்து வந்தார் என்பது இதனை நன்கு உணர்த்துகின்றது.

முதலாவதாக, அன்பின் காரணமாக சிவபெருமானின் பாதக்கமலங்களையும் திருமுடியையும் தேடவில்லை. தங்கள் ஆணவம் காரணமாகத் தேடினார்கள். அதனால் தோல்வியுற்றனர்.

இரண்டாவதாக, கல்வி தேவியின் கணவர் பிரம்மாவானாலும், இறைவனைக் கல்வியினாலும் அடைய முடியாது என்பதை நிரூபிக்கவும், காக்கும் தெய்வமான திருமாலாலும் காண முடியாது என்பதும் நிரூபிக்கப்பட்டது. காரணம் அகந்தையாகும்.

மூன்றாவதாக இவர்கள் செய்த மாபெரும் தவறு, அவர்கள் நம் இதயத்தின் உள்ளே தேட வேண்டிய ஆண்டவனை வெளியே தேடியதாகும்.

அண்ணுதல் என்றால் அடைதல் அல்லது நெருங்குதல் என்று பொருள்படும். வராகமாகிய திருமாலும், அன்னப் பறவையாகிய பிரம்மனும் முறையே இறைவனின் அடியையும்

*தாயின் சாபத்துக்கு ஒருபோதும் விமோசனம் கிடையாது.*

முடியையும் அடைய (அண்மிக்க) முடியவில்லை. இதனால் அவ் இறைவனுக்கு "அண்ணா மலை" எனப் பெயர் ஏற்பட்டதாக ஒரு ஐதீகம் திருஅண்ணாமலையில் சிவபெருமான் ஜோதிப் பிளம்பாக வீற்றிருக்கிறார். அண்ணாமலைத் தீபம் ஒளி வீசும் நாளையே உலகெங்கும் சிவனின் அடி, முடி தேடிய நாளாகவும், நம் வினைகளை அழிக்கும் நாளாகவும் நினைத்து வழிபடுகின்றோம். அகந்தையால் தோல்விகண்ட பிரம்மா, விஷ்ணு போலவே நாமும் தோல்வி யுறாமல் அகந்தையை ஒழித்து வாழ்வோமாக.

"செங்கணானும் பிரமனும், தம்முளே
எங்குதேடியும் திரிந்தவர் காண்கிலார்
இங்குற்றேனென்று இலிங்கத்தே தோன்றினார்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே"

என்பதை அப்பர் தேவாரத்தில் அறியலாம்.

## விதியை மதியால் வெல்வது எப்படி?

மதி என்றால் "அறிவு" என்று பொருள். மற்றொரு பொருள் "சந்திரன்" என்பது ஆகும். நமது விதியை ஆகாயத்தில் உள்ள சந்திரனைக் கொண்டு வெல்ல முடியும் என்று ஞானிகள் சொல்லவில்லை. பின் இதன் பொருள் என்ன?

நமது உடலில் இடது கண் சந்திரன் என்று கூறப்பட்டுள்ளது. இந்தச் சந்திரனை நோக்கி அதாவது நமது மனதை திருவடியில் நிறுத்தி தவம் செய்தால் நாம் நம் விதியை வெல்லலாம்.

நம் கண்மணியின் மத்தியில் ஊசிமுனை அளவு ஒரு சிறு துவாரம் உள்ளது. இந்த துவாரத்தை துலங்கும் நம் ஜீவ ஒளியை நம் வினைகள் சூட்சுமத்தில் ஏழு திரையாக அமைந்து மூடியுள்ளது.

வள்ளலார் கண்ணாடிக் கூண்டின் உள் விளக்கினை ஏற்றி வைத்ததன் பொருள் இதுவே. இவ்வினைக்குத் தகுந்தபடியே நம் மனம் வேலை செய்கிறது. நம் உடல் அமைப்பு, சுற்றம் போன்ற அனைத்தையும் நிர்ணயிப்பது இவ்வினைகள்தான். இவ்வினாக்கள் கண்ணாடிபோல் உள்ளதால் நம்மால் பார்க்க முடிகிறது. கண் இல்லாதவர்களுக்கு இவ்வினை திரை சுவர்போல் அமைந்து உள்ளதால் பார்வை சக்தி அவர்களுக்கு இல்லை.

குருவிடம் தீட்சை பெற்று நம் கண்மணியில் உணர்வு பெற்று இந்தக் கண்மணி உணர்வில் நம் மனதை இருத்தி தவம் செய்தால் நம் கண் ஒளி பெருகி அந்த வெப்பத்தால் வினை திரை கரையும். வினைகள் கரையக் கரைய நம் துயர் நம்மைவிட்டு நீங்கும்.

*நல்லோரின் பெருமை அவர்களுக்குள்ள உதவும் பண்பினால் மட்டுமே.*

# ஈழநாட்டில் இந்துமத வளர்ச்சியில் மடங்கள்

– திரு தம்பு துரைராஜா அவர்கள் –

**கட்டுரையின் சுருக்கம்:**

சைவ சமய மடங்களின் தோற்ற வரலாறு; மடங்களின் கட்டிட நிர்மாண முறைமை; சைவ சமய வளர்ச்சி வரலாற்றிலே மடங்களின் பங்களிப்பு; சைவ சித்தாந்த நெறிக்கமைய இயங்கிய மடங்கள், சைவத் துறவிகளின் வாழ்விடமாகச் சைவ மடங்கள் இயங்கியமை, சைவ சமயக் கடவுளர் பற்றிய கொள்கைகளை விவாதிக்குமிடமாக அமைந்தமை. சித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள், குருபூசைகள், திருவடி வழிபாடுகளைச் சைவ சமய மடங்கள் முன்னெடுத்தமை, வழிப்போக்கர்களுக்கான ஆதுலர்சாலைகளாகப் பயன்பட்டமை, கால் நடைகள், மிருகங்களின் நீர் வேட்கை, உடல் வேட்கைகளை நீக்க ஆவுரோஞ்சிக்கல், நீர்த்தொட்டிகளை அமைத்துப் புண்ணிய கருமங்களை ஆற்றுதல்; பொழுதுபோக்குமிடம், ஆறுதலளிக்கும் மடங்கள், உலக விவகாரங்கள் புதினங்களைக் கூடிக் கதைக்கும் இடம்; பிரயாணத்தின்போது களைப்பாறுமிடம்; உறங்கிச் செல்லும் இடம்; பொதிகளை இறக்கி வைத்து ஆறிச் செல்லும் நிலையங்களாகத் தொழிற்பட்டமை; உறங்கியும் தங்கியும் செல்லுமிடங்களானமை; வயது முதிர்ந்தோருக்கான சங்கமம் நிகழும் இடமாக அமைந்தமை; தத்துவ சாத்திரப் போதனைகள் இடம்பெற்று அறிவு நிலையங்களாகவும் அனுபவப் பகிர்வுப் பீடமாகவும் தொழிற்பட்டமை என்பன இவ்வாய்விலே அடங்குவனவாம்.

**முழுமையான கட்டுரை:**

சைவாதீனங்களும் மடங்களும் என்ற வகையில் இந்துப்பண்பாட்டு மரபில் சமய நிறுவனங்கள் பற்றியும் அவற்றின் பணிகள், சேவைகள் குறித்தும் இன்றும் பரவலாகப் பேசப்படுவதுடன், சீர்திருத்தம், கண்டனங்கள் என்றும் சுட்டியுரைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் சமயக் கொள்கைகளை மக்களுக்குத் தெரிவிக்கும் நோக்குடன் சமய நிறுவனங்களை நிறுவியுள்ளனர். அவை மடம், ஆதீனம், பள்ளி, சபை, சங்கம், மன்றம், மாமன்றம் எனப் பலவாறு வழங்கும் அந்நிறுவனங்கள் தமது பணிகளை விரிவுபடுத்தப் பல கிளைகளை ஆங்காங்கு தோற்றுவித்துள்ளன. இவை சமயப் பணியாற்றி வருவதை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. சமயப் பணியாற்றுவதே முக்கிய பணியாக இருப்பினும் சமுதாய அடிப்படையில் மக்களுக்கு வேறுபல பணிகளையும் இவை புரிந்துள்ளன. உதாரணமாக அன்னதானம், ஔடத தானம், அபயதானம், வித்தியாதானம் போன்று பலவகைத் தானங்களை இவை அளித்துவந்துள்ளன. அன்னதானமாவது பசித் தோருக்கு உணவளித்து ஆதரித்தலாகும். ஔடத தானமாவது நோயாளராக வந்தோர்க்கு நோய் தீர்க்கும் மருந்தும், பிறவும் அளித்து நோய் நீக்கி ஆதரவளிப்பதாகும். அபய தான மாவது ஆதரவின்றித் தவிப்போரைப் பாதுகாத்து அவர்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டலாகும்.

*உனது விடுதலைக்கு வழி பிறரிடம் இல்லை. அது உன்னிடம்தான் உள்ளது.*

வித்தியாதானமாவது, உண்டி உறையுள் ஆகியவற்றை அளித்துச் சமயமும் மொழியும் கற்பித்தலாகும். இலக்கணக் கல்விப்பீடமாகவும் இவை தொழிற்பட்டன. இப்பணிகளை இந்நிறுவனங்கள் செவ்வனே நடைபெற அரசரும் பிறரும் பல மானியங்களைக் கொடுத்து ஆதரித்தனர். இவை பற்றிய விரிவான செய்திகளை இலக்கியம், வரலாறுகள், சமய நூல்கள், கல்வெட்டுக்கள், புலவர்கள் எழுதிய குறிப்புகள் ஆகியவற்றின்மூலம் அறியலாம்.

**சைவ சமய நிறுவனங்கள் - மடங்கள்:**

சைவ சமயத்தை வளர்த்தற் பொருட்டும், மக்களுக்கு நால்வாழ்வளித்தற் பொருட்டும் பல்லவர் காலந்தொட்டே பல சைவ மடங்கள் நிறுவப்பட்டமைக்குரிய ஆதாரங்களைச் சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த பெரியபுராணம் தருகின்றது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய சமய குரவர்கள் திருத்தலங்களை வழிபடச் சென்ற காலங்களில் அண்மையிலுள்ள மடங்களிலே தங்கி வழிபாடாற்றிய செய்திகள் உள்ளன. உதாரணமாக திருமறைக்காட்டுத் திருமடத்திலே சம்பந்தரும், அப்பரும் தத்தம் அடியார் கூட்டத்தோடு தங்கியிருந்து பின் வேதங்களால் அடைக்கப்பட்ட கோயிற் திருக்கதவைத் தேவாரத் திருப்பதிகம் பாடித் திறந்ததும் மூடியதும் திருவீழிமிழலையிலே உள்ள மடத்திலே தங்கியிருந்தபொழுது ஆங்கு பஞ்சமேற்பட இறைவனை வேண்டிப் படிக்காசு பெற்று வறுமையில் வாடியோருக்கு உணவளித்ததும் உணரத்தக்கன. மற்றும் முருக நாயனார், குங்குலியக்கலய நாயனார், அப்பூதியடிகள், சிறுத்தொண்ட நாயனார் முதலிய பலரும் மடங்கள் நிறுவிப் பசு புண்ணியங்களையும், பதி புண்ணியமாகிய சமய வழிபாடுகளையும் நடாத்திய செய்திகளைச் சேக்கிழார் பெருமான் மூலம் அறிகின்றோம்.

**ஞானபரம்பரையினர் நிறுவிய சைவாதீனங்கள்:**

காலப்போக்கில் இச் சைவ சமய நிறுவனங்களின் பணிகள் பல வழிகளில் விரிவடைந்தன. சிறப்பாகச் சந்தான குரவர் பரம்பரையினர் தத்துவ சம்பந்தமான ஆய்வுகள் நடத்துவதற்கு நிலையான நிறுவனங்களை அமைக்கலாயினர். இந்நிறுவனங்கள் சமய ஒழுங்குகளை உடையவரும், சமய சாத்திரங்களைக் குருவாயிலாக நன்கு தெரிந்தவரும் ஆகிய ஞானாசிரியரின் அருளாட்சியின் கீழ்ச் சிறப்பாகச் செயலாற்றத் தொடங்கின. இவை தொடங்கிய காலத்திலிருந்து சைவ சமய நிறுவனங்கள் சிறிய அளவிலுள்ளவை மடங்களென்றும், பரந்த பணிகளை மையமாகக் கொண்டவை ஆதீனங்களென்றும் அழைக்கப்படலாயின. இத்தகைய சைவ ஆதீனங்களுக்கு வித்திட்டவர் மெய்கண்ட தேவரின் முதன் மாணாக்கராகிய அருணந்தி சிவாச்சாரியாராவார். அவரால் நிறுவப்பெற்ற சைவ ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனமாகும்.

இன்று சைவ மடங்களாக உள்ளவை அன்னதானஞ் செய்தல், சைவ புராணபடனஞ் செய்தல், செய்வித்தல், நாயன்மார்கள் சந்தான குரவர் ஆகியோரது குருபூசைகள் நடாத்துதல் பலவகை யாகங்கள் செய்தல், ஆலய வழிபாடு கருதிவரும் அடியார்களுக்கு உண்டி உறையுள் கொடுத்துதவுதல் ஆகிய பணிகளையாற்றி வருகின்றன. இத்தகைய மடங்களை இன்றும் பாடல் பெற்ற தலங்களில் கீரிமலை, செல்வச்சந்நிதி முதலான புண்ணியத் தலங்களிலும் கதிர்காமத்திலும் காணலாம்.

*எதையும் துணிவுடன் செய்துவந்தால் வெற்றி நம்மைத் தேடி வரும்.*

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள் செய்தருளிய நாலாம் பால பாடத்தில் மடம்பற்றிக் கூறுவனவற்றைச் சிறிது நோக்குவோம்.

1. மடமாவது பெரியோர்கள் இருந்துகொண்டு கல்வியறிவொழுக்கத்தையும், சமயத்தையும் வளர்ப்பதற்குரிய இடமாம். மடத்திலே செபம், பூசை, தியானம் முதலியவற்றிற்கும் வேதாகமம், திருமுறைகளை வைத்துப் பூசை செய்வதற்கும் வேதாகமங்களைப் படித்தல், படிப்பித்தல்கட்கும், சமையல், போசனம் முதலியவற்றிற்கும், பரிசாரகர்களுக்கும் அதிதிகளுக்கும் இருத்தற்கும் வெவ்வேறிடங்கள் விதிப்படி கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

2. திருக்கோயிலும் திருமடமும் சமத்துவமுடையவை என்றும் அவைகளிலே செய்யத்தகாத குற்றங்களைச் செய்தவர் நரகங்களில் வீழ்ந்து, சந்திர சூரியர் உள்ளவரையும் அளவில்லாத துன்பங்களை அனுபவிப்பர் என்றும் ஆகமங்களிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே மடங்களைப் பொறுப்பேற்று நடாத்துபவர்கள் ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பவராயும் தம்மைச் சார்ந்தோரை அவ்வாறு நடாத்திச் செல்பவராயும் அமைதல் அவசியமாகும். மடாதிபதிகளாகிய இவர்கள் சைவாசாரமுடையவராகவும், சைவ சித்தாந்த வேதாகம நெறிவழிப் பட்டோராயும் இருத்தல் வேண்டும். பற்றற்ற துறவிகளையே மடாதிபதிகளாக்க வேண்டும் என்பது நாவலரதும், முன்னோரதும் கருத்தாகும்.

சைவ சமய மடங்கள் சைவ சித்தாந்தம் திருமுறைகள் தத்துவ சாத்திரங்கள் வழிபாட்டு மரபுகள் குருபூசைகள் தியானம் என்பவற்றை வளர்க்கும் நோக்கத்துடனும் சமய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் வகையிலும் தோற்றுவிக்கப்பட்டன. இத்தகைய மடங்கள் பலவும் 16ஆம் நூற்றாண்டு முதல் தோன்றி வளர்ந்தன. மடம் என்பது ஆசாரியர், ஞானிகள், சந்நியாசிகள், சித்தர்கள், முனிவர்கள், தொண்டர்கள் வாழ்ந்து வரும் இடம். மடங்கள் அறிவு வழங்கும், ஆன்மீகத்தை வளர்க்கும் அறிவுக்களமாகும். ஆதீனங்களும் இப்பணிகளைச் செய்து வருகின்றன. 14ஆம் நூற்றாண்டிலே ஆதீனங்கள் தோன்றின. திருவாவடுதுறை ஆதீனம், காஞ்சி ஞானப்பிரகாசர் மடம், திருவையாறு செப்பறை மடம், வேளாக் குறிச்சி மடம், தருமபுர மடம் (16ஆம் நூற்றாண்டு) திருப்பனந்தாள் மடம், துழாவூர் மடம், குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம், மயிலம் பொம்மபுர ஆதீனம், வேளாக்குறிச்சி ஆதீனம், காஞ்சி சங்கர மடம், தருமையர் ஆதீனம் என்பன குறிப்பிடத்தக்கவை. (தொடரும்...

---

### ஆன்மிகச் சிந்தனை

மனிதன் முதலில் தன்னைத் தானே தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். இதையே ஆன்மிகம் தன் முதல் நோக்கமாகக் கொண்டுள்ளது. உங்களுக்குப் பிடித்த இறைவன் திருநாமத்தை அதிக அளவில் நாள் முழுவதும் ஜபம் செய்யுங்கள். உங்களுக்குக் கிடைக்கும் நேரம் முழுவதையும் இறைவன் திருநாமத்தை ஜபம் செய்வதற்குப் பயன்படுத்துங்கள். இதனால் தீய எண்ணங்களின், பாவ எண்ணங்களின் வலிமை படிப்படியாகக் குறையும். நாம் ஒவ்வொருவரும் இறைவனின் ஓர் அம்சமாக இருப்பதால் இறைவனுடன் நிரந்தரமான தொடர்புடையவர்கள். நம் ஆன்மாவிலுள்ள அழுக்கு இறைவனுக்காக நாம் அழும்போது நீங்கி விடுகிறது. இறைவனை அடைந்தவர்கள் அனைவரும் அழுது அழுதுதான் இறைவனை அடைந்திருக்கிறார்கள். மனம் சத்துவ குணத்தில் இருக்கும்போதும், தூய மனநிலையில் இருக்கும்போதும் இறைவனுக்காக அழ முடியும். அப்படி அழுபவர்கள் புண்ணிய ஆத்மாக்கள், பாக்கியசாலிகள்.

*நீதி என்று வரும்போது ஆதாரங்களை ஆராய்ந்தே தீர்க்கவேண்டும்.*


# சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற திருவாசக விழா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வருடந்தோறும் மார்கழி மாதத்தில் நடாத்திவரும் திருவாசகப் பெருவிழா இம்முறையும் பக்திபூர்வமாக சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

அன்றைய தினம் காலை 10 மணியளவில் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையினைத் தொடர்ந்து மாணிக்கவாசகப் பெருமானால் அருளப்பட்ட "திருவாசக ஏடுகள்" அழகான சிறிய மஞ்சத்தில் வைத்து ஊர் வலமாக எடுத்துவரப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம குருமுதல்வர் திரு செ. மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில், முதல் நிகழ்வாக பல்வேறு இயற்கை அனர்த்தங்களின்போதும் இன்னும் பல சூழ்நிலைகளிலும் காலன்வயப்பட்ட நம் உறவுகளுக்காக ஓரிரு நிமிட மௌன வணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து திருவாசக பதிகங்கள் ஓதப்பட்டதுடன் விழா களைகட்டியது. சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் திருவாசகச் சிறப்புப் பற்றிய கருத்துரைகள் சிறப்பு நிகழ்வாக இடம் பெற்றது.



திருவாசகவிழா நாள் மார்கழி மாதத்தின் கடைசி வெள்ளியாகவும் அமைந்ததனால் மார்கழிமாத "ஞானச் சுடர்" வெளியீடும் சிறப்புற நடந்தேறியதுடன், தொடர்ந்து அறுபத்துமூவர் குருபூசை வணக்கத்துடன் விழா நிகழ்வுகள் நிறைவுக்கு வந்தன.

28-10-2014இல் மலையகம் - மீரியப்பெத்தையில் நடந்த மண்சரிவு அனர்த்தத்தின்போது, சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இணைந்து செயலாற்றிய பல்வேறு சமூக- சமய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட உதவிகளும்- பணிகளும் பற்றிய விபரம் அடங்கிய -

**"மலையக மீரியப்பெத்தை மண்சரிவின்**
**தாக்கமும் - அதன் எதிரொளியும்"**

எனும் கைநூல் 21-02-2015 ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

*பலரால் சம்பாதிக்க முடியும். ஆனால் சிலரால்த்தான் சேமிக்க முடியும்.*

(கட்டுரைத்தொடர் - 16

# சித்தர்களின் ஞானம்

— திரு சிவ மகாலிங்கம் அவர்கள் —

## அகப்பேய்ச் சித்தர்

அலையும் மனத்தைப் பேயாக உருவகம் செய்து பாடியிருப்பதால் இவர் அகப்பேய்ச் சித்தர் என்று அழைக்கப்படுகிறார். மனத்தை ஒரு பேயாகக் கருதி அதற்குப் பெண் உருக்கொடுத்து, அதனைத் தம்முன் நிறுத்திப் பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் அனைத்தும் உள்ளத்துக்கு உபதேசம் செய்யும் பாடல்களாகவே அமைந்துள்ளன. மனத்தைப் பார்த்து இவர் செய்யும் உபதேசம் மக்களுக்கு கூறும் அறிவுரையாகவே அமைந்துள்ளது.

நமது உடம்பில் ஏற்படும் நோயை விட மனதில் ஏற்படும் நோய் மிகவும் கொடுமையானது. நாம் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணமாக உள்ளது. மனநோய்கள் அனைத்திலும் கொடியது அகந்தையாகும். அதை நோய் என்று சொல்லாமல் பேய் என்று சொல்லலாம். அகந்தை மனிதனை ஆட்டி வைக்கும். அவனைச் சார்ந்து இருப்பவர்களையும் அலற வைக்கும்.

மனம் ஒரு குரங்கு போன்றது. அடிக்கடி கொப்புக்கு கொப்பு தாவிப் பாயும் குரங்கு போல மனித மனமும் ஒரு நிலைப்படுவதில்லை. ஒரு கட்டுக்குள் நெறிக்குள் அடங்கி நிற்காது. நிலையற்று அங்கும் இங்கும் அலைந்து திரியும். அலைபாயும் மனத்தைப் பேய் என்று உருவகம் செய்து அகப்பேய்ச் சித்தர் தனது பாடல்களைத் தந்துள்ளார். அகந்தையை விரட்டியடித்து அறிவில் தெளிவு காணும் அற்புத வழியைத் தனது பாடல்களின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

தன்னை அறிதலே தத்துவ ஞானத்தின் முதற்படி. தன்னை அறியும் உயர்நிலை பெற்றவனுடைய மேனியே ஞானமயமாகி விடும் என்கிறார் அகப்பேய்ச் சித்தர்.

புனித நதிகளில் நீராடுவதால் தீவினைகளை நீக்க முடியாது. நல்வினைகள் இருந்தாலன்றி நாதனைக் காண முடியாது. நான் என்ற அகங்காரம் அற்றுப்போகும் இடமே பேரானந்தத்தைத் தரும் மோன நிலையாகும். ஆசையை விட்டு உன் நினைவிலிருந்து அதனை அகற்றினால் இறைவனை அகத்திலே காணலாம் என்கிறார். மனிதன் என்பவன் காலத்தின் கைதி. எதுவுமே நிரந்தரமின்றி உள்ளது. எல்லாமே மாறிக்கொண்டு இருக்கிறது. மாற்றங்கள் மனித இனத்தை இழுத்துச் செல்கிறது. பின்னால் ஓடுவதைத் தவிர வேறு எதுவும் மனித குலத்திற்குத் தெரியவில்லை. உடம்பில் ஒரு முடி நரைப்பதைக்கூட நம்மால் தடுக்கமுடியவில்லை. நரைப்பதைத் தற்காலிகமாக மறைக்கலாம். நிரந்தரமாகத் தடுக்க முடியாது. மனமும் அதன் எண்ணங்களும் எப்பொழுதும் அலைவுற்றே காணப்படுகிறது. அலைந்து திரியும் மனப் பேயைக் கட்டிப்போட அகப்பேய்ச் சித்தர் பல முயற்சிகள் செய்தார். பசி, தாகம், தூக்கம் எனப் பல உடல் சார்ந்த பிணிகள் தாக்கத் தொடங்கியது. இவற்றை யானைச் சங்கிலிகளால் கட்டுவதுபோலக் கட்டினார். மெல்ல மெல்லப் பசியை வென்றார். உடம்பு அடங்கியது. சுவாசப் பயிற்சியைத் தொடர்ந்து செய்தார். மனமும் அடங்க ஆரம்பித்தது.

*இச்சையும் விருப்பமும் அறிவின் எதிரிகள்.*

உடம்பை அடக்காமல் உள்ளத்தை அடக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டார்.

பதினென் சித்தர்களில் ஒருவராக அகப்பேய்ச் சித்தர் குறிப்பிடப்படுகிறார். மற்றைய சித்தர்களைப்போலவே மெய்யறிவுச் செய்திகளை மக்கள் உணரும்படியாகத் தமது பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார். சித்தர் ஞானக் கோவையில் அகப்பேய்ச் சித்தர் பாடல் என்ற தலைப்பில் தொண்ணூறு பாடல்கள் இருக்கின்றன. வள்ளுவர் பரம் பரையில் தோன்றிய இவருடைய இயற்பெயர் நாயனார் என்று கூறப்படுகிறது. திருவள்ளு வர்போல் இவரும் நெசவுத் தொழில் செய்து வந்தார். அவரது நேர்மை வருமானத்தை உயர்த்தியது. நாயனார் மனம் பொருளில் பதியவில்லை அருளைத் தேடியே நின்றது. போலித்தனமும் இயந்திரமயமான வாழ்வும் தான் அவர் கண்ணுக்குத் தெரிந்தது. வீடு வீடாகப் புடவைத் துணிகளை விற்கச் சென்ற போது அதை வாங்க முன்வருபவர்களின் மனங்களில் ஆசை அலையடிப்பதைக் கண்டு கொண்டார். குறிப்பாக பெண்கள் புடைவை, துணி, நகை விஷயத்தில் மோகம் கொண்டு தள்ளாடியதை அறிந்த இவருக்கு அகத்திலே சிரிப்பு ஏற்பட்டது.

மனத்தை மட்டும் அலையாமல் நிறுத்தி விட்டால் அதுவே முத்திக்கு வழிகாட்டும் என்கிறார் அகப்பேய்ச் சித்தர். நிலையற்று ஒரு கணப்பொழுதில் அழிந்துபோகும் இவ் வுலக வாழ்விற்காக மயங்கி நிற்பதில் எது வித அர்த்தமும் இல்லை என்றார். விதியால் வந்த உடம்பைக் கொண்டு அறிவோடும் உணர்வோடும் செயற்பட்டால் நிலையான பேரின்பப் பெருவாழ்வைப் பெறலாம் என்கிறார். அலைபாயும் மனத்தை அடக்குவதற்கு உள்ள ஒரேவழி தவம் செய்வதுதான் என் பதை உணர்ந்து கொண்டார். தவம் செய் யவும், ஞான உபதேசம் பெறவும் உரிய குரு தமக்குக் கிடைக்க வேண்டுமென்று எல்லா இடமும் தேடினார். பல சாதுக்களை அணு கிப் பார்த்தார். அவர்களின் குணக் குறைகள் இவரைத் தூர விலக வைத்தது. இறுதியிலே கானகத்தில் தென்பட்ட ஒரு ஜோதி மரத்தின் அடியில் அமர்ந்து நான்கு வேதங்களையும் பதினெட்டுப் புராணங்களையும் தொகுத்த வியாச முனிவரை மானசீகக் குருவாக மன தில் இருத்தித் தியானம் செய்தார். தவம் கனிந்தது. வியாசர் அவர் முன் தோன்றி “உன் கவலையை விடு; உனக்கு அனுபூதி நிலை கூடும்; மக்களின் மனம் தூய்மை பெறு வதற்காக உன் அனுபவங்களை எழுதிவை. அது மக்களின் வாழ்க்கைப் போக்கினை மாற்றுவதற்கு உதவியாக இருக்கும்” என்று உபதேசித்து விட்டுச் சென்றார்.

தவம் கைகூடிய நிலையில் வியா சரின் கட்டளை நினைவுக்கு வந்தது. மக்க ளின் அறிவு மாயையினால் மயங்கித் தடு மாறுகின்றது. அந்த மாயை பெற்ற பிள்ளை தான் மனம். அந்த மனப்பேயோ ஓய்வு ஒழிவு இல்லாமல் எல்லா இடங்களிலும் சுழன்று குதித்து தாவிப் பாய்கின்றது. இவ்வாறு வெறி கொண்ட மனத்தை அகப்பேய் என்று அழைத் துப் பாடல்களைப் பாடியுள்ளார். இதன் பிடியிலிருந்து விலகி ஆனந்தமாக வாழ்வதற் குரிய பல உபதேசங்களைப் பாடல்களாகத் தந்துள்ளார்.

மனிதனைப் பிடிக்கும் மூவகை நோய்களில் உயிர்நோயாகிய பிறவிநோய் மிகவும் கொடியது. மற்றைய நோய்களாகிய உடல்நோய்க்கும், உள நோய்க்கும் மருந்து களும், தீர்வுகளும் உண்டு. ஆனால் உயிர் நோயாகிய பிறவிநோய் நீங்கவேண்டுமானால் வைத்தியநாதனாகிய இறைவனுடைய திரு வருள் மருந்தினைப் பெறவேண்டும். இறை யருளைப் பெறுவதற்கு இடைவிடாத முயற்சி வேண்டும். பிறவி நோய் நீங்க வேண்டுமானால்

யாருக்கும் தீமை செய்யக்கூடாது. உண்மையான துறவு பூண்டவர்கள் பேராசையைக் கைவிட்டவர்கள் தீய செயல்கள் எதனையும் செய்யமாட்டார்கள். செயலற்றுச் சும்மாதான் இருப்பார்கள். காண்பவன், காட்சி, காட்சிப் பொருள் என்ற மூன்றும் அற்று இறைவனுடன் அத்துவிதமாய் நிற்கும் நிலையே சும்மா இருக்கும் நிலை என்று முருகப்பெருமான் அருணகிரியார்க்கு உபதேசம் செய்தார் என்பதை

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"

எனக் கந்தரநுபூதிப்பாடல் குறிப்பிடுகிறது.

பிறந்து இறந்து துன்பப்படாமல் இன்பம் அடைய வேண்டும் என்றால் யாருக்கும் தீமைகள் எதுவும் செய்யக்கூடாது. உண்மையான துறவு பூண்டவர்கள், பேராசையைக் கைவிட்டவர்கள் தீயகாரியங்கள் எதனையும் செய்யமாட்டார்கள். செயலற்றுச் சும்மாதான் இருப்பார்கள் என்பதை அகப்பேய்ச் சித்தரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

பிறவி தீர வென்றால் - அகப்பேய்!
பேதகம் பண்ணாதே!
துறவியானவர்கள் - அகப்பேய்!
சும்மாயிருப்பார்கள்.
(பேதகம்- தீமை; மாறுபாடான செயல்கள்)

தெய்வம் ஒன்றுதான் நித்தியமானது; நிலையானது; தத்துவமானது; அறிவிக்காமல் அறிவது; சதாசிவ வடிவானது. மற்றைய அனைத்தும் மாயை உருக்கொண்டது. நீ எங்கு சென்றாலும் பிச்சையுண்டு வாழ்ந்தாலும், பிறவித் துன்பம் தீராது. காரணம் பிறவியே ஒருவினை. உலகில் வேடங்கள் வேண்டாம்; விதண்டா வாதங்கள் வேண்டாம். இவைகள் வேதனைதான் செய்யும். உப்புக் கலந்த நீரில் உப்பானது எல்லா இடமும் வியாபித்துக் கலந்திருப்பதுபோல இறைவனும் அண்டசராசரமெல்லாம் வியாபித்திருக்கிறான். இதனைப் புரிந்துகொண்டு ஆசையை அகத்திலிருந்து முற்றாக அகற்றினால் முத்தியின்பத்தை அடையலாம் என்கிறார் அகப்பேய்ச் சித்தர்.

"தோன்றும் வினைகளெல்லாம் சூனியம் கண்டாயே
தோன்றாமல் தோன்றிவிடும் சுத்த வெளிதனிலே
பொய்யென்று சொல்லாதே போக்கு வரத்து தானே
மெய்யென்று சொன்னக்கால் வீடு பெறலாமே"

தீமை செய்யாமல் அறநெறியில் நின்று வாழ்பவர்கள் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பரந்த சிந்தனையுடன் வாழ்வார்கள். இவர்கள் மக்களிடம் வேற்றுமை பாராட்டமாட்டார்கள். உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற பிரிவினையை மதிக்கமாட்டார்கள். "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய மக்களாகப் பிறந்த அனைவரையும் சமமாகவே கருதுவார்கள். தன்னை அறிந்த ஞானியின் உள்ளம் இவ்வாறு பக்குவம் அடைந்திருக்கும். சித்தர்கள் இறைசக்தியை மாந்தி அகத்திலே வைத்திருப்பார்கள். இவர்கள் மறை நூல்கள் அனைத்தையும் ஓதி உணர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய அகத்திலே "தான்" என்ற கர்வம் எள்ளளவும் இருக்காது.

*பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.*

சாதி பேதம் இல்லை - அகப்பேய்
தானாக நின்றவர்க்கு
ஓதி உணர்ந்தாலும் அகப்பேய்
ஒன்று தான் இல்லையடி.
-அகப்பேய்ச் சித்தர்.

சாத்திரங்களின் மூலம் கடவுளைக் கண்டு விடலாம் என்பது பைத்தியக்காரத்தனம். கடவுளைக் காட்டும் சாத்திரங்கள் என ஒன்றுமேயில்லை. இப் பிரபஞ்சத்தில் நமது கண்முன் நடமாடும் எவையும் இறைவன் இல்லை. இவை அனைத்தையும் கடந்ததே கடவுள். கடவுளைக் கண்ணால் காணவும் முடியாது. உள்ளத்தால் கற்பனை செய்து பார்க்கவும் முடியாது என்று பாடுகின்றார் அகப்பேய்ச் சித்தர்.

சாத்திரம் இல்லையடி - அகப்பேய்
சலனம் கடந்ததடி
பார்த்திடல் ஆகாதே - அகப்பேய்
பாவனைக்கு எட்டாதே.
(சலனம்- இயங்கும் பொருள்கள்)

அனைத்திற்கும் அப்பாற்பட்டு நிற்கும் இறைவன் என்னும் சக்தியிடமிருந்துதான் இந்த உலகம், பஞ்சபூதங்கள், உயிர்கள் அனைத்தும் தோன்றின. இறைவனை அகாரம் என்றும், உயிர்களை உகாரம் என்றும் குறிப்பிடும் சமய மரபின்படி இதனை விளக்குகின்றார் அகப்பேய்ச் சித்தர்.

அகாரம் இத்தனையும் அகப்பேய்!
அங்கென்று எழுந்ததடி
உகாரங் கூடியபடி அகப்பேய்
உருவாகி வந்ததடி.

மனிதன் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களைக் கொண்டுதான் இயங்குகிறான். எனினும் இவை நிலைபேறுடையனவல்ல; அழியும் தன்மை உடையவை. இவையனைத்தும் காரியங்கள்; இவற்றுக்கு மூலமான காரணம் ஒன்றுண்டு. அதுவே காரணமான பொருள்; காரணமாக நிறைந்திருப்பதுதான் இறைவன் என அகப்பேய்ச் சித்தர் குறிப்பிடுகின்றார்.

காரணம் ஆனதெல்லாம் அகப்பேய்!
கண்டது சொன்னேனே
மாரணங் கண்டாயே அகப்பேய்
வந்த விதங்கள் எல்லாம்.
(மாரணம்- மரணம், சாவு)

மாடம் முதலியவை இறைவனை வழிபடுவதற்குரிய படிநிலைகள். மூடம் என்பது உள்ளத்தைக் குறிக்கும். இது உடம்பால் மூடியிருப்பதால் மூடம் எனப்படுகிறது. பரப்பிரம்மமாகிய இறைவன் மாடங்களிலோ, மண்டபங்களிலோ இருப்பதில்லை. வீடுகளில் தனி அறைகளிலோ, கோயில்களிலோ வேடம் பூண்டவர்களிடமோ இருப்பதும் இல்லை ஆனால் இறைவன் ஆசையை விட்டவர்களது உள்ளத்தின் உள்ளிருந்து கொண்டே அவர்களை இயக்கி முத்தியை அருளுகின்றான்.

பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியமெதையும் செய்ய முடியாது!

மாடத்துளானல்லன்; மண்டபத்தானலன்
கூடத்துளானல்லன்; கோயிலுள்ளானல்லன்;
வேடத்துளானல்லன்; வேட்கைவிட்டார் நெஞ்சில்
மூடத்துள்ளே நின்று முத்தி தந்தானே.

-திருமந்திரம். 2616.

என்னுடைய முந்திய பிறப்புக்களின் ஊழ்வினைப் பயனால் நான் மூர்த்தியாகிய பரப்பிரம்மத்தை நினையாமல் இருந்து விட்டேன். பின் நான் பித்தனைப் போன்று பிதற்றிக் கொண்டிருந்தேன்; என் உடம்பினுள்ளே பொருந்தியிருக்கின்ற சுயஞ்சோதியை என்னுள்ளே நினையாமல் இருந்து விட்டேன் என்று கழிவிரக்கம் கொண்டு அப்பர் பெருமான் பாடுகின்றார்.

முன்னை என் வினையினாலே மூர்த்தியை நினைய மாட்டேன்
பின்னை நான் பித்தனாகிப் பிதற்றுவன் பேதையன் நான்
என்னுளே மன்னி நின்ற சீர்மைய தாயினானை
என்னுளே நினைய மாட்டேன்; என் செய்வான் தோன்றினனே.

தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை என்பது பொருள். எனவே தத்துவ ஞானம் என்பது உண்மையை அறிதல் எனப் பொருள்படும். பரப்பிரமமாகிய சதாசிவ வடிவமே உண்மை என்றும் மற்றைய தெய்வமெல்லாம் மாயையின் வடிவம் என்றும் அகப்பேய்ச் சித்தர் குறிப்பிடுகின்றார்.

தத்துவத் தெய்வமடி - அகப்பேய்
சதாசிவ மானதடி
மற்றுள்ள தெய்வமெல்லாம் - அகப்பேய்
மாயை வடிவாமே.

இந்த உலக வாழ்க்கையில் ஆசையின் வசமாகி எத்தனையோ மனிதர்கள் பல துன்பங்களுக்கு ஆளாகுகிறார்கள். புலன்களின் வழியே மனத்தை ஓடவிட்டு, இன்பம் போல் தோன்றி இன்னல் விளைவிக்கும் சிற்றின்பக் கேளிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். பிறப்பு இறப்பாகிய சுழற்சியில் இருந்து இவர்களால் விடுபட முடிவதில்லை. பஞ்சப் புலன்களில் இருந்து தோற்றம்பெறும் தன் மாத்திரைகளாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தையும் விளாங்கனி என உருவகம் செய்வது சித்தர்களின் மரபாகும். ஐம்புலன்களின் வழியாகப் பெறப்படும் இன்பங்களுக்கு வலை விரிப்பதைக் கள்ளவழி என்று கூறுகிறார்கள். ஜீவான்மா குருநாதன் உணர்த்திய பின்பு தலைவனாகிய இறைவனைக் காண்கிறது. அப்படிக் கண்டவுடன் சிறுபிள்ளைத் தனமாக கள்ள ஆசை நீங்கி விடுகிறது. ஐந்து பிள்ளைகளும் பிதற்றிக் கொண்டு இருப்பதை ஒழித்து ஞான மோனக் களிப்பிலே ஒடுங்கி விடுகிறார்கள். கள்ளப் புலன்கள் ஐந்தும் ஞானப் புலன்களாக மாறி விடுகின்றன.

கள்ள வழியில் விழுந்த விளாங்கனி
கொள்ளச் சென்றவர் குழியில் விழுந்தனர்
தெள்ளிய ஞானி தெளிவுறக் கண்டபின்
பிள்ளைகள் ஐவர் பிதற்றொழிந்தாரே.

ஆடம்பர வாழ்வு வாழ்ந்தும், வயிறார உணவினை உண்டும் வாழ்கின்ற சிலர் போலிவேடம்பூண்டு அப்பாவி மக்களை மயக்கித் தம்மை வளர்த்துக் கொள்கிறார்கள்.

*உண்மைக்காக எதையும் துறக்கலாம்; ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.*

இந்தப் பொய்வேடத்தை விட்டுச் சிவனை நினைந்து ஆடியும், பாடியும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தும் சிவனது திருவடியைத் தேடிக் காண முற்படுங்கள் என வேடதாரிகளுக்கு அறிவுரை கூறுவதைப் பின்வரும் திருமந்திரப் பாடலில் காணலாம்.

ஆடம்பரங் கொண்டடி சிலுண்பான் பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் காணீர் சிவன் அவன்தாள்களே.

அறிவுச் சின்னங்கள் அறிவில்லாத மூடர்களிடம் பொய்வேடமாக அமைவதைக் கண்டு அந்த வஞ்சகத்தை சித்தர்கள் உள்ளம் சாடுகிறது. திருமூலரைப் போலவே பிற்காலத்தைச் சேர்ந்த சித்தர்களும் போலி வேடதாரிகளைக் கண்டிக்கிறார்கள்.

தாடி வளர்த்துச் சடை வளர்த்து - நல்ல
சந்நியாசி என்றொரு வேடமிட்டு
ஓடித் திரிந்த புலையாட்டை - இங்கு
ஒப்புவதாரடி ஞானப் பெண்ணே!

-ஞானக்கும்மி.

புலையாட்டம் என்றால் அது பித்தலாட்டம், வஞ்சனை, ஏமாற்று என்றும் பொருள். வெறியாட்டமாகிய காம லீலைகளையும் இது குறிக்கும். வெளிவேடம் பூண்டு சாமானிய மக்களை மயக்கும் வேடதாரிகளை இந்த ஞானக்கும்மிபாடல் சாடுகிறது. மெய்ஞ்ஞான குருவின் மெய்ஞ்ஞான உபதேசத்தை நன்கு உணர்ந்த காரணத்தினால் ஞானிகளுக்குப் பொய்வேடப் போலிகளிடம் ஆவேசச் சீற்றம் பொங்குகிறது. உடம்புக்குள்ளே உத்தமனைக் காணுகின்ற நெறி சித்தர் நெறியாகும். காயத்துக்குள்ளே கடவுளைக் காணும் நெறியினைச் சித்தர்கள் தமது பாடல்களின் ஊடாக விளக்குகின்றார்கள்.

(தொடரும்...

## தெய்வங்களுக்கு வாழைப்பழம் படைப்பது ஏன்?

எல்லாத் தெய்வங்களுக்கும் தவறாமல் வாழைப்பழம் படைக்கிறார்கள். மற்ற எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு, கொட்டையை எறிந்தால் மீண்டும் முளைக்கும். ஆனால், வாழைப்பழத்தை உரித்தோ, முழுமையாகவோ வீசினாலும்கூட மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முத்தியைக் காட்டுகிறது. இறைவா! மீண்டும் பிறவாத நிலையைக் கொடு! என வேண்டவே நாம் நமது கடவுளுக்கு வாழைப்பழம் படைக்கிறோம். அதுபோல் தேங்காய்க்கும் அந்தக் குணம் உண்டு. அதுமட்டுமல்ல தேங்காய், வாழைப்பழம் இரண்டும் நமது எச்சில் படாதவை. மாம்பழத்தை நாம் சாப்பிட்டுவிட்டு, கொட்டையைப் போட்டால் அந்த விதையிலிருந்து மாமரம் உருவாகிறது. ஆனால் தேங்காயை சாப்பிட்டுவிட்டு ஓட்டைப் போட்டால் அது முளைக்காது. முழுத்தேங்காயிலிருந்துதான் தென்னைமரம் முளைக்கும். அதுபோல, வாழைமரத்திலிருந்துதான் வாழைக்கன்று வரும். அப்படி நமது எச்சில்படாத இவற்றை இறைவனுக்கு உகந்ததாக நமது முன்னோர்கள் படைக்கும் மரபினை உருவாக்கினார்கள். நாமும் இந்த மரபினைப் பின்பற்றி வருகிறோம். இதுவே தர்மத்தின் தனிச்சிறப்பு.

*வலிமையே - மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமான, அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.*

# 2015இல் சந்நிதியான் ஆச்சிரம சேவை

## -ஒரு சுருக்கமான தொகுப்பு-

03.02.2015 செவ்வாய்க்கிழமை:

ஊர்காவற்துறை காளிகோவிலடியைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் சுகிர்தரஞ்சினியின் பிள்ளைக்கு சிறுநீரக சிகிச்சைக்காக ஒரு தொகைப் பணம் வழங்கப்பட்டது.

08.02.2015 ஞாயிற்றுக்கிழமை:

நீரவேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி தேவஸ்தான அறங்காவலர் சபைக்கு அறநெறிப் பாடசாலை அமைப்பதற்காக 20 சீற் வழங்கப்பட்டது.

27.02.2015 வெள்ளிக்கிழமை:

யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் தரம் 11இல் கல்வி பயிலும் கரவெட்டியைச் சேர்ந்த செல்வி யோ. கிருஷாளினி என்பவருக்கு ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியை திரு ச. லலீசன் அவர்கள் வழங்கினார்.

27.02.2015 வெள்ளிக்கிழமை:

அச்சுவேலி தெற்கு- அச்சுவேலி, சிவசக்தி சனசமூக நிலையத்திற்கு 20 கதிரைகள் வழங்கப்பட்டது.

15.05.2015 வெள்ளிக்கிழமை:

நீர்வேலியைச் சேர்ந்த யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 9இல் கல்வி பயிலும் கஜமுகன் மதுஷன் என்பவருக்கு திரு இரா. கேதீசன் அவர்கள் ஆச்சிரமத்தால் அன்பளிப்பு செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடியைக் கையளித்தார்.

03.07.2015 வெள்ளிக்கிழமை:

வல்வெட்டித்துறை முன்பள்ளி கொத்தணி விளையாட்டு விழாவிற்காக 125 மாணவர்களுக்கான (125 சில்வர் கப், 125 கோப்பை) பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

16.10.2015 வெள்ளிக்கிழமை:

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு 25 சேலைகள் வழங்கப்பட்டது.

16.10.2015 வெள்ளிக்கிழமை:

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக முதியோர் தினத்தை முன்னிட்டு 15 சேலைகள், 15 சாரங்கள் வழங்கப்பட்டது.

*உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.*

23.10.2015 வெள்ளிக்கிழமை:

தொண்டைமானாறு வளர்மதி முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வை முன்னிட்டு, ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட 85 மாணவர்களுக்கான பரிசுப் பொருட்களாக - புத்தகப்பை, தண்ணீர்ப் போத்தல் என்பவற்றை திரு A.K. கருணாகரன் வழங்கினார்.

27.11.2015 வெள்ளிக்கிழமை:

அக்கராஜன் குளத்தைச் சேர்ந்த கோ. கோபிஷாந் என்னும் சிறுவனுக்கு இருதய சிகிச்சைக்காக ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட ஒருதொகைப் பணத்தை Dr திருமதி கணேச லிங்கம் மனோரஞ்சிதமலர் அவர்கள் வழங்கினார்.

27.11.2015 வெள்ளிக்கிழமை:

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் தரம் 9இல் கல்வி கற்கும் கமலநாதன் தனுஷிகா என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

* 70 பல்கலைக்கழக மாணவர்களுக்காக மாதாந்த உதவிப்பணம் வங்கியில் வைப்பில் இடப்படுகிறது.

* ஆச்சிரம வைத்திய சேவை மண்டபத்தில் வாரம் இருமுறை (ஞாயிறு + புதன்) இலவச வைத்திய சேவை நடைபெறுகிறது. வாரத்தில் 100பேருக்குக் குறையாமல் பயன்பெறும் நோயாளர்களுக்கான மருந்துகள் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகிறது.

* மலையக அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படுகின்றன.

1). சீருடை வழங்கியமை
2). சீருடைகள் வழங்கியமை.
3). புத்தகப்பை, கொப்பி, பேனா, பென்சில் வழங்கியமை.
4). கதிரைகள், அலுமாரிகள் வழங்கியமை.
5). வினாத்தாள்கள் அடங்கிய பயிற்சிப் புத்தகங்கள் புலமைப் பரிசில் மாணவர்களுக்கு வேறாகவும் - ஏனைய தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வேறாகவும் பல தடவைகள் வழங்கப்பட்டமை.

ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமைகளிலும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட- கணவனை இழந்த- குடும்பத் தலைவியருக்கு வாழ்வாதார உதவியாக அரிசி, உதவிப் பணம் ஆகியவை வழங்கப்படுகின்றது.

---

கடவுள் இருந்தால் அவனை நாம் காணவேண்டும். ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும். அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு செய்வதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.

-சுவாமி விவேகானந்தர்-

# தைப்பொங்கல்

– திரு சச்சிதானந்த ஐயர் அவர்கள் –

பார் உலகெங்கும் பஞ்சபூதங்களின் துணையுடன் உயிரினங்கள் தோன்றி மறைகின்றன. இதன் பயனாக மனிதகுலம் தோன்றி உள்ளது. மனிதகுலம் தோன்றிய காலம் தொட்டு ஏதோ ஒரு நம்பிக்கையில் பல்வேறு மதங்களின் அமைப்பின்மூலம், வெவ்வேறு கடவுளை குலதெய்வமாக வணங்கி வழிபாடு செய்து வருகின்றனர். மதநம்பிக்கை மேலோங்கி வருவதனை அவதானிக்க முடிகின்றது. அந்த வரிசையில் சைவ சமயத்தவர்களின் தைப் பொங்கல் தினம் ஒவ்வொரு வருடத்தில் வரும் உத்தராயணம் எனப்படும் தை மாதப்பிறப் பான முதலாம் திகதி சூரியனை மையமாகக் கொண்டு தைப்பொங்கல் என்னும் விழாவை விவசாயிகள் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இது சூரியனுக்காக நன்றி செலுத்தும் விழா என வர்ணிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இது உண்மையல்ல. மனிதன் குறித்த காலத்தில் அழிந்துவிடுகின்றான். மனித குலம் அழிந்தாலும் சூரியன் உள்ளபடியே இருக்கும். ஆகவே சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்தும் வகையில் பொங்கல் நிகழ்வு என்பதோடு நின்றுவிடாது மனிதன் மனிதனாக வாழ்வதற்கான விழா என்பதனை நினைவில் கொண்டு வீட்டு முற்றத்திலும் ஆலய முன்றலிலும் பொது இடங்களிலும் பூரண கும்பம் வைத்து மாவிலை, தோரணம், கோலம் போட்டு புதிய பானையில் திருநீறு, சந்தனம், குங்குமம் இட்டு இஞ்சி, மஞ்சள் இலைகட்டி நீர் நிரப்பிய பானையில் சிறிதளவு பசுவின் பால் கலந்து அடுப்பில் ஏற்றி வைத்து பானையில் நிரப்பப்பட்ட நீர் சிறிதளவு பானையை விட்டு பொங்கி வழிந்தபிறகு அரிசி போட்டு சாதமாக இறக்கப்பட்டு வெண் பொங்கலாகவும், சர்க்கரைப் பொங்கலாகவும் படைக்கப் படுவது வழக்கமாக உள்ளது. இவை



குறை இல்லாத மனிதன் இல்லை. அதைக் குறைக்கத் தெரியாதவன் மனிதனே இல்லை.

அனைத்தும் வழமையான செயற்பாடு. பானையில் இடப்பட்ட பால்கலந்த நீர் சிறிதளவு பொங்கி எழுந்து வெளியே தள்ளப்பட்ட பின்னர்தான் அரிசி போடப்படுகிறது. எமது உள்ளத்தில் நிறைந்திருக்கும் காமம், கோபம், விரோதம் என்பன பானையில் நிரப்பப்பட்ட நீர் எப்படிப் பானையைவிட்டு வெளியே தள் எப்படுகின்றதோ அதேபோன்று மேற்குறித்த எம்மனதில் உள்ள தீய குணங்களை ஒரு நாளைக்காவது மறந்து சாதம் பொங்கப்பட்டு மற்றவர்கள் உண்ணும்போதும் அவர்களிடம் இருந்தும் தீய எண்ணங்கள் அகலும் என்பது உண்மை.

மேலும் மஞ்சள், இஞ்சி இவை நிலக் கீழ்க் கிழங்குகள். இவை இரண்டும் பார்ப் பதற்கு குஷ்டரோகம் போன்ற விதத்தில் அமைந்துள்ளன. இதற்காக அதனை ஒதுக்கி விட முடியாது. ஏனெனில் எமது உடலுக்கு இஞ்சி இன்றியமையாததொன்றாகும். அதே போன்று மஞ்சள் மருத்துவகுணம் நிறைந்துள் ளது. இது தொற்றுநீக்கியாக இருப்பது மட்டுமல்ல. உடலுக்கு அழகையும் பெற்றுத் தரவல்லது. இந்த இரண்டு வகையான குஷ்ட ரோகக் கிழங்குகள் எமது உடலுக்கு எப்படி அவசியமான ஒன்றாக இருப்பதுபோன்று எம்மவரில் கூன், குருடு, நொண்டி, சாதி, மதம், அநாதைகள் இப்படியாக நலிவுற்ற வர்களை நமது உறவாக ஏற்று மனித குலத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற் காகவே இஞ்சி, மஞ்சள் இலை பொங்கல் பானையில் கட்டப்படுகின்றன. ஆகவேதான் தைப்பொங்கல் எனப்படும் விழா இந்துக்கள், தமிழர்கள் மட்டுமல்ல, உலகில் உள்ள அனைவரும் இவ்விழாவின் தன்மையினை உணர்ந்து கொண்டாடி அதன்படி நடைமுறை யில் கடைப்பிடிப்போமேயானால் நாட்டு மக்க ளிடையே சாந்தி, சமாதானம், ஒற்றுமை ஏற் படும் என்பது திண்ணம். ஆகவே தைப்பொங் கல் எனப்படுவது சமயம் கடந்தும் மக்களுக் காகச் செய்யப்படும் விழாவாகக் கொண்டாடு வோமாக.

## குருபூஜை தினங்கள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 28 | தை | 14 | வியாழன் | சண்டேசுரர் |
| பெப்ரவரி | 02 | தை | 19 | செவ்வாய் | திருநீலகண்டர், தாயுமானவ சுவாமிகள் |
| பெப்ரவரி | 06 | தை | 23 | சனி | நயினாதீவு முத்துக்குமாரசாமி |
| பெப்ரவரி | 17 | மாசி | 05 | புதன் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| பெப்ரவரி | 24 | மாசி | 12 | புதன் | திருவள்ளுவர் |
| மார்ச் | 20 | பங்குனி | 07 | ஞாயிறு | யோகர்சுவாமி |
| மார்ச் | 26 | பங்குனி | 13 | சனி | காரைக்காலம்மையார் |

*சேவையில் நாட்டம் உள்ளவர்களுக்குத் தேவைகள் அதிகம் இருப்பதில்லை.*

# 2015ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | மாதம் | பக்கம் |
|---|---|---|
| 1. நாம் நம்மை நன்றாகச் சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும் | மாசி | 53 |
| 2. இந்துமதம் | பங்குனி | 08 |
| 3. ஹின்டு போட் இராஜரெத்தினம் | தை | 19 |
| 4. அபலைகளின் கண்ணீர் துடைப்பது | பங்குனி | 29 |
| 5. சுருதி, யுக்தி, அனுபவம் | சித்திரை | 56 |
| 6. வை.க. சிற்றம்பலம் | ஐப்பசி | |
| 7. பகை, நொதுமல், நட்பு, ஒருபக்கம் சாராமை இருப்பது | புரட்டாதி | 21 |
| 8. இளமைப் பருவம் | தை | 11 |
| 9. சிவத்திரு வ. குமாரசாமிஐயர் | பங்குனி | 16 |
| 10. பரம்பொருளோடு ஒரு நிரந்தரமான உறவை | புரட்டாதி | 38 |
| 11. என்னுடையது எனும் எண்ணம் | மாசி | 20 |
| 12. தவத்திரு யோகர் சுவாமிகள் | பங்குனி | 50 |
| 13. பணிவும் வாக்கு சாதுரியமும் | சித்திரை | 57 |
| 14. வியாச முனிவர் | மாசி | 15 |
| 15. திருவைந்தெழுத்தை ஓதவேண்டும். | சித்திரை | 35 |
| 16. உள்ளம் வெதும்பல், பொய் தவிர்த்தல் | புரட்டாதி | 04 |
| 17. பசுவைப்பற்றி | ஆவணி | 24 |
| 18. உமாபதி சிவம் | ஆடி | 51 |
| 19. பகுத்தறிவு | வைகாசி சு.த. தகவல் | |
| 20. தன்வயத்தராதல், தூய உடம்பினராதல், வரம்பில் இன்பம் உடைமை, பேரருள் உடைமை, இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், வரம்பில் ஆற்றல் உடைமை, தூய அறிவினனாதல், முற்றும் உணர்தல் ஆகியன. | வைகாசி | 15 |
| 21. ஞானவழி | ஆனி | 57 |
| 22. செல்வச்சந்நிதி, கதிர்காமம் | ஆவணி | 17 |
| 23. நமது அறியாமை | ஆனி | 46 |
| 24. பாஞ்சால | ஆடி | 12 |
| 25. துன்பத்திலிருந்தும், கவலையிலிருந்தும் விடுதலை அளிக்கக் கூடியவரே | ஆடி | 12 |

*தீயவனை நண்பனாக்கிக்கொள்வதைவிட தனிமையை நண்பனாக்கிக்கொள்வது மேல்.*




**1ஆம் பரிசு** — **ருக்மணி ஆறுமுகம்**
சிவன்வீதி,
ஆவரங்கால்.

**2ஆம் பரிசு** — **திருமதி கு. ஜெயமலர்**
159/2,கே.ஆர் ஒழுங்கை,
பலாலிவீதி,
கோண்டாவில்.

**3ஆம் பரிசு** — **திருமதி ம. சுவாமிநாதன்**
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

**1. ந. வத்சன் சத்தியவாணி**
07- பயணியர் வீதி,
மட்டக்களப்பு.

**2. திருமதி தயாநிதி பாலசுந்தரம்**
கலைவாணி வாசம்
பிள்ளையார் கோவிலடி, நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

**3. திருமதி ம. ஸ்ரீஸ்கந்தராசா**
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**4. பாலசுப்பிரமணியம் நிர்மலாதேவி**
280, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**5. பாலகிருஷ்ணன் சீதாதேவி**
முடக்கந் தோட்டம்,
அல்வாய்.

**6. திருமதி ஏகாம்பரம் ஜெயராணி**
No.2, புறூடி ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

**7. திருமதி ந. சந்திரசேகரம்**
செல்லப்பிள்ளையார் கோவிலடி,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

**8. திருமதி பங்கஜமலர் பஞ்சலிங்கம்**
புனித செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**9. அ. சுப்பிரமணியம்**
ஓய்வுநிலை அதிபர்,
கிழுவானை வீதி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

**10. வ. சிவஞானம்மா**
விச்சினாவளவு, அல்வாய் மேற்கு,
திக்கம்.

**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின் போது (26.02.2016) வழங்கப்படும்.**

*அறியாமையுடன் நூறு நாட்கள் வாழ்வதைவிட அறிவுடன் ஒருநாள் வாழ்வது மேல்.*

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# மதுரை மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கோவில்

– வல்வையூர் அப்பாண்ணா –

*பாண்டி நாட்டின் பாடல்பெற்ற திருத்தலங்கள் பதினான்கில் தலையாயது மதுரைத் திருக்கோவில்.

*கபிலர், பரணர், நக்கீரர் முதலிய தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த பதி இது.

*புலவர்களுடன் தானும் ஒருவராயிருந்து, இறைவன் தமிழ்ச் சங்கத்தில் தமிழாய்ந்த தனிச் சிறப்புடைய தலம்.

*திருஞானசம்பந்தர் அனல் - புனல் வாதங்களை நிகழ்த்தி சைவத்தைத் தழைக்கச் செய்த தண்பதி.

*பஞ்ச சபைகளுள் "வெள்ளியம்பலம்" எனப் போற்றப்படுகின்ற இடம் மதுரை.

*இராஜசேகர பாண்டியனின் விருப்பத்திற்கமைய இறைவன் கால்மாறி ஆடிய திருத்தலமும் இதுவே.

*ஞானசம்பந்தர் - அப்பர் பாடல்பெற்ற திருத்தலம்.

*இறைவியே தடாதகையாக அரசாண்ட திருநகரம்.

*இறைவனின் அற்புதச் செயல்கள் 64 திருவிளையாடல்களும் நிகழ்ந்த மைய இடமாகத் திகழ்ந்த அற்புதத் திருக்கோவில்.


*மதுரை ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே அரை மைல் தூரத்தில் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது மதுரை மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருக்கோவில். மதுரை மாநகரின் மையத்தில் 14 ஏக்கர் பரப்பளவு கொண்ட பரந்த இடத்தில் கோயில் உள்ளது. சிவராசதானி, பூலோக கைலாசம், கடம்பவனம், நான்மாடக் கூடல் (திருவிளையாடற் புராணம்: நான்மாடக் கூடலான படலம்: 19) என்பன மதுரைக் கோவிலின் மறு பெயர்களாகும்.*

*அங்கயற்கண்ணி அம்மை பாண்டியனின் திருமகளாக "தடாதகை"யாக வளர்ந்து (தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்: 04) சோமசுந்தரராக வந்த சிவபெருமானைத் திருமணஞ் செய்து (திருமணப் படலம்: 05) அரசு புரிந்த பழம்பதியாக விளங்கியது இம் மதுரை.*

*உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப்பெரிய பாவம்.*

வம்மிச சேகர பாண்டியன் மதுரையை ஆண்ட காலத்தில், மதுரையின் எல்லையைக் கண்டுகொள்ள முடியாமல் சோமசுந்தரக் கடவுளை வேண்டுதல் செய்தான். இறைவன் ஆணைப்படி சிவனுக்கு அணிகலனாக இருந்த பாம்பு வளர்ந்து வட்ட வடிவமாகி தன் வாலை வாயினால் கௌவி மதுரையின் பழைய எல்லையைப் பாண்டியனுக்குக் காட்டியதால் இந்தத் திருத்தலத்திற்கு **"ஆலவாய்"** (திருவாலவாயான படலம்: 49) எனும் பெயர் உண்டாயிற்று. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் மதுரைக் கோவிலை **"கூடல் ஆலவாய்"** எனத் தனது தேவாரப் பதிகத்தில் வர்ணித்திருக்கிறார்.

திருவாலவாய் எனும் திருத்தலத்திற்கு இணையான ஸ்தலமும், இத்தலத்திலுள்ள பொற்றாமரைக் குளம் போன்ற ஒரு தீர்த்தமும், சுந்தரேஸ்வரப் பெருமான் போன்ற ஒரு மூர்த்தியும் எங்குமே இல்லை என்று புராணங்கள் புகழ்ந்துரைக்கின்றன.



மதுரைக் கோயிலானது ஆரம்ப காலத்தில் மரக்கட்டைகளால் கட்டப்பட்டு, பின்னர் செங்கற்களாலும் சுண்ணாம்புக் கலவையினாலும் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த மாற்றம் கி.பி. 7ஆம் நூற்றாண்டளவில் நடந்திருக்கிறது. இதே காலப்பகுதியிற்றான் பல்லவ மன்னர்கள் காஞ்சிபுரத்திலும், அதன் சுற்றுப் புறங்களிலும் கற்களால் கோயில் கட்ட ஆரம்பித்தனர். ஏறக்குறைய இதே காலத்தில் மூலஸ்தானத்தோடு கூடிய முதற் பிரகாரம் கட்டி முடிந்திருக்கிறது. இந்தப் பந்திக்கான குறிப்புகள் ஆலய வரலாற்றுக் குறிப்பிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு வருகைதரும் பக்தர்கள் முதலில் மீனாட்சி சந்நிதி வாசலினூடாகவே உள்ளே நுழைய வேண்டும். இந்த நுழைவு வாசல் **"அஷ்டசத்தி மண்டபம்"** எனப்படுகின்ற எட்டு சக்திகளின் மண்டபத்தை அடைகிறது. கௌமாரி-ரௌமாரி - வைணவி - மஹாலக்சுமி ஆகியவை இடதுபக்க நான்கு தூண்களிலும், யக்ஞரூபணி - சியாமளை - மஹேஸ்வரி - மனோன்மணி ஆகியவை வலப்புற நான்கு தூண்களிலுமாக பக்கத்திற்கு நான்காக எட்டு சக்திகளும் அழகிய சிற்பங்களாக இடம் பெற்றுள்ளார்கள். இவைகள் தவிர துவாரபாலகர்கள் இருவரும், பெரிய உருவச் சிலைகளாக கணபதி - முருகன் உருவச் சிலைகளும் உள்ளன. இம் மண்டபத்தில் அழகிய வர்ண ஓவியங்கள் யாவும் உண்டு.

அஷ்டசத்தி மண்டபத்தை அடுத்து மீனாட்சி நாயக்கர் மண்டபம் வருகிறது. இம் மண்டபத்தை தாங்கி நிற்கின்ற 110 தூண்களும் ஒரே மாதிரியான யாழியின் உருவம்


கீழ்ப்படியக் கற்றுக்கொள்; கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்தடையும்.

தாங்கியிருப்பதுடன், தூண்களின் அடிப்பாகங்கள் அழகான - நுட்பமான சிற்ப வேலைப்பாடு களையும் கொண்டிருக்கிறது. இம் மண்டபத்தின் மேற்காக 1008 எண்ணை விளக்குகளைக் கொண்ட 25 அடி உயர திருவாசி வளைவு காட்சி தருகிறது. மருதுபாண்டியர்களினால் அமைக்கப்பட்ட இத் திருவாசி, தற்போது அவர்களின் பரம்பரையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. திருவாசியின் மேல் விதானத்தில் 12 ராசிகளின் அமைப்பு சித்தரிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய பக்கங்கள் அனைத்தையும் வண்ணமயமான ஓவியங்கள் அலங்கரிக்கின்றன.

அடுத்துள்ள "இருட்டு மண்டபம்" எனப்படுகின்ற "முதலிப்பிள்ளை மண்டபம்" தாண்டி வழி நடந்தால் "பொற்றாமரைக் குளத்தினை" வந்தடைகிறோம். நேர்த்தியான படிக்கட்டுகளுடன் கூடிய சதுரவடிவமான பொற்றாமரைக் குளத்தின் வடக்குப் பக்க தூண்களில் சங்கப் புலவர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. திருக்குறள் நூலை இக்குளத்தில் சங்கப் பலகையில் இட்டு சங்கப் புலவர்கள் ஏற்றுக்கொண்டதாகவும் ஒரு வரலாறு தெரிவிக்கிறது. பொற்றாமரைக் குளத்தின் தென்புறச் சுவரில் சலவைக் கற்களில் 1330 குறள்களும் தெளிவான எழுத்தில் அழகுற எழுதப்பட்டுள்ளது. இக்குளம் கோயில் தோன்றிய காலத்திற்கும் முற்பட்டது என புராண வரலாறு கூறுகிறது. தடாகத்தைச் சுற்றிய தூண் மண்டபங்களிலிருந்து நான்கு கோபுரங்களையும் பார்க்கலாம்.

"நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" எனச் சிவனோடு வாது செய்த நக்கீரர், இறைவனின் நெற்றிக் கண்ணின் வெம்மை தாங்காமல் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்து வருந்தியபோது, தன் திருக்கரங்களை நீட்டி நக்கீரனைக் கரையேற்றியதுமான திருவிளையாடல் (கீரனைக் கரையேற்றிய படலம்: 53) இதே பொற்றாமரைக் குளத்திலேயே நடந்தது.

பொற்றாமரைத் தடாகத்தின் மேற்கு மண்டபத்தில் கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ள சிறிய மண்டபம் "ஊஞ்சல் மண்டபம்" எனப்படுகிறது. இம் மண்டபத்தின் மையத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஊஞ்சலில் ஒவ்வொரு வெள்ளியும் மீனாட்சி அம்பாளையும் சுந்தரேஸ்வரரையும் அமர்த்தி அழகு பார்ப்பர். ஊஞ்சலைச் சுற்றிலும்- கருங்கற் சுவர்களுக்கு மேலாகப் பொருத்தப் பட்டுள்ள கண்ணாடிகளில் பட்டுத் தெறிக்கும் மீனாட்சி- சுந்தரேஸ்வரரின் ஊஞ்சலாட்டம் பார்ப் போரைப் பரவசப்படுத்தும்.




ஊஞ்சல் மண்டபத்தின் எதிர்ப்புறத்தில் இணைந்த மண்டபத்தின் மேல் விதானத்தில் தீட்டப் பட்டுள்ள கடவுளர்களின் கண்கவர் ஓவியங்கள் அற்புதமானவை. இந்த அழகுமிகு ஓவியங்களின் மையத்தில் (மேல் விதானத்தில்) அளவான உருவமைப்பில் ஒரு சிவலிங்கம் வரையப்பட்டுள் ளது. கீறப்பட்டுள்ள சிவலிங்கத்தின் லிங்க பாணத் தின் கீழுள்ள ஆவுடையார் பாணத்தின் கோமயம் போன்ற பகுதி - நாம் எத்திசையில்

உற்சாகமாக இருப்பதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான அறிகுறி.

நின்று நோக்கினாலும் - நம்மை நோக்கியபடி இருப்பது அதிசயமாகவும் ஆச்சரியமாகவும் உள்ளது. ஓவியனின் கைவண்ணம் வியப்பில் ஆழ்த்துகிறது.

ஊஞ்சல் மண்டபத்தை அடுத்திருப்பது "கிளிக்கூண்டு மண்டபம்" ஆகும். ஸ்ரீ மீனாட்சி அம்பாளின் விருப்பப் பறவையான கிளிகளைக் கூண்டில் அடைத்து மண்டபத்தின் மேற்குக் கரையில் வைத்திருந்தார்களாம். அதனாலேயே "கிளிக்கூண்டு மண்டபம்" எனும் காரணப்பெயர் கொண்டு இம்மண்டபம் அழைக்கப் பட்டது. சமீப காலத்தில் இந்தக் கூண்டு அகற்றப்பட்டுவிட்டது. அந்த மண்டப விதானம் முழுவதும் தெய்வங்களின் பல்வேறு தோற்றங்களும் வண்ண ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.



கிளிக்கூண்டு மண்டபத்தின் மேற்கு வாசல் வழியாக மீனாட்சி அம்மையின் கர்ப்பக்கிரகத்தினுள் நுழைய முடிகிறது. அதன் நுழைவு வாசலில் உள்ள மூன்று அடுக்குக் கோபுரம் தாண்டிச் சென்றால் தங்கத் தகடுகளால் வேயப்பட்டுள்ள கொடி மரத்தைப் பார்க்கின்றோம். இந்த வெளிப்பிரகாரத்தின் மேற்குக் கோடியில் ஒரு "கொலு மண்டபம்" உள்ளது. நவராத்திரி நாளின் ஒன்பது நாட்களிலும் மீனாட்சி அம்மை கொலுவிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் மண்டபம் இந்தக் "கொலு மண்டபம்" ஆகும்.

இந்த மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் "கூடல் குமரன் கோயில்" உள்ளது. அருணகிரிநாதரால் இயற்றப்பட்ட திருப்புகழ் - சந்நிதியின் சுற்றுச் சுவர்களில் செதுக்கப் பட்டுள்ளன. அம்பாள் கோவிலின் வெளிப்பிரகாரத்தைச் சுற்றி வந்து உட்பிரகாரத்தினுள் நுழைகிறோம். உட்பிரகாரச் சுவர் முழுவதும் ஸ்ரீ குமரகுருபரரால் பாடப்பெற்ற "மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்" பாடல்கள் சலவைக் கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. மகா மண்டபத்தின் மேற்காக, கிழக்குப் பார்த்தபடி கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீ மீனாட்சியம்மை அழகு சொருபியாக அருள் பாலிக்கிறார். அம்பிகை மீனாட்சி கையில் கிளியுடன் செண்டு ஏந்தி - நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார். இந்தத் திவ்விய தரிசனமும் - அதனாற் கிடைக்கப் பெறும் மனநிறைவும் அம்பிகையை நேரில் தரிசித்தவர்களுக்கு அனுபவம் புரியும். சந்நிதி இரண்டு பிரகாரங்களைக் கொண்டது. இரண்டாம் பிரகாரத்தில் தங்கக் கொடிமரம், தில்லை நாயக்கர் மண்டபம் ஆகியவை உள்ளன. இந்தப் பிரகாரத்தில் உள்ள ஆறுகால் பீடத்திலேதான் குமரகுருபரரின் "மீனாட்சி பிள்ளைத்தமிழ்" அரங்கேற்றப்பட்டது. இந்த வழியாக மகா மண்டபத்தை அடையலாம். இதுவே முதற் பிரகாரம். இங்கேதான் பள்ளியறையும் உள்ளது.

(மாசிமாத இதழிலும் தொடரும்...

மிருக பலத்தால் அல்லாமல் ஆன்மிக பலத்தால் மட்டுமே எழுச்சிபெற முடியும்.

# மாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**05.02.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "பகவத்கீதை – மகாபாரத மகிமை"

வழங்குபவர் :- தத்துவகலாநிதி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீகாந்தகுருக்கள் அவர்கள்

[ஸ்ரீ வித்யா பீடம் – கிளிநொச்சி]

---

**12.02.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**19.02.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**26.02.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

மதிப்பீட்டுரை :- திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்

[முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணம்]

**218 ஆவது மலர்**

பதிவு இல. *QD/160/NEWS/2016*

**ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்**

